Registered as a News Paper

பக்கம் - 20+IV

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 வெள்ளி - 07 09 - 15 - ஏப்பிரல் - 2004



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 09 . 04 . 2004
மின் அஞ்சல : www.weekly@Eezhanatham.com

# தேர்தல் நிரூபித்த மக்களின் ஆணை

கடந்த 02-04-2004 அன்று நடந்து முடிந்துள்ள பதின்மூன்றாவது நாடாளுமன்ற பொதுத்தேர்தலுக்கான முடிவுகள் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும் -தெரிவுகளையும் - முடிவுகளையும் தெட்டத்தெளிவாக இனம் காட்டியுள்ளது.

தாயகம்-தேசியம்-சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இம்முறை தேர்தல் களத்தில், ஈழத்தமிழ் மக்களின் எழுச்சியின் வடிவமாகப் போட்டியிட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் வடக்கு கிழக்கில் 90 வீதமான வாக்குகளைப்பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளனர்.

அதன் மூலம் ஈழத்தமிழ் மக்கள் தமது தாயக கோட்பாட்டை மீண்டுமொருமுறை உலகின் முன் வலியுறுத்தியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்று, விடுதலைப்புலிகளே ஈழத்தமிழ் மக்களின் உண்மையான ஏகப்பிரதிநிதிகள் எனவும், விடுதலைப்புலிகளின் வழிகாட்டலே ஈழத்தமிழ் மக்களிற்கு உண்மையான விடுதலையைப்பெற்று தரும் எனவும், தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமது தேர்தல் பிரச்சாரத்திலும் கூறிய தமிழர் தேசிய கூட்டமைப்பை வெற்றிகொள்ள செய்ததன்மூலம் ஈழத்தமிழ் மக்கள் மீண்டுமொருமுறை தமது வரலாற்றுக்கடமையை செவ்வனே செய்து முடித்துள்ளனர்.

கடந்த மூன்று தசாப்தகாலமாக ஆயுத ரீதியாக போராடி, ஈழத்தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியை சர்வதேச அளவிலும் வளர்த்துவிட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுத ரீதியிலான போராட்டம் இதுவரை காலமும் சிங்கள அரசுகளாலும் சில சர்வதேச சக்திகளையும் பயங்கரவாதமாகவும், உள்நாட்டு முரண்பாடாகவும், 'ஒரு சாராரின் குரலாகவும்' காட்சிப்படுத்தப்பட்ட நிலை, கடந்த பொதுத்தேர்தலில், வடக்கு கிழக்கு மக்களின் தேர்தல் மூலமான தீர்மானகரமான வாக்களிப்புடன் செல்லுபடியற்றதாகிப்போனது.

இப்பொதுத்தேர்தலில், தமிழர் கூட்டமைப்பு முன்வைத்த அரசியல் கோரிக்கைகளில் முக்கியமானது. ஈழத்தமிழ் மக்களின் ஏக அரசியல் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் என்பதே. அத்துடன் மேலும், தமிழரின் இனப்பிரச்சினைத்தீர்வுக்கான அனைத்துப் பேச்சுவார்த்தைகளும், தீர்வு முயற்சிகளும் ஈழத்தமிழரில் உண்மையான பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளுடனேயே நடத்தப்படவேண்டும் என்பதுடன், தமிழீழ விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகார சபைப்பிரேரணைகளின் இருந்தே ஆட்சிக்கு வரும் எந்த அரசும் ஈழத்தமிழ் மக்களுடனான பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என்பதேமேயாகும்.

1977 இல் வடக்கு கிழக்கு மக்கள் தமது தேர்தல் மூலமான முடிவில், தமிழர் தாயகத்திற்காக வழங்கிய மக்கள் ஆணையை சிங்கள அரசுகள் பொருட்படுத்தவில்லை. அதன் விளைவே கடந்தகால்நூற்றாண்டுகால விடுதலை யுத்தமாக உருவெடுத்தது. அதுவே இன்றைய தமிழினத்தின் பலஎழுச்சியின் அடிநாதமாக திகழ்ந்தது. அந்த மக்கள் ஆணையை சிங்களம் ஏற்றுக்கொள்ளவும், அங்கீகரிக்கவும் தவறியதன் விளைவே, ஈழத்தமிழ் மக்களின் விடுதலை குறியீடாக, விடுதலைப்புலிகள் இயக்கத்தை சர்வதேச அளவுவரை வளர்த்தது. இன்று அந்த மாபெரும் சக்தியின் தார்மீக நியாயப்பாட்டை மீண்டுமொரு தேர்தல் வாயிலாக ஏகோபித்து ஈழத்தமிழ் மக்கள் சிங்களத்திற்கும் சர்வதேசத்திற்கும் உணர்த்திவிட்டுள்ளனர்.

இதேவேளை, சிங்களத்தில் நடைபெற்ற ஆட்சி மாற்றம், 'சமாதானத்திற்கான போர்' என கூறி ஈழத்தமிழ் மக்கள் மீது மாபெரும் இராணுவ அடக்கு முறைகளையும் அவலங்களையும் திணிக்கச்செய்த ஒரு அரசை மீண்டுமொருமுறை அரசமைக்கச்செய்துள்ளது.

மறுபுறத்தே,

தமது ஏகோபித்த ஆதரவுடன் தமது ஏக தலைமையின் கீழ் தமிழ்த்தரப்பு திரண்டுள்ளது. தமது மரபுத்தாயக கோட்பாட்டை ஆதரித்து ஈழத்தமிழினம் தனது தேசிய விடுதலைக்கான, தனது சுயநிர்ணயத்திற்கான தார்மீகஆதரவை வழங்கியுள்ளது.

இந்நிலையில், இலங்கைத்தீவில் இனமுரண்பாட்டை தீர்த்து அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான இறுதிச்சந்தர்ப்பமாக இன்றைய நிலை நோக்கப்படுகிறது. இதை சிங்களம் எவ்வாறு கையாளப்போகின்றது. இந்த அரிய வாய்ப்பை சிங்களம் பயன்படுத்தத் தவறுமிடத்து தமது விடுதலைநோக்கிய பயணத்தை, தமிழீழ தனியரசை நோக்கி இட்டுச்செல்வதை தவிர தமிழ்மக்களுக்கு தெரிவெதுவும் இருக்கப்போவதில்லை.

# முடிவுக்கு வந்த ஒரு போட்டி

சனாதிபதி சந்திரிகாவிற்கும் முன்னாள் பிரதமராகிப் போன ரணிலுக்கு மிடையிலான மோதல் இந்த தேர்தல் முடிவுகளோடு தற்காலிகமாக ஓய்வு நிலைக்கு வந்துள்ளது.

அதாவது இனி சந்திரிகாவிற்கும் ரணிலுக்கும் இடையிலான மோதல் முடிவுக்கு வந்தது என்பதைவிட ஒரு சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான மோதல் அல்லது நாடாளுமன்றஅரசிற்கும் நிறை வேற்று அதிகாரம் கொண்ட சனாதி பதிக் கிடையிலான அரசியல் அதி கார இழுபறிமுடிவிற்கு வந்துவிட்ட தெனலாம்.



இதன்மூலம் இலங்கையில் கடந்த இரண்டு வருடகாலமாக நிலவிய "கொகாபிற்றேசன்" என்று அழைக்கப்படும். இரு தலைவர் களும் ஒருநாடும் என்ற சர்ச்சை காரணமாக இந்த நாடு அனுபவித்த இன்னல் முடி விற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால் இந்த அரசியல் அதி கார இழுபறி முடிவிற்கு கொண்டு வரப் பட்ட போதும் இந்தநாடு அனுப விக்கும் துயரத்திற்கு முடிவு எட்டப்பட்டுவிடுமா என்பது தெளிவில்லை ஏனெனில் சனாதிபதி ஒரு கட்சியும் பிரதமரரும் அமைச்சரவையும் இன்னுமொருகட்சியுமாக இருந்தநிலை மாறியபோதும் அதிக ஆசனங்களை கைப்பற்றிய சனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான கூட்டுக்குள் ளும் முரண்பட்ட இரு கட்சிகள் என்ற நிலையே காணப்படுகின்றது.

இந்தநிலையில் இலங்கை மக்களுக்கு சமாதானமும் சுபீட்சமான வாழ்வும் எவ்வாறு கைவரப்போகிறது. அதிலும் ஒப்புக்குத்தானும் போலி முகமூடி அணிந்து. மேற்குலக நாடுகளை அனுசரித்துப்போகவிரும்பும் சந்திரிகாவின் நிலையில்இருந்து முற்றும் மாறுபட்ட மேற்குலகம் என்றாலே அலர்ஜிக்காக பார்க் கும் ஜே.வி.பியுடன் இணைந்து இலங்கை மக்களுக்கு எவ்வாறு விமோசனம் அளிக் கப்போகிறார்கள்

இந்தநிலையில் கடந்த இரண்டு வருடகாலமாக ரணிலின் இழுபறிக் காலத்தையும் இனிசந்திரிகா எதிர் கொள் ளப்போகும் காலத்தையும் பாாக்கப்படு வதாக பொறுத்தப்பாடுடையதாக இருக்கும்.


முன்னாள் பிரதமர் ரணிலின் தலைமை யிலான ஐக்கியதேசிய முன்னணி அரசு நாடாளுமன்றம் துலைந்போது இலங்கை யின் பொருளாதார இருப்புக்கள் எல்லாம் அதல பாதாளத்தில் இருந்தது. அத்தோடு இலங்கையின் பங்குச்சந்தை சுட்டெண் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் பணத்தின் பெறுமதி என எல்லாமே மறைச்சுட்டெண்ணையே காட்டிநின்றது. இத்தகைய ஒருநிலையிலேயே இலங்கை யின் அரசை ரணில் முழுவளர்ச்சியற்ற ஒருகுழந்தையைப் போல இலங்கையை பொறுப்பேற்றார். அந்தநிலையில் ரணில் தன்னையும் தன் கட்சியையும் நிலை நிறுத்திக்கொள்ள வேண்டிய தேட்டங்களை தேடிக்கொள்வதற்கான முதலீடாக சமாதானம் அவசியமாகியது. அவரது இரண்டுவருடகால சமாதான முதலீடு இலங்கையின் உள்ளாசத்துறை வருமா னத்தையும் சுமார் ஆறுசதவீத பொருளா தார வளர்ச்சி வீதத்தையும் பெருமளவு அன்னிய முதலீடுகளும் என இலங்கையின் பொருளாதாரத்தை ஒரு ஏறுமுகத்திற்கு கொண்டுவந்து ஒருநிலைப் படுத்தியபோது சந்திரிகாவின் திடீர் நாடாளுமன்ற தேர்தல் மூலம் ரணிலின் கனவுகள் கலைக் கப்பட்டுவிட்டது.

இப்போது சமாதானத்தையும் மக்கள் சமாதானமாக ரணில் உருவாக்குவதற்குப் பதிலாக அரச சமாதானமாக உருவாக்க முயன்றதன் விளைவு அரச சமாதானத் தின் கனிகள் மக்களை நேரடியாக எட்டாது விட்டமை என்பதன் பலன்ன அனு பவிக்கவேண்டி தாயிற்று.

அதாவது அரச மாதானம் என்பது ரணி லின் அரசை பாதுகாக்கவும் சமாதானத்தின் பங்காளிகளான புலிகளை பல வீனமாக்க அல்லது ஒரு நெருக் கடிக் குள் தள்ளவென அவர் கூறிய பாதுகாப்பு வலைப் பின்னல் எவையும் மக்க ளைக் கவரவில்லை. பதி லாக இவர்இந்த இரண்டு வருட காலத்துக்குள் டோக்கியோவில் வாக்க ளிக்கப்பட்டுள்ள 4.5 பில்லியன் மற்றும் தற்போதைய இலங்கையின் பொருளாதார இருப்பென்பவற்றை தனது எதிரியான சந்திரிகாவிடம் தாரைவார்த்துக் கொடுத்து விட்டு செல்லவேண்டி நிலைக்கு தள்ளி விட்டது.

இனி சந்திரிகா ரணிலின் சமாதான முதலீட்டின் பலனாக கனிந்த லாபங்களை வைத்து தன்னைப்பலப்படுத்தக் கூடும் இது ரணிலுக்கு எதிர்வரும் காலங்களை மேலும் சோதனைக்குட்படுத்த முடியும் இதன்மூலம் ரணிலின் ஆட்சிக்கனவை அதிக தூரத்திற்கு சந்திரிகாவால் தள்ளிவைக்கக் கூடும் ஆனால் இவை யாவற்றையும் ஒரு குறிப் பிட்ட அளவுக்கு அப்பால் தள்ளிவைக்க முடியாத அளவிற்கு தமிழரின்பிரச்சினை இன்று சர்வதேசமயமாகிவிட்டது. இதனைச் சந்திரிகாவும் நன்றாகவே அறிந்து வைத் துள்ளார். ரணிலின் நலுவல்ப்போக்கு அதா வது காலை வாரிவிட்டது இதனால் லாபம் அடையப்போவது சந்திரிகாவே.

சிறி.இ.



சுதந்திரம், பிறர் வழங்கும் சிறப்புரிமை மட்டுமல்ல;நாமே பயின்று போற்றும் பழக்கம்.

# சந்திரிகாவால் சமாதானம் செய்யமுடியுமா?

நிலாந்தன்



கடந்த இரு தசாப்த காலத்துள் நடந்த எல்லாத் தேர்தல்களிலும் தேர்தல் முடிந்த கையோடு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படாத ஒரேதேர்தல் நடந்து முடிந்த தேர்தல்தான்.

யுத்த காலங்களில் தேர்தல் என்றாலே வாக்குகளுக்குப்பதிலாகக் குண்டுகள்தான் எண்ணப்படும். அல்லது பிணங்கள் எண்ணப்படும். ஆனால் இம்முறை அப்படி எதுவும் நடக்கவில்லை.

இதற்குக் காரணம் சிங்கள அரசியல்வாதிகள் திடீரென்று கூர்ப்படைந்து விட்டார்கள் என்பதோ அல்லது அவர்களுடைய அபிமானிகள் திடீரென்று மனந்திருந்தி விட்டார்கள் என்பதோ அல்ல.

மாறாக நிலவும் யுத்த நிறுத்தத்தின் விளைவே இது. ஒரு விதத்தில் இந்தத்தேர்தலே யுத்த நிறுத்தத்தின் விளைவுதான். எவ்வாறெனில், யுத்தநிறுத்தத்தைக் கொண்டுவந்து ரணில் விக்கிரமசிங்க புலிகளுக்குச் சலுகைகள்செய்துவிட்டார் என்று குற்றம் சாட்டியே அவருடைய அரசாங்கம் கலைக்கப்பட்டது. அதன் விளைவே இந்தத் தேர்தல்.

அதேசமயம் யுத்த நிறுத்தம் நீடித்திருப்பதால்த்தான். இத்தேர்தலை மிகவும் அமைதியாகவும், ஆறுதலாகவும், பயமின்றியும் நடாத்த முடிந்திருக்கிறது.

இது ஒன்றைக்காட்டுகிறது. தமிழர்களுக்கு அமைதி இல்லை என்றால் சிங்களவர்களுக்கும் அமைதி இல்லை. தமிழர்களுக்கு நிம்மதி இல்லை என்றால் சிங்களவர்களும் நிம்மதியாக இருக்க முடியாது.

ஆனால் இந்தத் தவிர்க்கப்படவியலாத யதார்த்தம், நடந்து முடிந்த பொதுத்தேர் தல் முடிவுகளில் பிரதிபலிக்கப்படவில்லை என்பதே இங்குள்ள பயங்கரம்.

அதிகமதிகம் இனமுரண்பாடுகளை மிகக்கூர்மையாக வெளிப்படுத்திய ஒரு தேர்தல் இது.

தமிழர்கள் எதற்காக வாக்களித்தார்களோ பெருமளவிற்கு அதற்கெதிராகவே சிங்களவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். முஸ்லிம்களைப்பொறுத்தவரை அவர்கள் தமக்கேயான நலன்களை முதன்மைப்படுத்தி வாக்களித்திருக்கிறார்கள். இதைச்சற்று விரிவாகப் பார்ப்போம்.

தமிழர்கள் தமது போராட்ட இலக்குகளுக்காகவும், அவற்றை அடைவதற்கான ஒரு ஊடகம் என்ற வகையில் சமாதானத்துக்காகவும் வாக்களித்திருக்கிறார்கள்.

வடக்குக் கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழர்கள் பெருமளவிற்கு ரணிலுக்கு வாக்களித்தது என்பது அவர் சமாதானத்தின் பக்கம் நிற்பதால்த்தான். முஸ்லிம்கள் ரணிலை ஆதரித்திருப்பது என்பது ஒரு வர்த்தக சமூகம் என்ற வகையில்சமாதானத்தின் நன்மைகளை அனுபவிப்பதற்காகத்தான்.

ஆனால் சிங்களவர் களோவெனில், ரணிலுடைய சமாதான முயற்சிகளை நிராகரித்திருக்கிறார்கள். யுத்த நிறுத்தத்தைக்கொண்டு வந்து அவர் புலிகளுக்கு ரகசியமாக எதையோ கொடுத்துவிட்டார் என்று சந்திரிகா கிளப்பிய ஐயங்களையும், பயங்களையும் அப்படியே விழுங்கி ரணிலைத் தோற்கடித்துவிட்டார்கள்.

ரணிலுக்குக்கிடைத்த தோல்வி எனப்படுவது அவர் செய்த சமாதானத்துக்குக்கிடைத்த தோல்வியும்தான்.

ரணிலை அவர்கள் தோற்கடித்ததைவிடவும் பயங்கரமான மற்றொரு விசயம் ஹெல உறுமயவுக்கு அவர்கள் கொடுத்த வெற்றிதான். இது இரண்டு பிரதான கட்சிகளின் மீதும் அவர்கள் சலிப்புற்றதின் விளைவாகவும் இருக்கலாம். ஆனால் இப்பத்தியில் சிலவாரங்களுக்கு முன்பு கூறப்பட்டதைப்போல அதிதீவிர, மதவாதசக்திகள் மூன்றாவது அணியாக எழுச்சிபெற்றுவிட்டன.

இத்தகைய சக்திகள் பேரம் பேசும் பலத்தோடு நாடாளு மன்றத்துக்கு வந்திருப்பது என்பது சமாதானத்தின் வழியில் தோன்றியிருக்கும். ஒரு புதிய துர்க்குறியே.



எனவே, தேர்தல் முடிவுகளின்படி நாம் பின்வரும் ஏதோ ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

முதலாவது, கடந்த இரு தசாப்தகால யுத்தத்திலிருந்து பெரும்பாலான சிங்கள வெகுசனம் எத்தகைய ஒரு பாடத்தையும் கற்றிருக்கவில்லை என்பது.

இரண்டாவது, அவர்களுக்கு மறதிமிக அதிகம் என்பது.

மூன்றாவது, பௌத்தத்தை மிகவும் தவறாகப்புரிந்து வைத்திருப்பதைப்போல சமாதானத்தையும் மிகத்தவறாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பது.

நாலாவது, அவர்கள் மிக மோசமாகக் குழம்பிப்போய் இருக்கிறார்கள் என்பது.

இதில் எது சரி? ஒவ்வொன்றும் அதற்கேயுரிய விகிதங்களில் சரிதான். இப்பத்தியில் ஏற்கெனவே கூறப்பட்டபடி சிங்கள வெகுசனத்தை மிகவும் குழப்பிய ஒரு தேர்தல் இது. ஒருபுறம் அவர்கள் ரணிலைத் தோற்கடித்திருக்கிறார்கள். இன்னொருபுறம் அவர்கள் சந்திரிகாவுக்கும் பெருவெற்றியை கொடுக்கவில்லை. அதேசமயம் இரண்டு பெருங்கட்சிகளுக்கு வெளியே ஒரு மூன்றாவது அணியை அவர்கள் தேடியிருக்கிறார்கள்.

கொழும்பில் இருக்கும். அரசியல் ஆய்வாளர் றொகான் எதிரிசிங்க கூறுகிறார்; ரணில் விக்கிரமசிங்கவிற்கு - Charisma - ஜனவசியம் குறைவு என்று. இவைதவிர, நகர்ப்புறச்சிங்களப் பெருமுதலாளிகளைத் திருப்திப்படுத்திய அளவுக்கு நாட்டுப் புறச்சிங்களவர்களையும், சிறு முதலாளிகளையும் குறிப்பாக விவசாயிகளையும் அவர் திருப்திப்படுத்தத்தவறிவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

ரணிலைவிடவும் சந்திரிகா ஜனவசியம் மிக்கவர் என்று றொகான் எதிரிசிங்க கூறுகிறார். சந்திரிகாவைப் போலன்றி ரணில் அமைதியானவர், பெரிய பெரிய இலட்சியங்களைக் கதைப்பதில்லை. அதோடு சாதாரண சனங்களை நெருங்கிச்சென்று உறவாட முடியாதவர் என்றும் அவர் கூறுகிறார்.

மெய்தான், ரணிலுடைய துருத்திக்கொண்டு தெரியாத, காட்டுணிஸ்ட்களுக்கு சோதனையாக அமைந்துவிட்ட மிகச்சாதாரண முகம். மற்றும் கவர்ச்சியும் மிடுக்கும் குறைந்த குரல், நடை உடை பாவனை போன்றவற்றை வைத்துக் கூறுமிடத்து றொகான் எதிரிசிங்க நம்புவதுபோல ரணில் விக்கிரமசிங்க ஜன வசியம் குறைந்தவராக இருக்கலாம்தான்.

சந்திரிகாவைப் போல பொய் சொல்லவோ அல்லது குழம்பிக்கதைக்கவோ அல்லது தருணம் மறிந்து மன்னிப்புக் கேட்கவோ அல்லது கிராமிய வளக்கில் சொன்னால், மாய்மாலம் கொட்டவோ ரணிலால் முடியாதுதான். ஆனால் ரணிலின் மிகப்பெரிய கவர்ச்சி அவருடைய கண்ணுமல்ல, மூக்குமல்ல, குரலுமல்ல, நடையுமல்ல மாறாக அவர் சமாதானத்தின் நண்பனாகத் தோன்றியதுதான். என்பதனாலேயே தனக்கு வெற்றி நிச்சயம் என்று அவர் நம்பினார். இப்பத்தியிலும் கூட முன்பு சில தடவைகள் சமாதானத்தின் பெயரால் ரணில் வெல்லக்கூடும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் சிங்கள வெகுசனங்களின் தீர்ப்போ வேறு விதமாய் அமைந்துவிட்டது. ஆயின் எங்கே பிசகியது?

முதலாவதாக ஒன்றைச் சொல்லவேண்டும் ரணில் சமாதானத்தின் நண்பன் போலத்தோன்றினவரே தவிர, அவரும் கூட மெய்யாகவே சமாதானத்துக்கு விசுவாசமாயிருக்கவில்லை.

அவர் சமாதானத்தை வர்த்தகமயப்படுத்துவதில் காட்டியளவு அக்கறையை சமாதானத்தை மக்கள் மயப்படுத்துவதில் காட்டியிருக்கவில்லை.

சுமார் இருதசாப்த காலமாக யுத்தம் மக்கள் மயப் பட்டுவரும் ஒரு நாட்டில் இரண்டே இரண்டு ஆண்டுகளில் சமாதானத்தை மக்கள் மயப்படுத்துவது என்பது யாரும் மந்திரவாதிகளால்த்தான் முடியும்.

ஆயினும் அப்படிச் சமாதானத்தை மக்கள் மயப்படுத்தும் திட்டம் எதுவும் ரணிலிடம் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் அவர் சமாதானத்துக்கு விசுவாசமாக இருந்ததைவிடவும் தனது மேற்கத்தைய எஜமானர்களுக்கும், தனது கட்சியின் பிரகாசமான எதிர்காலத்துக்கும் குறிப்பாக தனது தனிப்பட்ட எழுச்சிக்குமே விசுவாசமாகக் காணப்பட்டார்.

மேலும் இரண்டாண்டுகளுக்குப் பேச்சு வார்த்தைகளை இழுத்திழுத்துக்கொண்டுவந்து முடிவில் சமாதானத்தின் பெயரால் சனாதிபதியாகும் ஒருகனவே அவரிடம் இருந்தது. அவரைப் பொறுத்தவரை சமாதானம் எனப்படுவது அதிகபட்சம், எதிர்காலத்தில் சனாதிபதியாக வருவதற்குரிய ஓர் ஏணியே. எனவே விசுவாசம் இன்றி சமாதானம் செய்த அவருடைய அரசாங்கத்தால் அதை மக்கள் மயப்படுத்தமுடியாமற்போனது தவிர்க்க முடியாததே.

இப்பொழுது அவர் தமது தோல்விகளுக்கு தனது கட்சியின் ஊடகப்பிரிவைக் குறைகூறுகிறார். 96 கோடி ரூபாய் செலவழித்து S.L.F.E. மீதும், J.V.P. மீதும் சேறு பூசுவதில் காட்டப்பட்டுள்ள தீவிரம் கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதற்குக் காட்டப்படவில்லை என்று இப்பொழுது கூறப்படுகிறது.

அதாவது, அவர்களிடம் சமாதானத்தை வெகுசன மயப்படுத்தும் நடைமுறைச் சாத்தியமான திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை. இதை இன்னும் திருத்தமாகச் சொன்னால் சமாதானத்தைக் குறித்த தரிசனம் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை. யுத்தத்தை ஒத்திவைப் பதைத்தான் அவர்கள் சமாதானம் என்றுகாட்டவிரும்பினார்கள் போலும்.

எனவே சமாதானத்தை நோக்கி சனங்களை வசியம் செய்ய அவர்களால் முடியாது போயிற்று. இதனால் சந்திரிகா - J.V.P கூட்டு சனங்களை வெற்றிகரமாகக் குழப்ப முடிந்தது. இதன் விளைவே ரணிலுக்குக்கிடைத்த தோல்வி.

இப்பொழுது சமாதானம் சந்திரிகாவின்கையில். எதைச் சாட்டாக வைத்து ரணிலின் ஆட்சியைக் கவிழ்த்தாரோ அதை - சமாதானத்தை - அவர் இப்பொழுது பொறுப்பெடுக்கவேண்டிய ஒரு நிலை. உண்மையில் அவர் எதிர்த்தது ரணிலைப்பலப்படுத்தும் ஒரு சமாதானத்தையே. எனவே இனி அவர் தன்னைப்பலப்படுத்தும் ஒரு சமாதானத்துக்கு வரக்கூடும்.

ஒரு ஸ்திரமான ஆட்சியை உருவாக்கமுடியுமானால் அவர் சமாதானத்துக்கு வரக்கூடும் அல்லது ஒரு ஸ்திரமான ஆட்சியை உருவாக்குவதற்காகவும் அவர் சமாதானத்துக்கு வரக்கூடும். அப்படிவந்தால் சில சமயம் ரணிலைவிடவும் ஸ்திரமாக அவரால் சமாதானம் செய்யக் கூடியதாக இருக்கும். ஏனெனில் கொழும்பில் இப்பொழுது ஒரு அதிகாரமையம் தான் இருக்கிறது. அதோடு ரணில், சமாதானத்தின் வழியில் குறுக்கேநிற்கும் வாய்ப்புக்களும் குறைவு. ஏனெனில் அவர் சமாதானத்தை வாக்களித்தே தேர்தலில் நின்றார்.

ஆனாலும் வெற்றிகரமாகச் சமாதானம் செய்வதென்றால் சந்திரிகா உடனடியாக இரண்டு தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும்.

முதலாவது, புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வது. அதாவது நடந்துமுடிந்த தேர்தலில் தமிழர்கள் வழங்கிய தீர்ப்பை மதித்து நடப்பது. இதிலும் குறிப்பாக புலிகளின் உட்கட்சிப் பூசலில் தலையிடாதிருப்பது.

மற்றது, J.V.P. யையும் கூட்டாளியாக வைத்துக்கொண்டு அமெரிக்காவை நெருங்கிச்செல்வது.

இந்த இரண்டையும் அவர் செய்யமாட்டார் என்பதற் கில்லை. ஏனெனில் தனது கணவரைக் கொன்ற J.V.P.யுடன் அவர் கூட்டுச் சேரமுடியு மென்றால், புலிகளுடன் சமாதானம் செய்யமுடியாதென்றில்லை. அல்லது அமெரிக்காவை நெருங்கிவர முடியாதென்றுமில்லை.

அவரைப்பலப்படுத்தும் ஒரு சமாதானத்துக்காக அவர் எதையும் செய்வார். யாரோடும் கூட்டுச்சேர்வார். சில சமயம் அந்தச் சமாதானத்துக்காக முன்பு ஒருமுறை செய்தது போல யுத்தமும் செய்யக்கூடிய ஆள் அவர்.

உன்னைவிட அதிகம் துன்பப்படுபவன் உலகில் எப்பொழுதும் இருப்பான். - ஈஸாப்

# நறுக்கென...

## சங்கரியாரே... இது உங்களுக்காக...



சங்கரியார் கனவுகூடக் கண்டிருக்கமாட்டார். தமிழ் மக்கள் வாய்ப்பூட்டு, கைப்பூட்டு மட்டுமல்ல, வீட்டைவிட்டே ஓடஓட விரட்டிப் பூட்டுப்போடுவார்கள் என்று.

கோடிகோடியாக கொட்டிகோவணாண்டி ஆனது தான் மிச்சம். இப்ப எங்கையோ ஒரு கோடிக்குள் நின்று புலம்பவேண்டியதாப் போயிற்றே....தந்தைசெல்வாவின் வாரிசு என்று தம்பட்டம் அடித்தும், தான்தோன்றித் தலைவனாகத் தன்னைப்பிரகடனம் செய்தபோதும் தமிழ் மக்கள் அவர்பட்டத்தை துரோகியாக மாற்றிவிடுவர் என்று கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்.

கூடாத கூட்டத்தின் பேச்சைக்கேட்டு பேசாதபேச்செல்லாம் பேசி ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி "இப்போ ஆடியடங்கும் வாழ்க்கையடா" என்று அலம்ப வேண்டிய நிலைக்கெல்லே ஆளாகிவிட்டார்.

சுயேட்சையாகி, சுயஇச்சசைப்படி நடந்தபோதே தமிழர்கள் சங்கரியாரின் சங்கதி என்னவென்று புரிந்துகொண்டார்கள்.

வன்னிவாழ் மக்களின் சிலருக்குக் கடிதமும் பணமும் அனுப்பி நலம்விசாரித்து வாக்குக்கேட்ட வரலாற்று சாதனையைப் படைத்த சங்கரியார் இறந்தவர்களுக்கூட பணம் அனுப்பிய பாசத்தை என்னென்று பகர்வது.

சரிபோகட்டும்

இனியென்ன செய்யப்போகிறார் சங்கரியார்.

இனியும் சொந்த இனத்திற்கும் சொந்த மண்ணுக்கும் தொடர்ந்தும் துரோகம் செய்யப்போகிறாரா?

பதவிக்கும் சுயநலத்திற்கும் ஆசைப்பட்டு பேரினவாத சக்திகளுக்கும் அந்நிய மேலாதிக்க வாதிகளுக்கும் எடுபிடியாகி தொடர்ந்தும் சொந்த இடத்திற்குத் துரோகம் செய்யப்போகிறாரா?

சங்கரியாரே நீங்கள் யார் என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள் என்பது மட்டுமல்ல, தேர்தலில் உங்களுக்கு உணர்த்தியும் விட்டார்கள் என்பதாவது உங்களுக்குப் புரிகிறதா?

நீங்கள் கெட்டது மட்டமல்லாமல். உங்களோடு மேலும் 11பேருக்கும் உங்களுக்கு வக்களித்தோருக்கும் நீங்கள் விலாசம் இல்லாமல் செய்துவிட்டீர்களே...! இது நியாயமா.

இப்போதைய அரசும் பலவீனமான அரசுதான்... எந்த நேரமும், கவிழக்கூடும்.

விரைவிலே மற்றொரு தேர்தலும் வரக்கூடும் அப்போது மீண்டும் தேர்லில் போட்யிட வருவீர்களா சங்கரியாரே?

சூடுகண்டபூனை அடுப்பங்கரையை நாடாதாம்.!

நீங்கள் .......?

...ன் என்ன சொல்வது. தீர்மானிப்பது அவர்கள்., செயற்படுவது நான். ஆட்டிவைத்தால் யாரொருவர் ஆடாதரே கண்ணா....? என்று நீங்கள் முணுமுணுப்பது தெரிகிறது....

பேசாமல் சங்கரா.... சிவசிவ.... என்று கூறிக்கொண்டு ஆனந்தமாக இருக்க ஆசைவிட்டாத்தானே....!

## கதிர்காமரும்... பிரதமர் பதவிக்கனவும்



கடையிலே கதிர்காமரின் காலையும் வாரிவிட்டார் சந்திரிகா. ஆசைகாட்டி மோசம் செய்துவிட்டார்.

எத்தனைகாலமாக பிரதமர் கதிரைக் கனவில் தனக்குள்ளேயே தான் மிதந்திருப்பார்.

அதற்காக எவ்வளவு பவ்வியமாகவும், விசுவாசமாகவும் சனாதிபதியிடம் அவர் நடந்துகொண்டிருப்பார்....

அதற்காக எவ்வளவு அவமானங்களை, இனத்துரோகி என்ற தூற்றல்களை அவர் சகித்துக்கொண்டிருப்பார். (சகித்திருப்பார் என்பது சரியல்ல... அது அவருக்கு எருமையில் சேறுபட்ட மாதிரித்தான்.)

வெளியுறவு அமைச்சராக விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்திற்கும் எதிரான சர்வதேசப்பிரசார பீரங்கியாக சமாதானத்திற்கெதிரான சனாதிபதியின் பேச்சாளராக, அவரை வெளியுறவு ஆலோசகராக....

எத்தனை வேடங்களை கச்சிதமாகத் தாங்கி அம்மணி மெச்சும்படி செயற்பட்டிருப்பார்.

ஒன்றைக்கூட சந்திரிகா நினைக்கவில்லையே.... கடைசியில் அம்மணியால் அமைச்சரவை இரகசியங்களை வெளிவிடும் உளறுவாயர் என்று வெளிப்படையாக வர்ணிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ பிரதமராகிவிட்டார். இல்லை.... இல்லை அம்மணியே அப்பதவியை அவருக்கு வழங்கிவிட்டார்.

கதிர்காமர் வெளியே சிரித்தாலும் உள்ளே நெஞ்சாரப் புழுங்கியிருப்பார் என்பதில் சந்தேகமேயில்லை.

இலங்கையின் முதலாவது தமிழ் பிரதமர் என்ற கௌரவத்தை ஆசைகாட்டி பறித்துவிட்டார்களே....!

பதவியேற்பு முடிந்ததும் 'அசடுமாதிரி' அங்கேநின்ற கதிர்காமரை கட்டித்தழுவி மகிந்தராஜபக்ஷ சிரித்தாரே ஒரு சிரிப்பு....

'சி.... உனக்கும் பிரதமர் கதிரையில் இருக்க ஆசையா... என்று நக்கலாய் கேட்காமல் கேட்பதுபோல் இருந்தது அந்தச்சிரிப்பு.

சரி.... விடுங்கள் அதிகாரமற்ற ஒரு 'றப்பர் ஸ்ராம்' பதவியைக்கூட 'தமிழர் என்பதால் உங்களுக்குத் தர சிங்கள அரசு விரும்பவில்லை என்பதாவது உங்களுக்குப் புரிகிறதா கதிர்மாமரே....!

இல்லை அம்மணி இன்னொரு பதவி தருவார் என்று காத்திருக்கிறீர்களா? பதவி பதர் கதிர்காமர் என்ற பட்டத்தைவிட தயாரில்லை அப்படித்தானே....!

என்னடா தமிழினத்திற்கு வந்த சோதனை....!

கடைசிக்காலத்திலாவது கடந்தகாலத் தவறுகளை உணர்ந்து திருந்தலாமே!

இனி அந்தக் கதிர்காமத்தான் இந்தக் கதிர்காமரைக்காக்கவேண்டும்.

## ஒட்டகத்திற்கு இடம்கொடுத்த சனாதிபதி



ஒட்டகத்திற்கு கூடாரத்தினுள் ஒதுங்க இடம்கொடுத்தகதை தெரியுமா?

தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டுப்பாருங்கள் தெரியும்..

சந்திரிகா தனது கூடாரத்தினுள் அதாவது தனது பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் ஜே.வி.பி.க்கு (ஒட்டகத்திற்கு) இடம்கொடுத்து தனது கருணையை வெளிப்படுத்த முயன்றார்.

அதாவது தனது கணவனைக்கொன்ற ஒட்டகத்தின்மேல் ஏறி தனது நெருக்கடிக்காலப் பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டார். பயணம் முடிந்ததும் அதாவது பாலைவனத்தை (அரசியல் நெருக்கடியை) தாண்டியதும் ஒட்டகத்தை (கைகழுவி) விடலாம் என்றும் நினைத்தார்.

முதலில் பாலைவனப் குளிரிலிருந்து தன்னைப் பாதுகாக்க நினைத்த ஒட்டகம் தனது தலையை மட்டும் கூடாரத்தினுள் விட்டுக்கொள்ள இடம்கேட்டது. கொஞ்ச நேரம் கழித்து முன்னங்கால்களுடன் உடம்பின் ஒரு பகுதியை நுழைத்து க்கொள்ள இடம்கேட்டது.

பிறகு முதுகுப்பகுதியை....

அதன் பின்னர் பின்பகுதியை எனத் தொடர...

கடைசியில் ஒட்டகம் கேட்டது கூடாரக்காரரே வெளியே போய் நில்லுங்கள் நான் முழுமையாகக் குளிரிலிருந்து என்னைப் பாதுகாக்கவேண்டும் என்றதாம். அதன்பிறகுதான் கூடாரக்காரர் முழுசத்தொடங்கினாராம்.

ஐ.தே.முன்னணியை வீழ்த்த ஜே.வி.பியை கூட்டு சேர்த்தார் சந்திரிகா. அவர்கள் ஆட்சியைக்கலைக்கச் சொன்னார்கள். இவர் கலைத்தார். தேர்தலில் குறிப்பிட்ட அளவு தொகுதிகள் தமக்கு வேண்டும் என்றார்கள். இவர் கொடுத்தார்.

தேர்தலுக்கு முன்னரே தமக்கு இத்தனை அமைச்சுக்களைத் தரவேண்டும் என்றார்கள்.- இவர் சம்மதித்தார்.

இப்போது தேர்தல் முடிவில் பார்த்தால் அவர்கள் இவரது இடங்களில் பெரும்பாலானவற்றைக் கைப்பற்றிக்கொண்டார்கள்.

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்குக்கிடைத்த மொத்த இடங்களில் முன்றிலொரு பங்கு ஜே.வி.பி.க்குக் கிடைத்துவிடவே அமைச்சரவை இடங்களுக்கான பேரத்தை அதிகப்படுத்தி வருகிறார்களாம்...

என்னசெய்வது?

ஒட்டகத்திற்கு இடம்கொடுத்தால் கூடாரத்தைவிட்டே போக நேரிடும் என்பதையும் தெரிந்திருக்கவேண்டும்.

நடக்கப்போவது சந்திரிகா அரசா? ஜே.வி.பி. அரசா? என்பது சில வாரங்களில் அல்லது மாதங்களில் தெரியும்.

பாவம் சந்திரிகா...!

## பேய்+சாத்தான் கதையும் – ஒரு செய்தியும்



சாத்தானைப புகழந்து பாராட்டியதாம்பேய்.... என்ன யோசிக்கிறீர்கள்? பேய் ஏவுவதையெல்லாம் சிரமேற் கொண்டுமுடிக்க சாத்தான் ஒன்று தயாராக இருந்ததாம். பேய்க்கேற்பட்ட சந்தோசத்திற்கு அளவேயில்லை. கொஞ்சக்காலத்திற்கு முன் இதேபேய் இதே சாத்தானை தனக்கு மோசமான தொந்தரவை ஏற்படுத்தும் பிசாசாகவே கருதியதும் உண்டு. இந்த சாத்தானை அப்போது கண்ட இடத்தில் கடித்துக்குதறுமாறு குட்டிப்பேய்களுக்கு ஆணையிட்டதும் உண்டு. அப்படி செய்யமுற்பட்ட குட்டிப்பேய்களை இந்த சாத்தான் உயிரோடுவிட்டதுமில்லை. அப்போதெல்லாம் இந்த சாத்தான் தன்னை ஒரு சாத்தானாக இனங்காட்டிக்கொண்டதேயில்லை. ஒரு கருணைமிக்க காவலனாக தன்னை வெளிப்படுத்திக்கொண்ட சாத்தானின் உள்நோக்கம் அசிங்கமான-குரூரமான, நம்பிக்கைத்துரோகத்தை அடிப்படையாகக்கொண்டிருந்ததை அதனை நம்பிய எவராலுமே ஏன் அதற்குக்கிடைத்த பெருமைக்கெல்லாம் காரணமாக தேவனாலுமே கண்டுகொள்ளமுடியவில்லை.

யேசுநாதரின் சீடர்களுள்தானே யூதாஸூம் இருந்தான். யூலியஸ் ஸீஸரின் நம்பிக்கைக்குரிய ஒருவனாகத்தானே புடுட்டஸூம் இருந்தான். எனவே தேவனில் அணியில் இந்தக்காவலன் வேசமிட்ட சாத்தானும் இருந்தது வியப்பில்லை.

தேவனுக்கு காவலன் மீதான சந்தேகம் ஏற்படுவதாக அறிந்தவுடனேயே காவலன் வேசத்தைக் கலைத்து அதுதன் சாத்தான் தனத்தை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது. எல்லோரும் அதிர்ந்துபோயினர்.

அப்போதுதான் பேய்க்குத் தெரிந்தது அது தனக்குவிசுவாசமாகப் பணியாற்றக்கூடிய, தனது பொறிக்குள் சுலபமாக வீழ்த்தக்கூடிய சாத்தான் தான் என்றவிசயம்.

தேவனால் தனக்கு ஆபத்துஏற்படலாம் எனக் கருதிய சாத்தான் பேயின் உதவியை நாடி அதற்கு அடிமையாகச் செயற்படும் தனது விருப்பார்வத்தை வெளிப்படுத்தியது. பேய்க்கோ தாங்கமுடியாத சந்தோசம்.

தேவனதும் அவனது மக்களதும் வலிமையைச் சிதைக்க சாத்தானைப் பயன்படுத்தலாம் என்று யோசனையிட்டது.

சாத்தானைத் தேவனின் நிலைக்கு உயர்த்திப்புகழ்ந்தால்அல்லது திருந்திய ஞானம்பெற்ற சாத்தானாக போற்றினால் அதனை தம் வசமாக்கலாம் என்பதில் பேய்க்குச் சந்தோசம். உடனே சாத்தான் புகழ்பாடத்தொடங்கியது.

..........

ஒரு செய்தி:

சிறிலங்காவின் இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்லே மட்டக்களப்பை சேர்ந்த கருணாவை மிகவும் பண்பானவர், ஒழுக்கமானவர், தீயசெயல்களைத் துறந்தவர், வரிஅறவிடாதவர், கொலைசெய்யாதவர், ஆட்கடத்தல் செய்யாதவர்.... எனப் புகழந்துபாராட்டியுள்ளர்.

........

பேய் சாத்தானைப் புகழ்ந்த கதைஇதுதான்.

**செங்குட்டுவன்**

# இந்த நூற்றாண்டின் புலிகளுக்கான வெற்றி

நடந்து முடிந்த இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளினுடாக தமிழ் மக்களின் தீர்ப்பு சர்வஉலகிற்கும் தெளிவுற வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை.

இந்த நிரூபிக்கப்பட்ட உண்மைகள் எவை என்பதை இந்த பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் நோக்குவது அவசியம்.

ஏனென்றால் ஏற்கனவே பலதடவைள் கூறப்பட்டதுபோல இந்த பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தல் முடிவு என்பது ஈழத்தமிழ் மக்களின் அரசியல் பட்டயமாக பேணப்படவேண்டிய ஒன்று.

அதாவது இந்த தேர்தல் மூலம் நிரூபிக்கப்பட்ட உண்மை என்பது ஒன்று-

தமிழரின் தாயகம் -

இரண்டு-தமிழரின் தேசிய ஒற்றுமை-

மூன்றுதமிழரின்' தலைமை

நான்கு-தமிழரின் பிரச்சினைக்கான தீர்வு

என்பவை எந்தவகையில் நிரூபிக்கப்பட வேண்டுமென இன்றைய உலகு விரும்புகிறதோ அந்த சனநாயக ரீதியிலான தீர்ப்பு ஒன்றின் மூலம் தமிழ் மக்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சனநாயக ரீதியிலான மக்களின் தீர்ப்பு என்பது புலிகள் இயக்கத்திற்கு கிடைத்த மிகப் பலமான மகத்தான வெற்றியாகும்.

இந்த வெற்றின் கதாநாயகர்கள் புலிகள் இயக்கம் தான் என்பதை எவராலும் நிராகரிக்கப்பட முடியாத ஒன்று.

இந்த வகையில் புலிகள் இயக்கம் தன்னை சர்வதேச சமூகத்திற்கு நிரூபித்துவிட்டது என்பதே உண்மை.

இன்று இந்த தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்ட உண்மையை புலிகள் இயக்கம் ஏற்கனவே பல தடவைகள் வெளிப்படுத்தியிருக்கிறது.

இதனை சற்று விரிவாகப்பார்ப்போம்

புலிகள் இயக்கம் தன்னை இராணுவ ரீதியாக பலமான ஒரு சக்தி என்பதை நிரூபித்த பொழுதெல்லாம் புலிகள்இயக்கம் ஒரு இராணுவ இயக்கம் என்ற வகையில் வரையறுக்கவே முயற்சிக்கப்பட்டது. இந்த சல்களுக்கு புலிகள் இயக்கம் பல வெகுசன போராட்டங்கள் மூலம் தன்னை நிரூபித்த பொழுதும் அன்று அவை முற்று முழுதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஆனால் புலிகள் இயக்கம் தனக்கான வெகுசன ஆதரவை பலமுறை நிரூபித்துக்காட்டியது. இதில் மூன்றாம் ஈழப்போரின் பின்னான காலப்பகுதியில் தன்னை நிரூபித்த நான்கு நிகழ்வுகள் முக்கியத்துவம் பெற்றவை.

ஒன்று- மூன்றாம் ஈழப்போரின் ஆரம்பப்பகுதியில் யாழ் குடாநாடு மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது மக்களை காப்பாற்றும் பொருட்டு புலிகள் இயக்கம் மக்களை யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறுமாறு கோரிய போது புலிகளின் பின்னால் வரலாறு காணாத சனப்பெயர்வு இடம்பெற்றது.

இரண்டு பொங்குதமிழ் நிகழ்வுகளின் போது தமிழர் தாயகம் எங்கும் பெரும் சனத்திரட்சி மூலம் மக்கள் ஆதரவு நிரூபிக்கப்பட்டது.

மூன்றாவது புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் அரசியல் வேலைகளுக்காகச் சென்ற புலிகளை வரவேற்கவெனதிரண்ட மக்கள் திரட்சி

இந்த நிகழ்வின் போதான ஒருசம்பவத்தை இங்கு நினைவு கொள்வது மிகவும்பொருத்தமாக இருக்கும்.

யாழ்ப்பாணத்துக்கு அரசியல் வேலைகளுக்காகச்சென்ற புலிகளை வரவேற்கவென முகமாலை இராணுவ எல்லைக்குள் திரண்ட மக்களையும் அந்த மக்கள் தொகை அதிகரித்துச்செல்ல அவற்றை தங்களால் கட்டுப்படுத்தமுடியாமல் சென்று விடும் என்பதாலும் அப்போதைய யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சிசிரவிஜயசேகர சூனியப் பிரதேசத்திற்கு வந்து புலிகளின் தளபதிகளிடம் வரும் புலிகள் இயக்க உறுப்பினர்களை விரைவாக வந்து உதவமுடியுமா எனக்கேட்டார் 'அந்த அளவுக்கு புலிகளை வரவேற்பதற்காக மக்கள் திரண்டனர்.

இவ்வாறு இந்த நான்கு வரலாற்று நிகழ்வுகளிலும் பெரும் சனத்திரட்சி மூலம் புலிகள் இயக்கம் தன்னை நிரூபித்தது.

இவற்றில் தற்போது இறுதியாக நடைபெற்ற இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தலின் போது புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களின் இருந்து வாக்களிக்கச் சென்ற மக்களின் பங்கு என்பது இந்த நூற்றாண்டில் ஒரு வரலாறு பதிவாகும்.

இதனை கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரை யாளர் சர்வேஸ்வரன் பின்வருமாறு கூறியிருந்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்கள் வாக்களிக்கவென முகமாலை, ஓமந்தை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த கொத்தணி வாக்குச்சாவடிகளில் வாக்களிக்கவென தேர்தலுக்கு முதல் நாளே வாகனங்களில் சென்ற முதியவர்களினதும், கைக்குழந் தைகளுடன்சென்ற தாய்மாரினதும் வாக்குப் பதிவு என்பது அந்த மக்கள் வாக்களிப்பதற்கு தவம் இருந்ததையே காட்டுகிறது என்றார்.

**சிறி. இந்திரகுமார்**

இவ்வாறான சம்பவம் இந்த நூற்றாண்டில் உலகின் எப்பாகத்திலும் நடைபெறாத ஒரு நிகழ்வு என்றார்.

இதுதான் உண்மை. இவ்வாறு புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதிகளில் இருந்து சென்று தவம் இருந்து வாக்களித்த மக்களும், நீண்டகாலமாக இராணுவ பிடிக்குள் இருக்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கும் மக்களுமாக 90 சதவீதத்திற்கு அதிகமான மக்கள் அளித்த தீர்ப்பு புலிகள் தங்களை பூரணமாக நிரூபிப்பதற்கு போதுமானதாகும்.

இந்த வகையில்தான் புலிகள் இயக்கம் தன்னை இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இன்று நிரூபித்து நிமிர்ந்து நிற்கிறது.

இதேவேளை இரண்டு வெற்றிக்கும் புலிகள் இயக்கத்தின் பின்னால் திரண்டமக்கள் சக்தி என்பதும் இப்போது தெளிவாயிருக்கும் 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்திய தமிழரின் தேசியம், தமிழரின் தாயகம், தமிழரின் தன்னாட்சி, தமிழரின் தலைமை என்பவை மூலம் இதுவரை காலமும் மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி ஆகிய தேர்தல் மாவட்டங்களில் இழந்த தமிழ்ப்பிரதிநிதித்துவம் இம்முறை மீட்கப்பட்டு தமிழரின் சனநாயக பலமும் நிரூபிக்கப்பட்டுள்ளதை கவனிக்க வேண்டும்.

இது தமிழறை ஒன்றுபடுத்தி ஒரு குடையின் கீழ் புலிகள் இயக்கம் கொண்டு வந்ததன் ஒரு அரசியல் வெற்றியாகும்.

இதேவேளை இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை சிங்கள மக்கள் சமாதானத்தை இரண்டாம் பட்சமாகவும் தமது பொருளாதார நலன்களுக்கு முக்கியத்துவம் அளித்து தங்களுக்கான தலைமையார் என்பதற்கு தெளிவான பதிலளிக்கத்தக்கவாறு இருக்கும்வேளை தமிழ் மக்கள் தமது பிரதான தமிழரின் அரசியல் வாழ் வுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான தமது அபிலா சைகளை பூரணமாக வெளிப் படுத்தியுள்ளனர்.

இதன் மூலம் தமிழ் மக்கள் இந்த நூற்றாண்டில் ஒரு உறுதியான அரசியல் வெற்றிக்கான படிக்கல்லில் கால் பதித்துள்ளனர்.

இந்த வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இலங்கைத்தீவில் உண்மையான ஒரு அரசியல் தீர்வொன்றைக்கான யதார்த்தில் பொருத்தங்கூடிய வகையில் சமர்ப்பித்திருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகாரா சபைக்கான திட்ட நகலின் வலிமையை நிச்சயம் சர்வதேச சமூகம் புரிந்துகொண்டிருக்கும் அல்லாதுவிடினும் அதனை நிச்சயம் புரிந்துகொள்ளவேண்டும்.

இதேநேரம் இதனை உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடே தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் அமெரிக்க அரசும் ஜப்பானிய அரசும் விரைவாக புலிகளுடன் பேச்சு வாத்தையினை ஆரம்பிக்கவேண்டுமென கோரியிருப்பதாகும்.


தமிழ் மக்கள் 1977 இல் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்காக தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு தனியரசு என்பதற்காக வழங்கபட்ட 421/488 வாக்குகளை போல அதனை இன்றுவரை தமது கொள்கையாக ஏற்று இராணுவரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் போராடி வரும் புலிகள் இயக்கத்திற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு மூலமாக இருபத்தேழு வருடங்கள் கழித்து மீண்டும் 633654 வாக்குகளை வழங்கி தமது ஆணையை புலிகளுக்கு வழங்கி யுள்ளனர்.

ஒருமுறை ஒரு செவ்வியில் லக்ஸ்மன் கதிர்காமர் புலிகள் இருபத்து ஐந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு தேர்தலின் முடிவைக்காட்டி இந்த பிரச்சினையை இழுத்தடிக்க முயல்கின்றார்கள் என தெரிவித்திருந்தார். ஆனால் இருபத்தேழு வருடங்களின் பின்னரும் தமிழ் மக்களின் ஆணை இதுதான் என்பதை தமிழ் மக்கள் நிரூபித்துள்ளனர்.

இதில் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டியது ஈழத்தமிழினம் ஒரு விழிப்புற்ற ஒரு இனம் என்பதேயாகும்.

இத்தகைய ஒரு அரசியல் தெளிவுப் பெற்ற ஒருஇனத்தின் விடுதலையை அல்லது அதன் உரிமையை எந்த அரசுகளானாலும் புறந்தள்ள முயல்வது இலங்கைத்தீவின் மேனியில் குருதிவடியச்செய்ய முயலும் ஒருசெயலே. இந்தநிலையில் இரண்டுவருடகால சமாதான முயற்சிகளின் பயனாக பாதாளத்தில் இருந்த இலங்கையின் பொருளாதாரத்தை நிமிர்த்தி ரணில் தேடிவைத்திருக்கும் தேட்டத்தை பயன்படுத்தி சந்திரிகா சமாதானத்துக்கு எதிரான முதலீடாக பயன்படுத்தத்தொடங்கினால் இலங்கைத்தீவில் இரண்டு நாடுகள் உருவாவதற்கான வாசல் இலகுவாகத்திறக்கும்.

□ □ □




*பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலின் போது புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களிலிருந்து வாக்களிக்கச்சென்ற மக்களின் பங்கு என்பது இந்த நூற்றாண்டில் ஒரு வரலாற்றுப் பதிவாகும்.*

நேர்நோக்கு

சிறிலங்காவின் 13 -வது நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் தமிழ்மக்கள் தமது நிலைப்பாட்டை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அனைத்துத் தமிழ் மக்களுமே இதனை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தியிருக்கின்றனர். இந்நிலையில் வன்னியில் வாழ்கின்ற மக்கள் இந்தத் தேர்தலில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த எடுத்துக்கொண்ட சிரத்தை அவர்கள் காட்டிய தீவிரமானது இங்கே கவனிக்கத்தக்க அம்சமாகும்.

பொதுவாக தமது கிராம சேவையாளர் பிரிவுக்குள்ளேயே அமைக்கப்பட்ட வாக்குச்சாவடிகளிற்குச் சென்று தமது சனநாயக உரிமையைப் பயன்படுத்த



# மக்கள் படைத்த சாதனை

இலங்கையின் அனைத்துப் பகுதி மக்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த உரிமை வன்னிப் பகுதிமக்களுக்கு மறுக்கப்பட்டது. அவர்களுக்கு அந்த உரிமையை வழங்கப் படுவதற்கு தென்பகுதியிலுள்ள இனவாதசக்திகள் மட்டுமல்ல வடக்கிலேயுள்ள மக்களாதரவற்ற சக்திகளும் எதிராக நின்றன. இதனால் 55-60 கிலோமீற்றர்கள் தூரத்திலிருந்து முதல் நாளே சென்று தங்கியிருந்து பல துன்பங்களை அனுபவித்து தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

தினத்தன்று ஓமந்தையில் நாம் காணமுடிந்தது.

சுமார் முப்பதினாயிரத்துக்கு மேற்பட்டமக்கள் ஒன்றரை மணிநேரத்திற்குள் ஒரே இடத்தில் வாக்களித்து சாதனை புரிந்தார்கள் என்றுதான் கூறவேண்டும்.

மக்களை நீண்டதூரம் அழைத்து வந்து சிரமப்படுத்துகிறோமேஅவர்களை சிறிதுதூரம் கூட நடந்துசெல்ல விடக்கூடாது என்பதில் சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்புமே மிகவும் சிரத்தை எடுத்தனர். மக்களின் சிரமங்களை இயன் றளவு குறைப்பதற்கான முயற்சிகளை எடுத்தனர்.

ஆனால் வாக்களிப்பு நேரம் ஆரம்பமாகி வாக்களிக்கச்செல்லும் மக்களின் வேகத்தைப்பார்த்த மக்கள் மிகவும் பரபரப்படைந்தனர் அப்போதிருந்த வேகத்தில் அனைத்து மக்களும் வாக்களிக்க முடியுமா?

ஆனால் இந்தச் சிரமங்களையெல்லாம் தங்கள் மனோவலிமையால் மக்கள் வென்று தமது இலட்சியப் பற்றுறுதியை வெளிப்படுத்தியமையை தேர்தல் என்ற கேள்வி எழுந்தபோது மக்கள் ஆறு கிலோமீற்றர்களை நடந்து சென்று கடக்கவே தீர்மானித்துவிட்டனர். அதற்கான வாய்ப்புக் கிடைத்தபிறகு மக்கள் எதைப்பற்றியுமே சிந்திக்கவில்லை.

அப்போது அவர்கள் மத்தியிலே காணப்பட்ட எழுச்சியானது மிகவெளிப்படையாகவே தெரிந்தது.

காற்று சிறிதும்வீசாத கடும் வெய்யில், இருபுறமும் பொலிஸ் இராணுவக் காவலரண்கள் மிதிவெடி குறித்த எச்சரிக்கைகள் இவற்றுக்கு மத்தியிலே தெரிந்தவர் தெரியாதவர் என்ற வேறுபாடில்லாது ஒருவருடன் ஒருவர் உற்சாகமாக உரையாடிக் கொண்டு வேகமாக நடந்துகொண்டிருந்தனர். முதியவர் இளையோர் என்ற பாகுபாடில்லை அனைவரும் வாக்குச்சாவடிநோக்கிவேகமாகப் போய்க்கொண்டிருந்தனர். வாக்களிக்கச் சென்றுகொண்டிருந்த ஒருவர் கூறினார் “ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரைநீளமான புகையிரதத்தைவிட்டாலும் எல்லோரையும் ஏற்றி இறக்க முடியாது” என்று.

எவ்வளவோ வசதிகள் ஏற்பாடுகள் செய்துதான் இப்பொழுது சனநாயகநாடுகள் எனப் பெருமைப்பட்டுக்கொள்ளும்நாடுகள் வாக்குச் சாவடிக்கு மக்களை அழைக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அவர்களால் “பயங்கரவாதிகள்” என வர்ணிக்கப்படு வோருக்கு ஆதரவாக வாக்களிக்க மக்கள் காட்டிய இந்த உற்சாகம் மகத்தான ஒன்றுதான்.

இதேபோன்ற நிலைதான் முகமாலை வாக்களிப்பு நிலையத்திலும். அங்கு வாக்களிக்கச் சென்ற மக்கள் களியாட்ட நிகழ்வொன்றுக்குச் செல்வதாக நினைத்துச் செல்லவில்லை அவர்கள் தாம் கடந்த 56 வருடங்களுக்குமேலாக நடத்திய பல்வேறு வடிவமான போராட்டங்களில் ஒன்றாக நினைத்தே அவர்கள் முகமாலையில் திரண்டு நின்றனர்.

ஆனால் சுதந்திரத்தின் வாசனை தெரியாத ஒருவர், கற்பூரவாசனை தெரியாத பிறவி போல களியாட்டவிழா நடத்தியதாக உலகஊடக சேவையொன்றின் மூலம் கத்தினார். இதன்மூலம் தன்னைத்தானே கேவலப்படுத்திக்கொண்டு அரசியல் அரங்கிலிருந்து முற்றாக அகற்றப்பட்டிருக்கிறார்.

இந்தத் தேர்தல் முக்கியமான சில விடயங்களை நிரூபித்திருக்கின்றது.

ஒன்று தேசியம், தாயகம், தன்னாட்சி உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளில் மக்கள் கொண்டுள்ள உறுதிப்பாடு.

இரண்டு இந்தக்கோட்பாடுகளுக்கான எந்த அர்பணிப்புக்கும் தயாராக உள்ளமை.

மூன்று இந்த இலட்சியத்துக்கு எதிரானவர்களை புறமொதுக்க அவர்கள் தயங்கமாட்டார்கள் என்பது.

அதாவது தமிழ் மக்கள் மாறவில்லை என்பதை அவர்கள் புலப்படுத்தியிருக்கிறார்கள்.

வேலவன்

# பாராட்டப்பட்ட தேர்தலின் பின்னணியில்

இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தல் இலங்கையின் முப்பத்தெட்டு வருடகாலத்துள் ஒப்பீட்டுரீதியில் அமைதியாகவும் திருப்திகரமாகவும் நடைபெற்ற ஒரு தேர்தல் என இலங்கையின் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் நடைபெற்ற தேர்தலைக் கண்காணிக்கவென வந்திருந்த ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜோன்குஸ்நகர் கூட இம்முறை நடைபெற்ற தேர்தலை பாராட்டியிருந்ததுடன், விசேடமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வாக்களிக்கச்சென்ற மக்களுக்கான ஏற்பாடுகளை திருப்திகரமாக செய்தும் இந்த நாடாளுமன்றத்தேர்தல் சிறப்பாக நடைபெறவும் புலிகள் செயற்பட்ட விதம் குறித்து தனது திருப்தியையும் வெளிக்காட்டியுள்ளார்.

இதேபோன்று உள்ளூர் தேர்தல் கண்காணிப்புக்குழுவான ‘பவ்ரல்’ அமைப்பும் தனது கருத்தினைத்தெரிவித்துள்ளனர்.

இந்தவகையில் இம்முறை நடைபெற்ற தேர்தலானது இலங்கையில் இதுவரைகாலமும் நடைபெற்ற தேர்தல்களோடு ஒப்பிடும்போது குறைந்தளவு வன்முறைகளோடும் தேர்தல் மோசடிகளோடும் நடைபெற்றுள்ளதை அவதானிக்கலாம்.

ஆனால் இதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கை சனநாயக பண்புகளின் உச்சத்தை நோக்கிப் பயணிக்கத்தொடங்கிவிட்டது என எவரும் கருதிவிடக்கூடாது.

ஏனென்றால் இலங்கையின் வரலாற்றில் கட்சிகள் மேற்கொள்ளும் வன்முறைகளுக்கும் தாக்குதல்களுக்கும் பழி சுமத்தும் தரப்பாக புலிகளையே பயன்படுத்திவந்தனர்.

ஆனால் இந்தமுறை புலிகள இயக்கம் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு தனது ஆதரவினை வழங்கி இந்தத் தேர்தல் நடைபெறுவதற்கு ஏதுவான எல்லாப் பங்களிப்புகளையும் வழங்கியிருந்தமை ஏனைய வன்முறையாளர்களைப் பெரிதும் கட்டுப்படுத்தியிருந்தது.


அத்தோடு சந்திரிகாவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சார்ந்த போட்டியிட்ட வேட்பாளர் பட்டியலில் முக்கியமான ஒரு சில அடாவடி வேட்பாளர்கள் இடம்பெறாமையும் இதற்குக் காரணம்.

இதனைவிட காரணங்கள் பலவற்றைக் காட்டமுடியும். ஆனால் இவற்றுக்கும் அப்பால் இலங்கையின் அரசியல் நீரோட்டத்தில் பங்குகொள்ளும் கட்சிகளும் பிரமுகர்களும் திடீரென இந்த ஒரு தேர்தல் மூலம் நல்லவர்களாக மாறிவிட்டார்கள் என எவரும் கருதிவிடக்கூடாது.

இலங்கையின் ஐம்பது வருடத்துக்கு மேற்பட்ட அரசியல் வரலாற்றில் சனநாயகமும் வன்முறையும் ஒரே நேர்கோட்டில் பயணிக்கும் வரலாறே கடந்த காலவரலாற்றுப் பதிவுகளாக உள்ளது.

அத்தோடு இந்தமுறை தேர்தல் முற்றிலும் மாறுபட்ட ஒரு களத்தில் நடைபெற்றமையையும் கவனத்தில்கொள்வது மிகவும் அவசியம்.

ஏனென்றால் அமைச்சரவை ஐக்கிய தேசிய முன்னணியிடமும், சனாதிபதியின் கட்டளை அதிகாரம் பொதுசனஐக்கிய முன்னணியிடம் என ஒரு மாறுபட்ட களயதார்த்தத்தில் நடைபெற்றமையும் இந்த



முறை தேர்தல் ஓரளவு அமைதியாக நடைபெறக் காரணமாயிற்று.

ஏனென்றால் ஒப்பீட்டில் அதிகாரம் ஓரளவு சிதறிக்கிடந்தமையும் இதற்கு ஒரு காரணமாயிற்று.

எவ்வாறெனில் அதிகாரம் அதிகம் அதிகரிக்கும்போது ச்ர்வாதிகாரம் தோன்றக்கூடிய வாய்ப்புகள் அதிகம்.

ஆனால் இந்த நிலை இரண்டுபிரதான கட்சிகளிடமும் இருக்கவில்லை இதனால் இந்த கட்சிகளையும் இவற்றின் பின்னால் இருந்த கட்சிகளையும் இயல்பாகவே கட்டுப்படுத்தியிருந்தது என்பதே உண்மை.

உண்மையாக இலங்கை சனநாயக பண்புகளின் உச்சத்தை நோக்கி பயணிக்க தொடங்கிவிட்டதாகக் கருதவேண்டுமானால் அவற்றிற்காக இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் அதிகம் உழைக்கவும் ஒத்துழைக்கவும் வேண்டியும் இருக்கும்.

இந்த யதார்த்தத்தின் அடிப்படையில் தான் இந்த பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலை அவதானிக்கவேண்டும்.

மேலும் இலங்கையின் இவ்வாறானதொரு அமைதியான தேர்தல் நடைபெறுவதற்கு புலிகள் இயக்கத்துடனான சமாதான நடவடிக்கையும், ஒரு காரணமாகும்.

ஏனென்றால் வடபகுதியில் யாழ்ப்பாணத்தின் தீவகம் போன்ற பகுதிகளில் முன்பெல்லாம் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, தீவகத்தில் தனியாட்சி நடந்து வந்த ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகளின் வன்முறை நடவடிக்கைகள் இந்த புலிகள் அமைப்பினால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது என்றே கூற வேண்டும்.

கடந்த தேர்தலின் போது தமிழ்தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்கள் தீவகத்தில் ஈ.பி.டி.பி யினால் தாக்கப்பட்டதுடன், இரண்டு பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

இவ்வாறே தென்னிலங்கையில் பல இடங்களிலும் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றிருந்தது.

கண்டியில் முன்னால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த தலைமையில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

ஆனால் இம்முறை இவ்வாறு இல்லாமல் ஒப்பீட்டுரீதியில் அமைதியாக நடைபெற்ற தேர்தல் என்ற வகையில் எல்லோரையும் கவர்ந்திருக்கிறது என்பது உண்மைதான்.

நக்கீரர்

# வாழைப்பழக்குடியரசுகளும் வாழ்விழந்த மனிதர்களும்

வாழைமரம் நம் ஒவ்வொருவருடைய வீட்டுத்தோட்டத்திலும் நின்று பயன்தரும் நம் வாழ்வியல் பண்பாட்டு வழக்காற்றுக்களோடு பின்னிப்பிணைந்துவிட்ட ஒன்று. உணவோடும் மங்கல அமங்கல ஆசார நிகழ்வுகளின் போதும் பயன்படுத்தப்படும் இது. நமக்கு ஒரு உள்வீட்டு உற்பத்தி. ஆனால், இதே வாழைப்பழத்தை ஏற்றுமதிசெய்ய நிர்ப்பந்திக் கப்பட்டவர்கள் அதற்குக்கொடுக்கும் விலை யையும் இறக்குமதி செய்யும் நாடுகள் இதற்குக் கொடுக்கும் விலையையும் ஒப்பிட்டுப்பார்க்கும் அதேவேளை, இதற்கிடையே பணம் ஒன்றே நோக்காய் செயற்படும் தரகு நிறுவனங்களில் ஊடுருவல்கள், எந்தளவிற்கு உள்ளதென ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்ட பின்னர் கடைகள் எங்கும் கள் கலராகத் தொங்கும் பல்வித விற்பனைப் பொருட்களை வைத்து, நிலைமை சுமூகமாகி விட்டதென ஒரு சிலர் தப்புக்கணக்கு போடுகி றார்கள். அரசியல் உரிமைகள் பற்றிய எந்தவித உருப்படியான கருத்துப்பரிமாற்றத்திற்கும் தயார் இல்லாத தென்னிலங்கை, கள் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்பை பெற்றுக்கொடுத்ததை எண்ணி தனக்குள்ளே மகிழ்ந்து கொள்கிறது. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் போல, யாழ் பிரதேச நிலை மைகளை நாம் நோக்கின் இது தெளிவாகும். உற்பத்திப் பொருளாதாரம், கடற்றொழில் போன்ற வாழ்வாதாரங்கள் சிங்களத்தினால் முடக்கப்பட்டிருக்கும். அங்கே, வெறுமனே சேவைப்பொருளாதாரம் மட்டுமே இயங்கிவருகிறது. மக்களுக்குத் தேவையான சேவைகளான கற்பித்தல், சுகாதாரம், போக்கு வரத்து இன்னபிறவற்றை வழங்கும் இவர்கள், அனைவருக்கும் வாழ்விற்குத்தேவையான வற்றில் பெரும்பகுதி தென்னிலங்கையில் இருந்தே தருவிக்கப்படுகின்றது. இறக்கு மதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையேயுள்ள பெரிய இடைவெளியானது புலம்பெயர்ந்த நாடுகளில் உறவுகளைக்கொண்டுள்ளோரால் நிரப்பப்ப டுகிறது. நம்முடைய தேவைகளை அதிலும் அடிப்படையானவற்றை உள்ளூரிலேயே உற்பத்தி செய்தல் மட்டுமே, உண்மையான பொருளாதார விடுதலை கிடைக்கும். அதை விடுத்து எந்த விலைக்கும் கொள்வனவு செய்யத்தயாராக இருக்கவேண்டிய நிர்ப்பந்த நிலை, நம்மைத்தங்கி நிற்கும் நிலைக்கு இட்டுச்சென்றுவிடும். இந்த வகையில் சர்வதேச வர்த்தகமும், உலக மயமாக்கலும் தென்ன மெரிக்க நாடுகளை எந்தளவிற்கு இட்டுச் சென்றன. என்று அலசிப்பார்ப்பதின் ஊடாக, சுதேசிய உற்பத்தியின் அவசியத்தை உணர்ந்து முற்காப்பு நடவடிக்கைகளில் இறங்கமுடியும்.

1989 ஆம் ஆண்டு ஒக்டோபர் மூன்று பிரிக்கப்பட்டிருந்த கிழக்கு - மேற்கு ஜேர்மனிகள் இணைந்துகொண்ட நாள்: வல்லரசுகளின் வக்கிரத்துக்குப் பலியாகி, உறவுகள் பிரிக்கப்பட்ட நிலையில் இருந்து மீண்ட பொன்நாள். கம்யூனிஸ் நாடுகளில் ஒன்றாய் இருந்த கிழக்கு ஜேர்மனி மக்கள், மேற்கு ஜேர்மனிக்கடைகளில் பலதையும் புதுமையாகக் காண்கின்றனர். அந்தப்பலதினில் ஒன்றுதான் மஞ்சள் நிறத்தைக்கொண்ட, வளைந்த ஒரு புதுமைக்கனி ஒன்று அதுதான். நம் முக்கனிகளில் ஒன்றான வாழைக்கனி பலரும் புதினமாக சுவைத்துப்பார்க்கிறார்கள். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்டு வந்த வாழைப்பழம், கம்யூனிஸ் கிழக்கு ஐரோப்பா வில் முற்றிலும் அந்நியப்படாத ஒன்றாக இருந்தது. அவுஸ்திரேலியாவில் அரசியல் வாதிகள் பலரும் வாழைப்பழங்களை தங்கள் கைகலாலேயே இஸ்லாவிய மக்களுக்கு



| நிறுவனம் | நாடு | 2002ம் ஆண்டில் US$ இல் சொத்து மதிப்பு | வருவாய் 2002இல் | தொழிலாளர்களின் தொகை (பதிவுகளின்படி) |
|---|---|---|---|---|
| Chiquita | ஐக்கியஅமெரிக்கா | 1900.மில்.US$ | தரவு இல்லை | தரவு இல்லை |
| Dole | ,, | 4100.மில்.US$ | 335.மில்.US$ | 57000 |
| Del monte | ,, | 1950.மில்.US$ | 182.மில்.US$ | 12600 |

கொடுக்க முந்தியடித்துக்கொண்டிருந்தார்கள். இணைந்த ஜேர்மனிகளின் இதயக்கனியாய் இருந்த வாழைக்கனிகளுக்கு வாழ்வு கொடுப்பது தென்னமெரிக்கா. இந்தத்தென்னமெரிக்காவின் தேசப்புதல்வர்கள் வாழ்வு எவ்வாறிருக்கிறது.?

வாழைப்பழக்குடியரசுகள் என அழைக்கப்படும் தென்னமெரிக்க நாடுகளின் ஒன்றான நிக்கரா குவாவில் உள்ள வாழைப் பெருந்தோட்டத் தொழிலாளிதான் 44 வயதுடைய லூகாஸ் பரபோனா வீட்டிற்குச் சென்று மரணத்திற்காக காத்திருக்குமாறு அவரது வைத்தியர் கூறிவிட்டார். எழும்பி நிற்கவே முடியாத, இரண்டு பிள்ளைகளின் தந்தையான அவருக்கு எலும்புப் புற்றுநோய். அவரின் பிள்ளைகளுக்கோ வயதுக்கேற்ற தோற்றமில்லை. இப்படி ஒருவரல்ல சுமார் 22000 நிக்கராக்குவாக் தொழிலாளர்கள் பாதிக் கப்பட்டுள்ளார்கள். வாழைப்பழங்களில் பிடிக்கக் கூடிய ஒரு வகைப்புழுவிற்கு எதிராகப் பயன்படுத்தப்படும் "நெமகோன்" எனப்படும் அதியுயர் நஞ்சாக வகைப்படுத்தப்பட்ட ஒரு வகை கிருமிநாசினிதான் இதற்குக்கார ணம்.1970களில் இருந்து பயன்படுத்தப்பட்டுவரும் இக்கிருமி நாசினியை சிறு தளவில் பிராணிகளில் பிரயோகித்துப் பார்த்தபோது,மலட்டுத்தன்மை, நுரையீரல்- ஈரால்-சிறுநீரகப்பாதிப்புக்கள் ஏற்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஆனாலும் மிருகங்களில் பெறப்பட்ட தரவுகளை மனிதர்களுக்கும் பொதுமைப்படுத்தமுடியாது. என்று வாதாடியது அதனை உற்பத்திசெய்த நிறுவனம். நெமகோன் எனப்படும் உற்பத்தி நாமத்தைக்கொண்ட இந்த DIPERO MCHLORPROPAN (DBCP) 1977ம் ஆண்டிலிருந்து அமெரிக்காவில் (U.S.A) தடைசெய்யப்பட்டிருந்தாலும் அமெரிக்க நிறுவனங்களினால் தொடர்ந்தும் தென்ன மெரிக்க "வாழைப்பழக்குடியரசுகளில் பயன் படுத்தப்பட்டு வந்தது. இதன் விளைவாக 1998 பெப்ரவரியில் ஹொண்டுறாஸ் நாட்டின் வடக் கில் உள்ள ஒலன்சிற்றோ மாகாணத்தில், நெமகோன் பாவனைக்குட்பட்ட தோட்டங்களை அண்மித்து வாழ்ந்து வந்தவர்களிடையே, பிறந்த குழந்தைகளில் ஒரு விழுக்காட்டினர் மூலை என்றே உறுப்பே அற்றுப்பிறந்திருந்தனர். இத்திடுக்கிடும் செய்தி அப்பகுதி வைத்தியர் ஓமர்கொன்சலன்ஸ் மூலம் வெளியுலகிற்குத் தெரிய வந்தது. அதுமட்டுமல்லாமல் டோல் எனப்படும் பெரிய பழவிநியோக நிறுவனத்தின் நிலக்கீழறைகளில் தடைசெய்யப்பட்ட நெமகோன் (DBCB) கொல்கலன்களும் கண்டுபிடிக்கப்பட்டது.

அதுசரி! சனநாயகம் பாரிய அழிவாயுதங்கள் களைவு சர்வதேசியம் என்றெல்லாம் பீற்றிக் கொள்ளும் மேலைத்தேயங்கள் ஏன் இந்த விடயங்களைக் கண்டுகொள்ளவில்லை. பன்னாடுகளைச்சேர்ந்த 25000 தொழிலாளர்கள் நஞ்டஈடு கோரி வழக்குத்தாக்கல் செய்தும் எதுவும் நடைபெறவில்லையே! ஏன்? எங்கே நாமறிந்த சர்வதேசகாவலாளிகள்? பதில் மிகவும் சுலபமானது சுருக்கமானதும் கூட இன்றைய உலகின் மொத்த வாழைப்பழ உற்பத்தியில் 70% ஆனது மூன்றே மூன்று நிறுவனங்களின் கைகளிலேயே உள்ளது. (அதன் விபரம் அட்டவனையில்)

இப்போது புரிந்ததா இம்மூன்று நிறு வனங்களும் போட்டிபோட்டுக்கொண்டு செலுத் தும் ஆதிக்கம் ஐரோப்பாவிலும் அமெரிக்கா விலும் வாழைப்பழத்தை இறக்குமதி செய்யும் ஏனைய நாடுகளிலும் இவர்களே விற்பனை விலையை நிர்ணயிக்கிறார்கள். கொழுத்த லாபத்தை ஈட்டிக்கொள்வதற்காக உற்பத்தி செய்யப்படும் நாட்டுத்தொழிலாளர்கள் மனித உரிமைகள் பறிக்கப்பட்டு அடிமைகள் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வெறுமனே உயிர் வாழ்வதற்குத் தேவையான கூலி மட்டுமே வழங்கப்படுகிறது சுகாதாரகாப்பு நடை முறைகள் பின்தள்ளப்படுகின்றன. இவ்வாறு மிகமிகக்குறைந்தவிலையில் உற்பத்தி செய்யப்படும் வாழைப்பழங்கள் மேலைத்தேய கடைகளில் உள்ளூர் உற்பத்தியில் பெறப்பட்ட பழங்களைவிட மலிவாக விற்பனை செய்யப்ப டுகிறது. முதலாம் உலக வாசிகளின் போசாக் கிற்காக மடிந்துபோ(ா தென்னமெரிக்க வாழைப்பழக்குடியரசுகளின் பிரஜைகளின், மெலிந்து காய்ந்து போன அவர் தம்முகங்கள் விளம்பரங்களில் தோன்றும் வாழைப் பழக்கூடையுடனான அழகிய ஸ்பானியப் பெண்ணின் முகத்தின் பின்னே மறைக்கப்பட்டு விடுகிறது. வளம் மிக்கதங்கள் பூமியிலே தங்கள் பிரதான உணவுத்தேவைகளுக்கான பயிர்களை விளைவிக்க முடியாமல், அவற்றிற்கு அடுத்த நாடுகளிலே தங்கியிருக்கும் இவர்களின், அடிப்படைப்பொருளாதாரங்கள் குன்றிப்போய் தங்கியிருக்கவேண்டிய, பேரம்பேசும் பலம்அற்றவா களாக ஆக்கப்பட்டவகையினை ஆழ்ந்துணர்ந்திடுவோம். அதே வேளை குறைந்தவிலை கருதி இவ்வாறான உபஉணவுப்பயிர்களை மூன்றாம் உலக நாடுகளில் இருந்து தரு வித்துக்கொள்ளும் மேலைத்தேயங்கள், பிரதான உணவுகளின் உற்பத்திவிலை அதிகமாயிருந்தும், மற்றைய நாடுகளில் அவற்றிற்காக தாம் ஒருபோதும் தங்கியிருக்கக் கூடாது என்பதற்காக, உள்ளூர் விவசாயிகளை பெரும்தொகை மானிய உதவித்தொகைகளை வழங்கி ஊக்கிவிக்கின்றது. உலகமயமாக்கல் என்ற பெயரில் பன்னாட்டு வர்த்தக நிறுவனம் மூன்றாம் உலக நாடுகளின் எச்சசொச்ச வாய்ப்புக்களையும் ஒப்பமிட்டுவருகிறது.

தேயிலையை இலங்கையில்தான் பயிரிடவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனாலும், வளமான பெருநிலப்பரப்பை உணவுப்பயிர்களுக்காக பிரயோசனப்படுத்தாமல் போயும் போய் ஒரு குடிபானத்துக்காக விரையம் செய்து,தங்கள் பெருந்தொகை தொழிலா ளர்களை வேறு அதில் ஈடுபடுத்தி குறுகிப் போய்விட மேலை நாடுகள் என்ன மூலை குறைந்தனவா என்ன? இந்த லட்சக்கணக்கான தொழிலாளிகளும் உற்பத்திப்பொருளாதாரத்தில் ஈடுபட்டால் இலங்கையின் நிலை எவ்வாறு இருந்திருக்கும்!.

எடுத்துக்காட்டுக்களில் இருந்து எங்களுக்குத் தேவையானவற்றை ஏற்றுக் கொள்வோம் எமது தாயகத்தின் கட்டுமா ணங்களிற்கான கற்களை கவனமாக அடுக் கிடுவோம். தம்மை குறிபார்த்திருக்கும், தம்முடைய நுகர்வுத்தேவைகளை அதிகரித்துப் பாலூட்ட காத்திருக்கும் மேனாட்டு, இந்திய மற்றும் தென்னிலங்கை முதலீட்டாளர்களையும், நிறுவனங்களையும் எங்கள் நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மட்டும் அனுமதிப்போம். இதற்கு நுகர்வோர் ஆகிய நாம் ஒவ்வொருவரும் சமூகத்தேசிய உணர் வோடு விழிப்பாக செயற்படுதல் அவசியம், அதுவே பொருளாதார தன்னிறைவிற்கு வழிகோலும்.

சு.ஞாலவன்



அறிவியல்

# புளூட்டோவின் 'கோள்' அந்தஸ்து பறிக்கப்படுமா?


சந்திரனைவிட சிறியதான புளூட்டோவுக்கு சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் கோள் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது. ஆனால் இப்போது சர்வதேச வானியல் சங்கமான **J.A.U (Internetional Artronomical union)** இந்த அந்தஸ்த்தை பறிப்பதை பற்றி ஆலோசித்து வருகின்றது.

இவ்வாறு கோள் அந்தஸ்து பறிக்கப்பட்டால் எமது சூரியத்தொகுதியில் மிகுதிய அட்டக்கிரகங்களே (8 கிரகங்கள்) இருக்கும் இதன்மூலம் நவக்கிரகங்கள் (9கிரகங்கள்) இல்லாது ஒழிக்கப்படுமா? இப்படியாயின் இது கின்றது.

புளூட்டோவே உணக்கும் தமிழர்களின் தலைவிதியா? முன் உரிமைக்காக நீயும் போராடு.

இன்னொரு வானியிலாளர் இதுபற்றி கருத்து தெரிவிக்கையில் புளூட்டோவை ஒருசிறு கோளாகவும் கருதலாம் என்று கூறியுள்ளார். இவர் நோர்வேயை போலல்லவா இருக்கின்றர். புளூட்டோவும் தப்பிப்பிழைக்க இப்படிப்பட்டவர்கள் வேண்டும் தானே?

மேரிலான்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த **Mike Ahearn** இதுபற்றி கூறுகையில். நெப்போலியனைச் சுற்றிவரும் அனைத்துப் பணிப்பந்துகளையும் **(iceballs)** இவர் நெப்டியூனுக்க அப்பாற்பட்ட பொருள் என்று கருதலாம் என்றார். இவர் **J.V.P** ரகத்தைச் சேர்ந்தவரோ? யாருக்குத் தெரியும்.



இதன்படி புளூட்டோவானது கோள் என்ற அந்தஸ்த்தையே இழந்து "நெப்டியூனுக்கு அப்பாற்பட்டபொருள் -1" **(Troans-Neptunian Objects-1)** என்ற அந்தஸ்தையே பெறக்கூடிய தகுதியுடைய பொருளாகும்.

விஞ்ஞானிகளின் சர்வாதிகாரமா?

புளூட்டோவின் கோள் அந்தஸ்துப்பற்றிய சச்சைகள் பல சதாப்சங்களாக நடைபெற்றுவருகின்றது. புளூட்டோவில் **(Lowell)** விண்வெளிக்கண்காணிப்பு நிலையத்தைச்சேர்ந்த **Ciyde tonbaugh** என்பவர் 1930ல் கண்டுபிடித்தார். கண்டுபிடித்த சிறியகாலத்திலே இச்சர்ச்சை ஆரம்பித்துவிட்டது. **(Planenetary Systence)** எனப்படும் கிரகங்கள் பற்றிய விஞ்ஞானப் பகுதியில் தலைவர் சிறியதாக இருப்பதால் புளூட்டோவை ஒரு கோள் எனக்கருதமுடியாது என்று கூறினார். அத்துடன் சூரியனை ஒருவட்டப்பாதையில் சுற்றிவரும் மற்றக்கோள்களை போலல்லாது நீள்வட்டப் பாதையில் சுற்றிவருகிறது எனவும் கூறுகிறது.

இது இலங்கையில் ஈழத்தமிழர் சிறுபான்மையினர் என்பதால் அவர்களை ஒரு இனமாக கருதமுடியாது. மற்றய தமிழ்க்கட்சிகள் போன்று புலிகள் சிங்கள பேரினவாத கட்சிகளை பின்தொடராத படியால் அவர்களை அங்கீகரிக்க முடியது என்று கூறுவது போல்அல்லவா இருக்

சந்திரனின் விட்டத்தில் 2/3 பங்கு விட்டத்தையே கொண்ட புளூட்டோவானது ஒருவிண்கல் தான் என்றும் சில விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இவர்கள் இலங்கையில் வாழும் பௌத்தபிக்குகள் போன்ற தரத்தை உடையவர்களாக்கும்.

1930ல் கண்டுபிடிக்கப்படாமல் இது இன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்குமேயானால், புளூட்டோவிற்கு நிச்சயமாகவே கோள் என்ற அந்தஸ்து வருவதற்கே சந்தர்ப்பமில்லை. இப்படித்தான் தமிழர் போராட்டமும்.

சூரியத்தொகுதியில் ஒருகிரகம் என்ற அந்தஸ்த்தைப்பெறுவதற்கு இன்றுள்ள கோட்பாடுகளின் படி புளூட்டோவிடம் எதுவிதத் தகுதிகளும் இல்லை என்றே கூறவேண்டும். எனவே இன்றுவரை ஒரு கிரகம் என்ற அந்தஸ்து பறிபோகாமல் இருப்பது புளூட்டோவின் அதிஸ்டமே.

# வானத்தில் மிதக்கும் 'மாயமென்வட்டு'



சமாச்சாரத்திற்கு ஒருவிடிவே கிடையாதா என கவலைப்பட்டுக் கொண்டிருந்த கணனிப் பித்தர்களுக்கு இப்பொழுது அதற்கு ஒருவிடிவு ஏற்பட்டு விட்டது இது இணையயுகம் அல்லவா?ஆகவே இந்த பிளப்பியின் பயன்பாட்டையும் இணையம் மாற்றியமைக்கப்பட்டது.

இந்த பிளப்பியை நீங்கள் இனி சட்டைபையில் எடுத்துச்செல்ல வேண்டிய தேவையும், சிரமமும் இல்லை ஏன் தெரியும்? ஆகாயத்திலேயே வைத்து விட்டுச்செல்லலாம். அதாவது உங்களது தகவல் பொதிகளை வெப்பில் போட்டுவிடலாம்.

இதற்கு நீங்கள் இத்தகைய வசதிகளை வழங்கும் தளங்களுக்குச் சென்று உங்களது கைஎழுத்தினை போட்டுவிட்டு, உடனடியாகவே அவர்களது சேவையினை நீங்கள் பயன்படுத்த தொடங்கலாம்

இதற்காக உங்களுக்கு3அடி தொடக்கம்20அடி வரையான இடத்தினை இலவசமாகவே பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.(vpload)

இதில் இன்னொறு அனுகூலமும் உண்டு. அதாவது தனித்தனி பிரிவுகளை உருவாக்கிக்கொள்ளுதல், பதிவேற்றம், பதிவுஇறக்கம் என்பவற்றின் கட்டுப்பாடு, கோப்புக்களில் மாற்றம் என்பனவும் செய்யமுடியும்.

இத்தகைய "விர்ச்சுவல்பிளப்பி"
சிறப்பம்சம் என்னவென்றால் நீங்கள் எந்தக்கணனியை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.இதன் பலனை வியாபாரிகள் மட்டுமன்றி கல்லூரி மாணவர்களும் அனுபவிக்கலாம் இதன் மூலம் கல்லூரியில் மாணவன் தனது செயல்திட்டத்தினை ,விடுமுறைக்காக வீடு சென்றாலும் விட்ட இடத்திலிருந்தே தொடரலாம்.

இவ்வாறு "விர்ச்சுவல்பிளப்பி" மூலம் பயனை நாங்கள் நுகருகின்றபோது ,அவற்றினால் தருவிக்கப்பட்ட இடத்திற்கு மேலதிகமாக தேவைப்பாடு ஒன்று எழுமாயின் அதனைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இத்தகைய பிளப்பிகளை பின்வரும் நிறுவனங்கள், தமக்கென வரையறுக்கப்பட்ட சில பகுதிகளை இலவசமாக கொடுக்கின்றன. (ஒருவருக்கு)

1, **imaclfloppy-3MB** இடமும்
2, **iFloppy-10MB** இடமும்
3, **MYdocsonline-20 MB** இடமும்

இலவசமாகத் தருகின்ற ஏனைய இடங்களை நாம் கட்டணம் செலுத்தியே பெறமுடியும் இதைப்பயன்படுத்துவது கடினமோ என்று எண்ணாதீர்கள் இதுமிகவும் எழிதாகும்.

உங்களது கணக்கினை( **acount**) இலகுவில உருவாக்கிவிடலாம் சில விளம்பரங்களைப் பார்க்க வேண்டியிருக்கும். இத்தகைய புது வசதிகளைப் பயன்படுத்தி நீங்களும் பாருங்களேன். பயன்படுத்துங்களேன்.

ஏன் தெரியுமா? சிலேட்டைக் கண்ட மனிதன் இன்று கையில் எடுத்தச் செல்லவும் முடியாத, எழுதவும், "மாயமென்தட்டை (**Virtualfloppy**) அதாவது மாயச்சிலேட்டையல்லவா கண்டுபிடித்துள்ளான். என்ன? அம்புலி மாமாக்கதை என்றா எண்ணுகிறீர்கள்? இல்லை இதுநிஜம்.

# இப்படியும் நடக்கிறது

அலுவலகத்தில் நண்பர் பழைய சீலையை ஞாபகப்படுத்திக்கொண்டு இருந்தார். நண்பரின் தொல்லை தாங்கமுடியாமல் என்ன விசயம் என குடையத்தொடங்கினேன். நண்பர் விடயத்தைகூற முதல் என்னிடம் பதிலடி கொடுக்காமல் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுக்கொண்டே இருந்தார். அவர் என்னிடம் சும்மாவே இருபது நாசம் என்றார்.

அதற்கு நான் எப்படி நாசம் ஆகிப்போகும். ஒன்று தொலைந்து போகும் அல்லது சில்லறையாகிப்போகும் என்றேன்.

நண்பர் கடுப்பாகிவிட்டார்.

உதுகளுக்கு மட்டும் குறைவில்லை. உதுக்கு ஒரு நியாயம் எனக்கு சொல்லு பார்ப்போம் என்றார்.

விசயம் இதுதான்.

ஒரு மன்னரின் பெயர் தாங்கிய பிரபல உணவகம் அங்கு நண்பர் சாப்பிடப்போய் இருக்க அவரின்ர சாப்பாட்டை சாப்பிட முதலே சிட்டை போடப்பட்டுவிட்டது.

பின்னர் 'ரோல்ஸ்' சிற்றுண்டி வந்துள்ளது. ஆனால் காலாவதியர்கிப்போன ரோல்ஸ்.

நண்பர் உது பழுதடைந்துவிட்டது என உபசரிப்பாளரிடம் கூறி அதை திருப்பிக்கொடுத்து விட்டு காத்திருந்தாராம். ஆனால் அவருக்கு பிரதியீடாக ரோல்சும் வழங்கப்படவில்லை. பணமும் வழங்கப்படவில்லை.

இதற்கு நான் எப்படி நியாயம் சொல்ல முடியும்.



# வருடம் லீப் வருடமா எவ்வாறு கணிப்பிடப்படுகிறது

உலகில் இன்று கிட்டத்தட்ட 40 வீதமான கலண்டர்கள் பாவனையில் உள்ளன. இவை ஆங்கிலக் கலண்டர் இந்துக் கலண்டர், இஸ்லாம் கலண்டர், ஸ்ரீபுறு கலண்டர் (**Hebrew caledar**) ,சீனக்கலண்டர் போன்றவற்றைக் கூறலாம். இல்லை எல்லாமே சூரியனை அல்லது இவை இரண்டையும் மையமாக வைத்தே உருவாக்கப்பட்டிருக்கின்றன. இக்கலண்டர்களில் ஆங்கிலக்கலண்டர் என்று சொல்லப்படும் கிறெகொரியன் கலண்டரே இன்று உலகம் முழுதும் உபயோகிக்கப் படுகின்றன.

அனேகமான சமயசம்மந்தமான விடயங்கள், பண்டிகைகள் என்பவற்றிக்குப் பொதுவாக அந்தந்த சமயத்துக்குரிய அல்லது கலாச்சாரத்துக்கு அமைவான கலண்டர்களையே உபயோகிப்பது வழக்கம். ஆனால் எல்லோரும் பொதுவான அன்றாட வாழ்க்கை விடையங்களுக்கெல்லாம் கிறெகொறியன் கலண்டரையே உபயோகிப்பது வழக்கமாகும்.

நாம் உபயோகிப்பது இந்த கிறெகொறியன் கலண்டரில் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை ஒருநாள் கூடுவது எனக்குத் தெரியும். அதாவது நான்கு வருடங்களுக்கு ஒருமுறைதான் பெப்ரவரி 29ம் திகதி வரும்.

ஒருநாள் கூடவரும் அந்த வருடத்தை லீப் வருடம் (**Leap Year**) என்று அழைப்பர். இந்த லீப் வருடமானது பெரும்பாலும் ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கு ஒருமுறை வருமெனினும் இதுவராமல் விடக்கூடிய சிலவிசேட சந்தர்ப்பங்களும் உண்டு.

அப்படியானால் ஒருலீப்வருடத்தை எப்படித் தீர்மானிப்பது? லீப்வருடத்தினை தீர்மானிக்க பின்வரும் முறையை கையாள வேண்டும்.

1.ஒருகுறிப்பிட்ட ஆண்டு நான்கால் வகுக்கப்படக் கூடியதாக இருத்தவல் வேண்டும்.
2.நான்கால் வகுக்கப்பட்டாலும் அது 100ரால் வகுக்கப்பட்டால் அது லீப்வருடம் இல்லை.
3.ஆனால் நான்கால் வகுக்கப்பட்டு அது 400ராலும் வகுக்கப்படுமேயானால் அதுலீப் வருடம் ஆகும்.

இதற்குக்காரணம் கிறெகொறியன் கலண்டர்,1,46,097 நாட்களைக் கொண்ட ஆகும். இது ஒருவருடத்தில் 365,2425 நாட்களைக் கொண்ட 400 வருட சுழற்சி முறைக் கலண்டராக வரையறுக்கப் பட்டுள்ளது.

ஆனால் நாம் சமாதானமாக 365 நாட்களையே ஒருவருடமாக எடுத்துக்கொள்கின்றோம். அப்படியானால், 0.2425 நாட்கள் ஒவ்வொரு வருடமும் புறக்கணிக்கப் படுகின்றது.

அதற்காகத்தான் நான்கு வருடத்திற்கு ஒருமுறை ஒருநாள் கூடப்படுகின்றது. எனினும் ஒவ்வொரு வருடமும் 0.2425 நாட்களின் படி நான்கு வருடங்களும் 0.97 (0.02425x 4=0.97) நாட்கள் புறக்கனிக்கப்படுகின்றன.

ஆகவே நாம் ஒருநாளை புறக்கணிப்பதன் மூலம் 0.03(1-0.97=0.03) நாட்கள் அதிகமாகக் காட்டப்படுகின்றது. இதைச்சரி செய்வதற்காக நாம் ஒவ்வொரு 100 வருடத்திற்கும் ஒருமுறை 0.25 (0.03x25)=0.25) நாட்களைப்புறக்கணிக்கின்றோம்.

ஏனெனில், 100 வருடங்களில் 25 லீப் வருடங்கள் இருக்கின்றன. எனவே இதைச்சரி செய்வதற்காக ஒவ்வொரு 400 வருடங்களுக்கு ஒருமுறை அது 100வருடங்களின் மடங்காக இருந்து ஒருநாளைக் (0.25x4=1) கூட்டுகின்றோம்.

ஜெயானந்தன்

தேவை, ஏழைகளைச் சீர்திருத்துகிறது; திகட்டும் மிகுதி,செல்வரைச் சீர்திருத்துகிறது. - டேஸிட்டஸ்

# தமிழரின் ஜனநாயக உரிமை மீண்டும் நிராகரிக்கப்படுமா?



இரண்டாவது மிலேனியத்தின் நாளாவது வருடத்தில் நடைபெற்று முடிந்த மூன்றாவது தேர்தலில் எந்த ஒரு கட்சியுமே அரசமைக்கக்கூடிய அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளவில்லை. இப்போது அரசு அமைப்பதற்கு ஏனைய கட்சிகளுடன் பேரம் பேசுவது ஒருபுறமிருக்க, புதிய அரசுக்குரிய பிரதமரைச் தேர்ந்தெடுப்பதிலேயே தமக்குள் முரண்படத் தொடங்கிவிட்டனர். அதுமட்டுமல்ல பிரதமரின் பதவியேற்பு வைபவத்தையே பகிஸ்கரித்ததன்மூலம் தமது முரண்பாட்டை வெளியிட்டுள்ளனர். சுதந்திர முன்னணியினரின் கூட்டுக் கட்சிகளை சுதந்திரக்கட்சியினரும் ஜே.வி.பியினரும் இனிவரும் காலங்களில் அதுவும் மூன்று மாதங்களுக்குள் விவசாயிகளுக்கான மானியங்களை வழங்குவதற்கும் 50.000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியுமா என்பதும் கேள்விக் குறியாகிவிட்டது. சமாதானப் பேச்சு வார்த்தை தொடரமுடியாவிட்டால் ஏற்கனவே உதவிவழங்கும் நாடுகளால் வாக்களிக்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்காது போகும் ஒரு சூழ் நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் தலைமேல் நூலிழையில் தொங்கும் வாள் எப்போது அறுந்து விழும் என்பது தெரியாத ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இது ஒருபு[illegible]ருக்க இரண்டு தேசங்களின் தே[illegible]களாக இம் முறை தேர்தல் நடந்துமுடிந்துள்ளது. 1956 ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த தேர்தலைத்தொடர்ந்து யூன் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட "சிங்களம் மட்டும் அரசுகரும மொழி" சட்டமூலத்தின் விவாதத்தின் போது இடது சாரித் தலைவர்களில் ஒருவரான கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா குறிப்பிட்ட "ஒரு மொழி எனின்" இரு தேசங்களும் இரு மொழி எனின் ஒரு தேசமும் என கோடிகாட்டியிருந்த விடயம் 48 வருடங்களின் பின் தெற்கில் எந்த ஒரு கட்சியையும் பெரும்பான்மையில்லா நிலைமைக்குள் இந்த மக்கள் கொண்டு வந்துள்ளனர்.

மீண்டுமொரு வரலாற்றுத் தவறினை சிங்களப்பேரினவாதம் தமிழ்மக்களுக்கு இழைக்குமா? என்பதே இப்போதுள்ள கேள்வியாகும். மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தல் யதார்த் தமாகியுள்ளதை வரலாறு நிரூபித்துள்ளது. வடகிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழர் தேசியம் தமிழர் தாயகம் தமிழ்மக்களுக்கான சுயநிர்ணய உரிமைகள் என்பவற்றை வலியுறுத்தி புலிகளே தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் எனும் கோரிக்கையை சட்டமூலமான தேர்தல் ஒன்றின் மூலம் தமிழ் மக்கள் நிரூபித்துள்ளனர். இன்னொருபுறம் மூலம் சிங்களம் மட்டும் அரசகரும மொழிப்பிரகடனத்துடன் நாடாளுமன்றத்துக்கு வந்த பண்டாரநாயக்கா அன்றைய தமிழ் மக்களின் கோரிக்கையை தமிழுக்கும் சமஅந்தஸ்துடைய சமஷ்டி அமைப்பை சனநாயகம் என்ற போர்வையில் பெரும்பான்மை[illegible]த்தை கொண்டு நசுக்கியதுட[illegible]வழிப் போராட்டத்தின் மூலம் த[illegible]தீர்வைத் தெரிவித்த தமிழ்த்தலைவர்களை மக்கள் பிரதிநிதிகளின் குருதியின் மேல் நின்று 'கோலியாத்தனத்'துடன் நாடாளுமன்றத்தில் கொக்கரித்து கேலி செய்ததை போன்று இன்று நாற்பத்தெட்டு ஆண்டுகளின் பின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தில் செய்யமுடியாதபடி கல்லைக் கவணில் வைத்து கோலியாத்தின் நெற்றிப்பொட்டில் அடித்து வீழ்த்தி விட்டு அவனுடைய பட்டயத்தையே (வாளை) உருவி தமிழ் மக்களின் தாவிது பேரின வாதிகளுக்கு சிம்மசொப்பனமாகிவிட்டான். இப்போது தமது எல்லைகளுக்குள் நின்று கொண்டு மட்டுமே கூக்குரலிட அவர்களால் முடிகிறது.

தமிழ் மக்களின் தமிழர் தேசியம், தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான தமிழ் மக்களின் சனநாயக உரிமையுடன் [illegible]டிய கோரிக்கை பெரும்பான்மைப் பலத்துடன் சிங்களத்துக்கும் சர்வதேச அரங்குக்கும் முன்வைக்கப்பட்டுள்ளது. இதை நிராகரிப்பதன்மூலம் மீண்டும் இரத்தத்தீவாக மாற்றும் பொறுப்[illegible] பேரினவாதிகள் கையேற்பார்களா என்பதை வரலாறு கூறும்.

இனப்பிரச்சினைக்காக அரசியல் தீர்வு எட்டப்படுவதற்கான பிரதான தடைக்கற்களே இப்போது ஐக்கிய மக்கள் சுத்நதிர முன்னணி அரசு அமைக்கப்படுவதில் முக்கிய தாங்கும் தூண்களாக அமையப் போகிறது. ஒன்று ஜே.வி.பி. இரண்டாவது ஜாதிகஹெல உறுமய தமிழ்மக்களுக்கான நீதியான தீர்வொன்றுக்கான நடைமுறையில் இரண்டு கட்சிகளுமே ஒரே மாதிரியான கருத்தையே கொண்டிருக்கின்றன. தேர்தல்முடிந்த பின் தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வு தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ஜாதிகஹெல உறுமயவின் தலைவர்களில் ஒருவரான உடுவே தம்லோக தேரர்' We are combletely against federalism which is a formula to diride what is united எனத்தெரிவித்தார். சமஷ்டி அமைப்புக்கு முற்று முழுதாகவே எதிராக இருக்கும் இவர்கள் ஐக்கிய இலங்கைக்குள் ஒற்றையாட்சிக்குள் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். எனக் கூறிக்குட்டையைத்தொடந்தும் குழப்பிக் கொண்டிருப்பார்கள் இவர்களுக்கு கைகொடுப்பதற்கு காலத்துக்குக் காலம் தமிழர் பெயர்களில் ஐந்தாம் படையாளர்கள் (fifth columnist) கிடைத்துக் கொண்டிருப்பார்கள் சமஷ்டிக்கு எதிரான பேரினவாதிகளின் 'ஐக்கியம்' என்பது சோல்பரி பிரபு காலத்தில் இருந்து பேரின வாதிகளால் காலத்துக்குக்காலம் தமிழ் மக்களின் குரல் வளைகளைக் கட்டியிறுக்கி வந்ததன் மூலம் உருவாக்கப்பட்டு இலங்கைத்தீவின் வரலாறாகிவிட்டது என்பதை நீதியும் சமத்துவமுமான ஒரு சமூக அமைப்பை இலங்கைத்தீவில் வேண்டிநிற்பவர்கள் நன்கு அறிவார்கள்.

**அ. அன்ரன்அன்பழகன்**

---



# வரலாற்றுச் சிறப்புமிக்க ஜெனிவா பொங்கு தமிழ்

**க. ஜெயசீலன்**

பொங்குதமிழ் நிகழ்வு என்பது ஆரம்பத்தில் தமிழ் மக்களின் உணர்வலைகளையும் அபிலாசைகளையும் வெளிக்கொணர்வதற்காக யாழ்பல்கலைக் கழகத்தில் முதன்முதலில் பெரும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பிக்கப்பட்டு தமிழர் தாயகம் எங்கும் நடாத்தப்பட்டு தற்போது நாடளாவிய ரீதியில் தாயக தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பிய நாடுகளிலும் நடைபெற்றுவருகிறது.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் முன்றலில் தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து எல்லா நாடுகளிலும் வாழும் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் ஒன்று கூடி தங்களது உணர்வலைகளை வெளிக்காட்டியுள்ளனர்.

நடந்து முடிந்த சிறிலங்காவின் 13வது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழீழத்தில் வாழும் தமிழ் மக்கள் தமது உரிமையை வென்றெடுப்பதற்காக தாயகம், தேசியம், சுயநிர்ணயம், என்ற கோட்டுபாடுகளை வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்று அவர்களுக்கு ஆதரவாகப் பெருந்திரளாகத்திரண்டு சென்று எப்படி வாக்களித்து பெரும் வெற்றியை பெற்றுத்தந்தார்களோ அதே போன்று, இங்கு வந்து வாக்களித்து தமது ஆதரவினை வெளிக்காட்ட முடியாவிட்டாலும் புலம்பெயர்ந்த நாடுகளில் அதேசமயம் அதேகோட்பாடுகளை முன்நிறுத்தி அதற்கும் மேலாக தமது தலைவன் "சூரியதேவன் பிரபாகரனே" என்ற பல்வேறு கோசங்களைமுன்வைத்து, தேசியத்தலைவரின் உருவப்படத்தினையும், தேசியக்கொடியினையும் ஏந்தி தங்களது உணர்வெழிச்சிகளையும் தமது பங்களிப்பினையும் ஐ.நா.மன்று அதிர முழக்கமிட்டுள்ளனர்.

இதுவரைகாலமும் தாயகத்தில் நடைபெற்ற எல்லாப் பொங்கு தமிழ் நிகழ்வையும்விட இதுவே வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக அமைந்துள்ளது.

ஏனெனில், இதற்கு முன்னர் தமிழீழத்தில் நடைபெற்ற பொங்குதமிழ்நிகழ்வுகளை உலக நாடுகள் எட்டிநின்றே பார்க்கக்கூடியதாக இருந்தன.

ஆனால் இந்தப் பொங்குதமிழ் நிகழ்வு அவ்வாறில்லாது அவர்களுக்குத் தெளிவாக விளங்கிக்கொள்ளும் அளவுக்கு அவர்களுக்கு முன்றலிலேயே நேர் எதிராக மிகவும் பிரமாண்டமான முறையில் நிகழ்த்தப்பட்டுள்ளது.

இதுவே தமிழ் மக்களால் விடுதலைப்புலிகளுக்கு அளிக்கும் மிகப் பெரிய கௌரவமும்கூட.

தற்போது நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின் பிரதமர் கதிரையில் அமர்வதற்காக ஏங்கிக் காத்திருந்த சனாதிபதியின் ஆலோசகரான லக்ஸ்மன் கதிர்காமர் வெளியுறவு அமைச்சராக இருந்தகாலங்களில் உலக நாடுகளுக்குச் சென்று விடுதலைப் புலிகளைத் தடைசெய்யவேண்டும் அவர்களை பயங்கரவாதப்பட்டியலில் சேர்க்கவேண்டும் அவர்கள் பயங்கரவாதிகள் என்ற போர்வையை அங்கு போர்த்தி விட்டுவந்தார்.



ஆனால் புலம்பெயர்ந்துவாழும் தமிழ் மக்கள் இப்பொங்குதமிழ் மூலம் அங்கு போர்க்கப்பட்டிருந்த போர்வையை கிழித்தெறிய கோசமிட்டுள்ளனர் என்றே கூறவேண்டும்.

ஆரம்பகாலங்களில் தமிழ் மக்கள் எங்கு சென்றாலும் கையில் விலங்கிடப் பட்டவர்களாகவே கருதப்பட்டனர். ஆனால் இப்போது அப்படியல்ல. விலங்கினை உடைத் தெறிந்துவிட்டு தமக்கென்றொரு நாடு, தமக்கென்றொரு தலைவன் இருப்பதை அங்கீகரிக்கவேண்டுமென்பதற்காக தாயகம், தேசியம், சுயநிர்ணயம். போன்ற கோட்பாடு முன்நிறுத்திப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் போராட்டத்தின் படிகளில் ஒன்றுதான் ஜெனிவாவில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வும் கூட.

இந்தப் பொங்குதமிழ் நிகழ்வு மூலம் புலம் பெயர்ந்த தாயகமக்கள் தமது அரசியல் அபிலாசைகளை உலகுக்கு உரத்து முழக்கமிட்டுள்ளனர்.

இந்த மக்களின் உணர்வுகளை சனநாயக காப்பிடமாக கூறும் ஐ.நா.மன்றின் வாசல்களை நிச்சயம் தொட்டிருக்கும்.

# எப்போது அவதானிக்கலாம்...? முதற்கல் யாரிடமிருந்து...?

மந்தம் என்ற சொல்லுக்கு பல பொருள்களும் விளக்கங்களும் இருக்கலாம். அவையெல்லாவற்றையும் விட மிகச் சரியான உதாரணமாக அல்லது விளக்கமாக இருப்பது, கிளிநொச்சி - டிப்போச்சந்தியிலிருந்து கோணாவில் செல்லும் வீதிப் புனரமைப்பு வேலைகள்தான். அந்தளவுக்கு அந்தவேலை மிகமிக மந்தமாகவே நடக்கிறது.


துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடக்கின்ற இந்தவேலை தொடங்கப்பட்டு ஏறக்குறைய நான்கு மாதங்களாகின்றன. இவ்வளவுக்கும் புனரமைப்பு நடக்கின்ற இந்தவீதியின் ஆகக்கூடிய நீளம் ஐநூறு மீற்றர் மட்டுமே. ஐநூறுமீற்றர் வரைதான் கல்பரவி தார் ஊற்ற ஏற்பாடு. மிகுதி கிறவல் பரவி பின்பு அதன்மேல் தார் ஊற்றப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இப்போது கிறவல்மட்டும் வீதிநெடுகப் பறித்துப் பரவப்படுகிறது.

முதல் ஐநூறு மீற்றரின் வேலைகள் ஏனோ தெரியவில்லை நகராமலே நீண்ட நாட்களாகக் கிடந்தன. பின்பு மெதுவாக இப்போது ஊரத்தொடங்கியிருக்கிறது.

போக்குவரத்து நெருக்கடிகளும் சன நடமாட்டம் அதிகமாகவும் இருக்கின்ற கிளிநொச்சியின் வீதிகளில் முதலாவது இதுதான்.

சந்தை, பிரதான பஸ்நிலையம், தொழில்நிலையங்கள், கடைத்தெரு எல்லாவற்றோடும் கிளிநொச்சிக்கு மேற்கே செல்லும் கிராமங்கள், தொலையூர்கள் எல்லாவற்றுக்குமான வீதி இது.

இவ்வளவு நாளும் புழுதி மயமாகவும் குண்டும் குழியுமாக இருந்த வீதி இப்போது புனரமைக்கப்படுவது எல்லோராலும் வரவேற்கப்படுவதே. ஆனால் அது மகிழ்ச்சியளிப்பதாகத் தானில்லை. போக்குவரத்தைக் குழப்புவதாகவே வழிநெடுகவும் கிறவல் கொட்டப்பட்டுள்ளது. பஸ்நிலையத்தின் முன்னுள்ள பகுதியில் நீண்டநாட்களாக கல்குவிக்கப்பட்டிருந்தது. பிறகு வீதி



தடுக்கப்பட்டு சிலவேலைகள் நடந்தன. இப்போது அதையும் காணவில்லை. வீதியோ ஒழுங்கற்று அரைகுறையாகக் கிடக்கிறது. படுகின்ற சிரமமோ மிகக்கூடுதல்

தினமும் ஆயிரக்கணக்கான மக்களும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் நடமாடும் இந்த வீதியை இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி வைத்திருப்பது?

இந்த வீதிதொடர்பாக விசாரித்த போது ஒப்பந்தக்காரர்களுக்கும் வேலைக் கண்காணிப்பாளர்களுக்குமிடையே நிகழும் முடிவற்ற உடன்பாடின்மைகள்தான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

இது இந்த வீதிக்குமட்டும் உரிய பிரச்சினையல்ல. இவ்வாறான பிரச்சினைகள் பொதுவாகவே அநேக அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் இப்போது அதிகமாகக்காணப்படுகின்றது.

ஒப்பந்தக்காரர்கள் ஒரு விதமாகவும் வேலைக்கண்காணிப்பாளர்கள் இன்னொரு விதமாகவும் ஒரு வேலைத்திட்டத்தை அணுகும்போது முரண்கள் தோன்றுகின்றன. ஒரு வேலையை விரைவாகவும் நேர்த்தியாகவும் செய்வதற்கு இரண்டு தரப்பினரும் முதலில் பொது உடன்பாட்டுக்கும் பொதுத் திட்டமிடலுக்கும் வரவேண்டும். இல்லையென்றால் வேலைக்கு விதிக்கப்படும் காலப்பகுதி முடிந்தாலும் வேலை முடியாது.

சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரும் ஒருவர்கூற்றை ஒருவர் ஏற்கமுடியாது என்று வாதிடுவது மட்டும் பிரச்சினையைத் தீர்க்காது. ஒருவரை ஒருவர் சந்தேகிப்பதும் பொருத்தமானதல்ல.

இது எங்களுடைய அபிவிருத்திப் பணிகளில் பாரிய வீழ்ச்சியையும் பெருத்த குறைகளையும் உருவாக்கிவிடுகின்றது.

இதற்குப்பதிலாக வேலையொன்றுக்கான கேள்வி கோரி, ஒப்பந்தம்



செய்ததன் முன் முறைப்படி உரிய காலத்துள் வேலைகளைச் செய்து முடித்தால் எந்தப் பிரச்சினையும் இல்லையே. ஒருவேலை தொடங்கி அதை முடிப்பதற்குரிய கால அவகாசம் அந்தவேலை ஒப்பந்தவிதிகளில் அடங்கியிருக்கிறது. அப்படியிருக்கும்போது பிறகேன் இந்தச் சுத்துமாத்துகள் என்பதுதான் புரியவில்லை. சிலவேலைகள் மக்களுக்கு இடஞ்சலற்ற பகுதிகளில் நடக்கும். அப்படி நடந்தால் மக்களுக்குச் சிரமம் குறைவு. ஆனால் பலவேலைகள் மக்கள் புழங்குமிடங்களில் அல்லது கூடுமிடங்களில் நடக்கும்போது அதனால் மக்களுக்கான சிரமங்கள் நிறைய ஏற்படுகின்றன. அந்த



வேலைகள் மேலும் தாமதிக்கப்பட்டால் இந்தச் சிரமங்கள் இன்னும் கூடிவிடுகிறது.

வீதிப்புனரமைப்பு, பாலம் கட்டுதல், மருத்துவமனைப் புனரமைப்பு மற்றும் புதிய அபிவிருத்திகள், பாடசாலைக் கட்டடங்கள் என்று இவை நிறையவுண்டு.

உரிய காலப்பகுதிக்குள் வேலைகள் முடிக்கப்படாவிட்டால் பொதுமக்களுக்கான சிரமங்களோடு, சீரற்ற காலநிலைக்குள் அந்தவேலை சிக்கிவிடும் அபாயமுண்டு. அப்படிப் பருவகால மாறுதலால் மோசமான சீரழிவுக்குள்ளானவேலைகள் பலவற்றை பல இடங்களில் நீங்களும் பார்த்திருப்பீர்கள். பலவேலைகளை இரவுகளில் செய்துமுடிக்கலாம். அப்போது இடஞ்சல்களும் இருக்காது.

ஒப்பந்தகாரர்கள் பலவேலைகளையும் பொறுப்பெடுக்கிறார்கள். அப்படி எடுக்கும்போது அந்தந்த விதிமுறைகள் எந்தளவுக்கு என்ன அடிப்படையில் பின்பற்றப்படுகிறது என்பது சரியாகத்தெரியவில்லை. ஆனால் ஒரு ஒப்பந்தகாரர் எவ்வளவுவேலைகளையும் எவ்வாறான வேலைகளையும் பொறுப்பெடுக்கலாம் என்றாலும் அந்தந்த வேலைகளைச் செய்யக்கூடிய தொழில்நுட்ப அறிவுடைய உத்தியோகத்தர் ஊழியர் கட்டமைப்பைக்கொண்டுள்ளாரா என்று முதலில் பார்க்கவேண்டும். இந்த அவதானிப்பு அரைவாசிப் பிரச்சினையை அடிப்படையிலேயே தீர்த்துவிடும் அவ்வாறில்லாமல் நிர்மாணி அங்கத்துவம் ஒரு ஒப்பந்த காரருக்குப் போதாது.

அத்தோடு கண்காணிப்பாளர்கள் எப்போதும் திணைக்களத்திலிருந்தோ இலாகாவிலிருந்தோ போகும் போது இரண்டு தரப்புக்குமிடையே நிகழ்கின்ற அந்தஸ்து, அதிகாரப் போட்டிக்கு ஒரு நடைமுறைச் சாத்தியமான தீர்வையும் காணவேண்டும்.

அண்மையில் ஒரு கட்டட வேலையை, சம்பந்தப்பட்ட துறைசார்ந்த அதிகாரி பார்த்து அனுமதி அளித்து தொடரும்படி கூறிச்சென்றிருந்தார். அந்த வேலை தொடர்ந்துகொண்டிருந்தபோது அதுதொடர்பாக கொடுக்கப்பட்ட வேறொரு புகாரின் அடிப்படையில் அந்தவேலை வேறொரு உயர்அதிகாரியினால் இடைநிறுத்தப்பட்டு விட்டது. துறைசாராத உயர் அதிகாரி தனக்கிருக்கும் அதிகாரத்தையே பயன்படுத்தி அந்த வேலையை இடைநிறுத்தினார் எனச்சொல்லப்படுகிறது. இதனைக் கேள்விப்பட்ட தபால் ஊழியர் ஒருவர் சொன்னார், இதைவிட அக்கறையோடு தங்களுடைய நிரந்தர நியமனப்பிரச்சினைக்கும் ஒரு தீர்வுகண்டால் நல்லது. பார்க்கவேண்டிய வேலைகளைப்பற்றி ஒருவரும் கவனிக்கிறார்களில்லையே என்று. பின்னர் துறைசார் அதிகாரிக்கும் உயர் அதிகாரிக்குமிடையே விவாதம் நடந்தே நிலைமை சுமூகமாகிய

**வெளிவாசல் பாலன்**

தாம் துறைசார் பிரச்சினைகளை அந்தந்த துறையோடு சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து பேசி முடிவெடுக்கும்போது பல பிரச்சினைகள் இலகுவாகிவிடும். வேலைகளும் விரைவாகவும் சுலபமாகவும் முடிந்துவிடும்.

இப்பொழுது வடகிழக்கில் நிகழ்கின்ற அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு வேலைகளில் அதிகமானவை தொண்டர் அமைப்புகளின் உதவியோடானவை. சில உலகவங்கி, உலக சுகாதார ஸ்தாபனம், உலக உணவு நிறுவனம் போன்றவற்றாலானவை. இவற்றின் நிதி ஒதுக்கீட்டில், அல்லது திட்டமிடலில் அல்லது அனுசரணையில் நடக்கும் வேலைகள் ஒப்பந்தம் செய்வதிலிருந்து அவ்வேலைகளைப் பூர்த்தி செய்வது வரையில் ஒழுங்கான நடைமுறையை அவை கோருகின்றன.

ஆனால் எங்கள் சூழலில் நிகழும் இழுபறிகளால் அந்நிறுவனங்கள் களைப்படைந்து போகின்றன என விடயமறிந்த ஒருவர் ஒருதடவை, உரையாடலின்போது வருத்தத்துடன் சொன்னார்.

ஒரு சமயம் ஒரு குறிப்பிட்ட வேலைக்கான கேள்வி கோரல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள அந்தவேலைக்கான ஒப்பந்தகாரர் எவரும் குறிப்பிட்ட நாளன்று குறித்த நேரத்துக்கு வரவில்லை. ஒப்பந்தகாரர்களிடையே ஏற்பட்டிருந்த தீர்மானப் பிரச்சினைகளால் குறித்தவேலைக்கு ஒப்பந்தகாரர்கள் வரமுடியாமற்போய்விட்டது. ஒப்பந்தத்தைச் செய்வதற்காகக் காத்திருந்த என்.ஜீ.ஓ. வின் பிரதிநிதிகுறித்த நேரத்துக்கு கோவையை மூடிவிட்டாராம் அப்படியிருந்தும் அவ்வேலைக்கான துறைசார்ந்த அதிகாரி மேலும் பதினைந்து நிமிடங்கள் வரையில் காத்திருந்தும் பலனில்லாததால் வருத்தத்துடன் அந்தவேலையைக்



கைவிடவேண்டி வந்ததாகச் சொல்லப்படுகிறது. பல மில்லியன் ரூபாய்கள் கவனக்குறைவாலும் சரியான தீர்மானமின்மையாலும் பொறுப்புணர்வற்ற தனத்தாலும் வீணே இழக்கப்பட்டது. இப்படிப்பல லட்சம் ரூபாய்கள் வருடா வருடம் திரும்பிச்செல்கின்றன. என்பது ஒரு நிரூபிக்கப்பட்ட உண்மை.

பொதுவாகவே வடகிழக்குக்கான அபிவிருத்தியில் பாரிய வெட்டினை அரசாங்கம் செய்கிறது. எப்டியோ தப்பியொட்டிவரும் திட்டங்களையும் நிதியினையும் கருணைக் கடாட்சமாக என்.ஜி.ஓ.கள்அருளுகின்ற அபிவிருத்திகளையும்கூட விட்டுவிட்டால் வேறு என்னதான் செய்யமுடியும்?

ஒரு உதாரணமாக -

நிக்கொட் நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் என தலா மூன்று மூன்றாக ஆறு பாலங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டது.

இப்போது ஒரு பாலம்மட்டும் வேலை முடிந்திருக்கிறது. இந்த ஆறு பாலங்களும் ஒரேநேரத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஒரேகாலத்தில் முடிக்கப்பட வேண்டியவை. ஆனால் ஏனைய ஐந்தும் இன்றும் முடியாமல் இழுபடுகின்றன.

இவை ஒப்பந்தகாரர் - வேலைகள் - கண்காணிப்பாளர்கள் உயர் அதிகாரிகள் பொதுமக்கள் சம்மந்தமான பிரச்சினைகளில் ஒன்றிரண்டு மட்டும். பல பிரச்சினைகள் எங்குமுண்டு.

இவ்வாறெல்லாம் நீள்கின்ற பிரச்சினைகள் குறித்து மிகவும் அவசரமான ஒரு தீர்வு அவசியம்தேவை. தேச நிர்மாணம் குறித்த விழிப்புடன் இயங்கும் நாம் இதுபற்றி விரிவாக சிந்திக்கவேண்டும். பொதுமக்கள் நலனும் எதிர்காலவளமும் இணைந்த சகாப்தம் நிர்மாணிகள் கையில் என்பதை அவர்கள் நிரூபிக்கவேண்டும்.

இதை எப்போதிருந்து அவதானிக்கமுடியும்? முதற்கல் யாரிடமிருந்து...?

உதிக்கும் சித்திரைப்புத்தாண்டில் எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

ரீ.வி, டெக் றேடியோ, மணிக்கூடு
அழகு சாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்

அனைத்தையும் பெற்றுக் கொள்ள
அன்றும் இன்றும் என்றும்
நன்மதிப்பை பெற்று விளங்கும்
ஒரே ஸ்தாபனம்.

ராஜீ ஸ்ரோர்ஸ்

190 நாடுகளில் இருந்து விரைவாகப்
பணத்தைப் பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்

இல:67,69 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P-0094-21-2225224


WESTERN UNION | மணி டிரான்ஸ்ஃபர் SM
உலகெங்கும் பணத்தை பெற விரைவான வழி. SM

பணம் மாற்றும்
வாடிக்கையாளர்களுக்கு
அன்பளிப்புப் பொருட்கள்
வழங்கப்படும்.

(சி-9513)



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

சிறிமாரி
நகைமாடம்
தங்க வைர நகை வியாபாரம்

இல:49, கே.கே.எஸ் வீதி,
[சத்திரச்சந்திக்குஅருகாமை]
யாழ்ப்பாணம்.

☎: 021-222 7164

(சி-9515)



அனைவருக்கும் தாரண சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்!



- புதிய வடிவமைப்பில் நவீன கண்ணாடிகளைப்பெற்றிட...
- முக அமைப்பிற்கேற்ப சங்குப்பற்களைப் பொருத்திட... மிதப்புப்பற்களுக்குக் கிளிப் பொருத்திக்கொண்டிட கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்.

எரிக் கணேஷ்
பல் கட்டும் இடமும்
மூக்குக்கண்ணாடி அகமும்

கிளைகள்:
சுன்னாகம்,
கொக்குவில்சந்தி.

564,566,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2222486

(சி-9514)



அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



- சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
- கூறைச் சேலைகள்
- பட்டு வேட்டிகளுக்கு

யாழ்நகரில்
கைராசியான நிறுவனம்

சீமாட்டி புடைவைக்கடல்


(சி-9516)
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021-2222196




எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்!
(அனைத்தும் ஒறிஜினல் JAPAN)

புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

SHAN MULTY TRADE CENTRE




SONY,NATIONAL,T.V fs;(14'',19'',20'',21'',25''2 34'') VIDEO DECK,SONY,TECHNICS,
KENWOOD,PIONEER செற்றப் றேடியோக்கள், AMP IERS,(PIONEER,KENWOOD,YAMAHA,
DENON,SANSUI,MARANIZ),
புறயெக்ரர் என்பனவும் அதற்குரிய உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு.



(சி-9517)
No.150,K.K.S Road,Jaffna. T.P.222 7442



அனைவருக்கும் எமது
சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



கிளிநொச்சி
நகரிலும்
மல்லாவி
நகரிலும்

எமது காட்சியறையில்
உங்கள் விருப்பத்திற்கு
ஏற்ப தெரிவு செய்து கொள்ளலாம்.



இந்தியாவில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும்
இறக்குமதி செய்யப்பட்ட மங்கையர் மனங்கவரும்
ஆடைத் தினிசுகளுக்கும்
சிறுவர் முதல் பெரியோர் வரை அணியக்கூடிய
றெடிமேட் ஆடை வகைகளுக்கும் அழகுசாதனப்பொருட்களுக்கும்..
நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய கைராசியான ஸ்தாபனம்

முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை


யாழ்சாலை,
கிளிநொச்சி.

யோகபுரம்,
மல்லாவி.

(சி-9518)

# குழந்தைநாதம்

## திருப்தியற்ற ஆடு!



கந்தன் ஆடுமேய்த்து பிழைத்துவந்தார். அவருக்கு மூன்று மகன்கள். கந்தனுக்கு வயதாகிவிட்டதால் முன்பு போல் ஆட்டு மந்தையை மேய்த்துவர முடியவில்லை. மூத்தமகனை அழைத்தார். "மகனே! இன்று முதல் நீதான் ஆடு மேய்த்துவர வேண்டும். ஆடு மேய்ப்பது என்பது சுலபமாகத் தோன்றலாம். ஆனால் நினைக்கிறபடி அவ்வளவு சுலபமல்ல. புல் உள்ள இடத்திற்கு ஓட்டிச்செல்ல வேண்டும். எப்போதும் ஆட்டு மந்தைக்கு அருகிலேயே காவலாக இருக்கவேண்டும். சற்று அசந்து மறந்தால் நரியோ, ஓநாயோ ஆட்டுக்குட்டிகளை இழுத்துச் சென்றுவிடும். இருட்டுவதற்குள் வீடு திரும்பிவிட வேண்டும். அடுத்தவர்கள் வயலில் புகுந்து மேய்ந்துவிடாமல் கவனமாக இருக்க வேண்டும்" என்று சொல்லி அனுப்பிவைத்தார்.

அவனும் உற்சாகமாக ஆடுகளை ஓட்டிக்கொண்டு சென்றான். நன்கு மேய்த்து மாலை வீடு திரும்பினான். ஆடுகள் நன்றாக வயிறார புல் மேய்ந்தனவா? தண்ணீர் குடித்தனவா? எண்ணிக்கை சரியாக இருக்கிறதா என்று மகனிடம் கேட்டுவிட்டு ஆட்டு மந்தைகளின் தலைவனாக இருந்த தலைமை ஆட்டிடம், "நீங்கள் நன்றாக புல்மேய்ந்தீர்களா? என் மகன் உங்களை நல்லபடியாகக் கவனித்துக்கொண்டானா? என்று கேட்டார் கந்தன்.

"அதை ஏன் கேட்கிறீர்கள்? புல் இல்லாத இடத்தில் எங்களை மேயவிட்டால் நாங்கள் எதை மேய்வது? அவன் பாட்டுக்கு மரத்தடியில் படுத்துத்தூங்கினான். நரிக்கும் ஓநாய்க்கும் எங்கே இரையாகிவிடுவோமோ என்ற பயத்தில் நாங்கள் சரியாக மேயவில்லை. தூங்கி எழுந்ததும் புல்லாங்குழல் வாசிக்க ஆரம்பித்துவிட்டான். பாட்டு என்ன பாட்டு, பாட்டுக்கேட்டால் வயிறு நிரம்புமா? ஆக இன்று நாங்கள் எல்லோரும் பட்டினிதான்" என்றது தலைமை ஆடு.

கந்தனுக்கு மகன் மீது கோபம் வந்து விட்டது.ஆட்டைக்கூட சரியாக மேய்க்கத் தெரியாத நீ இருந்து என்ன பயன்? போ... என் கண் முன்னால் நிற்காதே, என்று அவனை வீட்டை விட்டுத்துரத்தியடித்தார்.

அடுத்த நாள் இரண்டாவது மகனை ஆடு மேய்க்க அனுப்பினார். அவனோ முதல் நாள் அண்ணனுக்கு நேர்ந்த கதியை மனதில் கொண்டு ஆட்டை நல்லபடியாக மேய்த்துத் திரும்பினான்.

ஆடுகளே.. இவன் உங்களைக் கவனித்துக் கொண்டானா என்று கேட்டான் கந்தன்.

"இவன் எங்களைக் கவனித்துக்கொண்டானா? எங்கள் பக்கமே திரும்பவில்லை. மரத்தில் மாங்காய் அடித்துத்தின்பதும் நாவல் பழம் பொறுக்கித் தின்பதுமாக அவனுக்கே நேரம் போதவில்லை. இவனை நினைத்தால் இவன் அண்ணனே பரவாயில்லை என்று தோன்றுகிறது" என்றது ஆடு.

"டேய்" மாங்காய் பறித்துத்தின்னவும் நாவல் பழம் பொறுக்கித்தின்னவுமா உன்னை அனுப்பினேன். போடா உருப்படாத பயலே..." என்று அவனையும் வீட்டை விட்டுத் துரத்திவிட்டார் கந்தன்.

மூன்றாவது நாள் மூன்றாவது மகனை ஆடு மேய்க்க அனுப்பி வைத்தார். அவனும் இரண்டு அண்ணன்களுக்கு ஏற்பட்ட கதியை நினைத்து நன்றாக மேய்த்து வீடு திரும்பினான். கந்தன் ஆட்டைக்கேட்க ஆடு வழக்கம்போல் பல்லவி பாடியது.

"இவனைப்பார்த்தால் அவர்கள் இரண்டு பேருமே பரவாயில்லை. எங்கள் தலைவிதி" என்று அலுத்துக் கொண்டது.

மூன்றாவது மகனையும் துரத்தினார். இனிப்பயல்களை நம்புவதில் பயனில்லை. நாமேதான் மேய்க்க வேண்டும் என்று நினைத்து கந்தனே ஆடுகளை ஓட்டிச் சென்று மேய்த்து வந்தார்.

" ஆடுகளே இன்று உங்களுக்குத் திருப்திதானே?" என்று கேட்டார் கந்தன்.

'என்ன திருப்தி? நீ எங்களைக் கவனித்துக் கொண்டதைப் பார்த்தால் உன் மகன்களே பரவாயில்லை என்று தான் தோன்றுகிறது'' என்றது ஆடு. கந்தனுக்கு ஒரே கோபம்.

"திருப்தியற்ற ஆடே! நான் நன்றாக மேய்த்தும் குறை சொல்கிறாய். உன் பேச்சைக்கேட்டு என் மகன்களைத்துரத்தியடித்துவிட்டேனே'' என்று ஆட்டின் மீது கோபித்து ஆட்டைத் தடியால் ஒரு போடுபோட்டார்.

ஆட்டின் பொய்யான வார்த்தையை நம்பி மகன்களை இழந்துவிட்டமைக்காக அழுதுகொண்டிருந்தார் கந்தன்.

"அப்பா, நீங்கள் சொன்னபடி நாங்கள் ஊரைவிட்டு ஓடிப்போகவில்லை. என்னதான் நடக்கிறது என்று பார்க்கலாம். உண்மை ஒரு நாள் உங்களுக்குத் தெரியவரும் என்பதால் இந்த ஊரில்தான் இருந்தோம். இப்போது உங்களுக்குப் புரிந்துவிட்டது. இனி நீங்கள் கவலைப்படவேண்டாம். நாங்களோ எல்லாவற்றையும் பார்த்துக்கொள்கிறோம்" என்று மகன்கள் ஆறுதல் கூறினர்.

அடுத்த நாள் முதல் ஆடு வாயே திறப்பதில்லை. வாயைத்திறந்தால் பொய்தான் வருகிறது என்பதால் புல் மேயும் நேரம் தவிர மற்றநேரங்களில் வாயை மூடிக்கொண்டது.

## வாரம் ஒரு குறள்



செல்வம் எனும்போது பணம் என்பதனையே குறிக்கின்றது. இச் செல்வமானது எமக்கு எவ்வாறு வருகின்றது? என நாம் பார்க்கும் போது எமது அயராத உழைப்பினாலும். கடும் முயற்சியினாலுமே இப்பணம் என்கின்ற செல்வமானது நம்மிடம் வருகின்றது. நாம் உழைப்பின்றி சோம்பலினால் இருக்கும்போது நம்மைவிட்டு இச் செல்வம் தள்ளிச் செல்கின்றது. இச் செல்வம் இருக்கும்போதே ஒருவனை நாம் பணக்காரன் என்கிறோம். பணம் இல்லாதவனை ஏழை என்கிறோம். இச்செல்வமானது இருந்தும் அச்செல்வத்தை ஒருவராலும் விரும்பப்படாது விடுவதும் உண்டு.

இச்செல்வமானது விரும்பப்படாது இருக்கையில் நடு ஊரினிடத்திலே நச்சு மரம் பழுத்திருப்பதைப் போன்றதாகும்.

அதாவது நச்சு மரத்தின் பழம் எவ்வாறு ஒருவருக்கும் பயன்படாது இருப்பதனைப் போல விரும்பப்படாத செல்வமானது வீணாகப் போய்விடும் என்பதனை.

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத்தற்று"

என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 30

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண | று | த | று | ந் | ம் | ய |
| ஷா | தி | சா | சௌ | தி | உ | கௌ |
| ழ | மு | சூ | மி | ஜ் | ர | கு |
| ச | கி | சு | ட் | ரி | பு | இ |
| ய | ல | ர | க | ற | ந | த் |
| ம் | மி | ச | து | ம் | ன் | ட |
| ன | னி | ஊ | பூ | ன் | ன் | ள |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 28 இன் விடைகள்

01. மல்லிகை.
02. முல்லை.

01. அப்பா.
02. அம்மா.
03. தம்பி.

### சொற்சிலம்பம் - 28 இன் பரிசுக்குரியவர்

சு.மாதவி,
R.C.பாடசாலை,
8ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு

### சொற்சிலம்பம் - 28 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ப.மதுசி
இல-06,கூமாங்குளம்,
வவுனியா.

02. யூ. நேயன்,
சாந்தபுரம்,
இரணைமடு - கிளி.

03. கி. கலைச்செல்வி,
வசந்தநகர்,
திருமுறிகண்டி.

04. செந்.கோகுலன்,
இல-35 ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

05. ம.கோபினா, தரம் -06,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

06. ஸ்ரீ.நிறோஷன்,
பரமாந்தர்வளவு,
கரவெட்டி கிழக்கு,

01. ஆகாயத்தில் தோன்றுபவை?
01) ..............................
02) ..............................
03) ..............................

02. நீர் கிடைக்கும் இடங்கள் இரண்டு?
01) ..............................
02) ..............................

பெயர் :- ..............................
முகவரி :-..............................
..............................

சொற்சிலம்பம்-30
ஈழநாதம்.
யாழ் சாலை,
கிளிநொச்சி.

## சிந்தனை

முதுகினை வளைக்காமல்
முன்னேற முடியாது

தன்னை நல்ல முறையில்
உருவாக்கிக் கொள்கிறவனே
பிறருக்கு வழிகாட்டியாகிறான்.

வீரிய வில்லை வளைக்கலாம்
நேரிய சொல்லை வளைக்க
முடியாது.

அதிகமாகப் பேசும் போதுதான்
அர்த்தங்களைத் தேட
வேண்டியுள்ளது.

கு.தவசீலன்,விசுவமடு.

## தந்தை

பெயர் தொடுத்து எம்மை
பள்ளி செல்ல பக்குவமாய் கொண்டு.
பாடசாலை விடும்வரை
பாதையிலே காத்திருப்பவர் -நாம்
பட்டம் பல பெறவைத்தவர்.
பட்டினி கிடக்கவிடமாட்டார்
பாடுபடுவார் பல வழிகளிலும்.
தோழில் தூக்கிச் சென்று எம்மை
தூர இடங்கள் கொண்டு செல்வார்.
தந்தை.

எஸ்.மஞ்சரி.
கிளிநொச்சி.

## நகைச்சுவை



ஒருவர்:- என்ன அண்ணே! ஏன் 10ரூபா தாளை எரிக்கிறீர்கள்.

மற்றவர்:- அது தம்பி எனது 1ரூபா விழுந்துவிட்டது. இருட்டில தேட ஏலாமல் இருக்கு. அதுதான் வெளிச்சத்துக்காக எரிக்கிறன்.


ந.கங்கா

## சுற்றும் பூமி நிற்கும் வரை

ஏட்டுக் கல்வியை - நீ
போட்டியுடன் கற்றிடனும்
கற்றபடி கண்ணியமாய் நடந்திடனும்
வீட்டுக்கு மட்டுமன்றி
நாட்டுக்காகவும் பல
சேவைகள் புரிந்திடனும்
நற்பண்புகளின் வதிவிடமாகனும்
தீய நடத்தையின் விதிவிலக்காகனும்

சே.சிறாணி தேவிகா

## கைவண்ணம்



பே.பிரியங்கா,
மு/விக்னேஸ்வர
வித்தியாலயம்.

## ஐந்து வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



# புரிதலும் தெளிதலும்

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்காவின் நம்பிக்கைக்குரிய ஆலோசகரும், சந்திரிகா குமாரதுங்கா அமைக்கப்போகும் அமைச்சரவையில் முக்கிய அமைச்சுப் பொறுப்பை ஏற்கவுள்ள வருமான லக்ஸ்மன் கதிர்காமர் ஒரு அதிஸ்டமற்றவர்.

தன்னுடைய விசுவாசத்தை எப்படித்தான் காட்டினாலும் அவரையும் ஒரு எல்லைக்கு அப்பால் நகரவிடாது தடுப்பதில் சிங்கள பேரினவாதம் குறியாக இருப்பது தற்போது தெளிவாகவே



## கலையும் கதிர்காமரின் கனவுகள்

வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

என்றும் சிங்கள பேரினவாதம் தமிழ் இனத்திலிருந்து அந்த மக்களின் குரல் என்ற பெயரில் அவர்களுக்கு எதிரான சில கோடரிக் காம்புகளைப் பயன்படுத்தி தமிழ்மக்களின் பிரதி நிதிகள் என்ற கோதாவில் கருத்துச் சொல்ல மட்டுமே சில தமிழர்கள் தேவை.

மற்றும்படி இலங்கையின் அரசின் உயர் பீடங்களை அலங்கரிக்கும் அளவுக்கு அவர்களிற்கான வாய்ப்புகளை வழங்க எந்தச் சிங்கள கட்சிகளும் தயாரில்லை என்பதே யதார்த்தம்.

இந்தப் பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள் வெளிவரமுன்னரே சந்திரிகாவின் தலைமையிலான ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியின் சார்பில் பிரதமராக லக்ஸ்மன் கதிர்காமர் நியமிக்கப்படலாம் என சனாதிபதி சந்திரிகாவின் தரப்பிலிருந்தும் தகவல்கள் வெளியாகியிருந்தது.

ஆனால் தற்போது பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டு லக்ஸ்மன்கதிர்காமர் புறந்தள்ளப்பட்டுவிட்டார்.

லக்ஸ்மன் கதிர்காமர் பிரதமராக நியமிக்கப்படாததற்குக் கூறப்படும் நொண்டிச்சாட்டு அவர் நேரடியாக மக்களினால் நாடாளுமன்றிற்குத் தெரிவு செய்யப்படவில்லை என்றும் அவர் தேசியப்பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் என்பதாகும்.

ஆனால் உண்மை அதுவாக இருக்க முடியாது இலங்கையின் நாடாளுமன்றில் ஒரு தமிழர் பிரதமராக நியமிக்கப்பட்டுவிடலாம் என்ற காழ்ப்புணர்ச்சி மட்டுமே.

இதனை அந்த சட்டத்தரணி கதிர்காமருக்கும் புரியாமல் இருக்கப்போவதில்லை. ஆனால் அவரின் தொங்கிப்பிழைக்கும் எஜமான விசுவாசம் கண்டு கொள்ளப்போவதில்லை.

இதற்கு முதல் இலங்கையின் பொலிஸ்மா அதிபராக இருந்த ஆனந்தராஜாவிற்கும் ஒரு தமிழர் என்ற வகையில்தான் பொலிஸ்மா அதிபராக இருப்பதற்கான பதவி நீடிப்பு வழங்கப்படாது ஒதுக்கப்பட்டார்.

இப்போது கதிர்காமர் வரலாற்றின் தமிழினத் துரோகிகளான இவர்களுக்கு அவர்கள் சார்ந்த இனம் வழங்கும் தண்டனைகளை விட அவர்கள் யாருக்கு விசுவாசமாக இருந்தார்களோ அவர்களே இவர்களுக்கு வழங்கிய தண்டனையாகும்.

கதிர்காமரின் கனவுகள் எத்தனை கலைந்து போயின முதலில் ஐக்கிய நாடுகள் சபைக்கான பொதுச் செயலர் பதவி, பின்னர் பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் செயலாளர் கனவு, இப்போது பிரதமர் கனவு.

போகிறபோக்கில் மிகவிரைவில் நாடாளுமன்றில் கதிர்காமர் வாய்விட்டே பாடக்கூடும் கனவே கலையாதே..... என்று.

— வேழினி





தொடர் - 13

நடக்கத்தொடங்கி இரண்டே நிமிடங்களில், திக்குத் தெரியாத காட்டின் நடுவிலிருந்தோம். விபரிக்கமுடியாத கிளர்ச்சி.

சினுவ அச்சிபேயின் 'திங்ஸ்ஃபோல் எபாட்' நாவல் நினைவுக்கு வந்தது: காட்டுவழித் தடத்தில் வைத்து இக்கொமஃபுனாவை ஒக்கொங்கோவும் ஏனையோரும் வெட்டுகிறார்கள்... கண்ணைப் பொத்தி அடித்ததுமாதிரி அடர்ந்திருந்தது காடு. வழிகாட்டி, மழைக்காடுகளைப் பற்றியும் அதன் மரஞ்செடிகொடி வகைகளைப் பற்றியும் சொல்லிக்கொண்டே வந்தார்.

'இங்கே கோலா மரங்கள் கிடையாதா?' என்று கேட்டேன்.
'இல்லை'
'தென்னை'



'மொம்பாஸா பக்கத்தில் உண்டு'
'பாம்' எனப்படும் தெங்குவகைத்தாவரங்களைவழியில் பார்த்திருந்தேன். எதிரே ஆளரவமும் பேச்சுக்குரல்களும் கேட்டன. எங்களைவிட, அந்த மலை விடுதியில் அப்போது தங்கியிருந்த வேறிரண்டேயிரண்டு பேரான அந்த பெல்ஜியத்தம்பதிகள், இன்னொரு வழிகாட்டியுடன் வந்து கொண்டிருந்தார்கள்.
இரண்டு 'ஹலோ'க்களுடனும், ஒரு 'ஜாம்போ'வுடனும் எம்மைத் தாண்டிப்போனார்கள்.
'நாமும் திரும்பலாமே?' என்றேன்.
'இன்னுஞ் சற்றுப் போகலாமே?' என்றார் வழிகாட்டி.
'இல்லை, மறந்துவிட்டோம்: தொலைபேசி அழைப்பு எடுக்கவேண்டும்.'

உண்மையாகத்தான் அழைப்பு எடுக்கவேண்டியிருந்தது. வந்து சேர்ந்ததை இன்னும் வீட்டுக்குச் சொல்லவில்லையே!
சிறிலங்காவுக்கு ஒரு அழைப்பு எடுக்கமுடியுமா?
'இங்கிருந்து இயலாது: எக்ஸ்சேஞ்சைக் கேட்டுத்தான் சொல்லமுடியும்,' வரவேற்பிடத்தில் கடமையிலிருந்த பெண் கூறினார். மிஸ். மொறீன்.
ஐந்து நிமிடங்களுள் பதில் வந்தது.
'ஸொறி, இயலாது'
'யூ.கே?'
அடுத்த நிமிடமே சொன்னார்கள்:'ஓக்கே'
ஆனால் நான் கொடுத்த எண்ணைத் தொடர்புகொள்ள பத்து நிமிடம் பிடித்தது.

வந்து சேர்ந்த சேதியைச் சொல்லி அதை வீட்டிற்கு அறிவித்து விடுங்கள் என மைத்துனரிடம் கூறிவிட்ட ஆறுதல்.
'எவ்வளவு?'
'மூன்று நிமிடம், 1500ஷிலிங்:'
மலை விடுதியின் மைய மண்டபத்திற்குப் போனபோது, ஒரு பக்கம் முழுவதும் சுவர் இல்லாததுபோல் தோன்றிற்று. அருகே சென்று பார்த்தபோது தான் முழு உயரத்திற்கும் கண்ணாடித்தடுப்புப் போட்டிருப்பது தெரிந்தது. நேரே, கீழே, எங்களூர்க்குளங்கள்போலப் பெரிதாய் ஒன்று. நடுவில் மட்டும் நீர்கொஞ்சம். அது ஒரு சுனை என்று சொன்னார்கள். காட்டு மிருகங்கள் நீரருந்த வருவதை அருகிலிருந்தே - ஆபத்தின்றிப் பார்க்கும் ஏற்பாடு. விடுதியிலிருந்து குளத்தை நோக்கி மின்விளக்குகள் ஒளியைப்பாய்ச்சின. காற்குளம்புகள் சேறாடிய குட்டைகளில் மஞ்சள் நீர் ஆங்காங்கு தேங்கிப்பளபளத்தது. எங்கள் துரதிர்ஷ்டம், இரண்டு நாட்கள் பெய்தமழையால் குளத்தை நாடிவந்த மிருகங்கள் குறைவாகவே இருந்தன. காட்டெருமைகளும், மரைகளும், ஓநாய்களும் மட்டுமே வந்துபோயின. 'பெரிய ஐந்து' எனப்படுகின்ற அவையும் வந்ததாயில்லை. எங்கள் அறைக்குப் போய் ஜன்னல் திரையை விலக்கியபோதுதான் அங்கிருந்தும் குளத்தை வடிவாகப் பார்க்கக் கூடிய அமைப்பு இருந்தமை தெரிந்தது.
பகலிற்கேட்டதிலும் பல மடங்கு குரல்களைக் காடு ஒலித்தது. எது பறவை,எது மிருகம், என்ன பிராணி - என்றெல்லாம் தெரியாத அந்த உயிரொலிகள் மட்டுமே கேட்ட நிசப்தம், எல்லாத் திக்கிலும் கவிந்து மூடியஇருள் உடலை நடுக்கிய குளிர் - என்று, முன்பின்னறியாத ஒரு 'த்றில்'

அந்த இருளை, அந்தக்குளிரை, அந்த ஒலிகளை, ஆபிரிக்க மலைக் காட்டின் அந்தக் கிளர்ச்சியூட்டும் தனிமையை அப்படியே தூங்காமல் கிடந்து உணரவேண்டும் போலிருந்தது.

தத்தம் அறைகளுக்குள் முடங்கிவிட்ட ஐந்தே ஐந்து விருந்தாளிகளும், எங்கேயிருக்கிறார்கள் என்று தெரியாத மிகச்சில பணியாட்களுமாயிருந்த அந்த விடுதி... கரிய கூரைகளுக்கும் கோசைப்பாய் மூடிய சுவர்களுக்குமிடையில், மிக மங்கிய மஞ்சள் வெளிச்சம் தெரிகிற நடைபாதைகள்: காட்டின்குரல் மட்டுமே கேட்கும் நிசப்தம்...

தூக்கவேமுடியாது கனத்த கம்பளியால் இழுத்துப்போர்த்துக்கொண்டு, தூங்காமலே இந்தக்கிளர்ச்சியை ரசிப்பது என்ற முடிவில் சரிந்தேன். சின்ன வயதில் அறிமுகமான, டார்ஸான், ஃபான்ரம் என்கிற வேதாளர், நரமாமிச பட்சணிக்கதை மாந்தரிலிருந்து, ஒக்கொங்வோ, ஓபீக்கா,எஸிடெமில்லி, எம்விகாக்கி, கமாவ் - என்று பரிட்சயமானவர்களெல்லாம் ஒவ்வொருவராக வரிசையில் வந்து போனார்கள்... எங்காவது ஏதாவது - சேதி சொல்லும் - பறையொலி கேட்கிறதா என்று கவனிக்க முயன்றாலும், விடுதிக்கு மிக அண்மையிலிருந்து விடாது ஒலித்த 'கறாக்,க்றாக்...' என்ற ஏதோ ஒரு பறவைக்குரலே விஞ்சி நின்றது...

மறுபடியும் விழிப்பு வந்தபோது இரண்டுமணி. மெல்ல எழுந்து திரைச்சீலையை நீக்கி வெளியே பார்த்தால் உதிரியான சில மான்கள் மட்டும் குளத்தில் நடப்பது தெரிந்தது.


'அபாரியா சுபூய்?'- வானில் எமக்காகக் காத்திருந்த அயூப், புன்முறுவலுடன் வரவேற்றார். அந்த விசாரிப்புக்கு என்ன அர்த்தமென்று அவரைக் கேட்டு- 'இன்று காலை எப்படியிருக்கிறீர்கள்?' - அதற்குப்பதில் எப்படிச் சொல்வதென்பதையும் அவரிடமே கேட்டுச் சொன்னேன் 'அபாரியா சாய்!' 'நன்றாயிருக்கிறேன்!' காலைப்பொழுது பிரகாசமாக இருந்தது. மழை முற்றும் வெளித்திருந்தது. 'ஒரு நிமிஷம்..' வானில் ஏறப்போன எம்மைத்தடுத்து எதிரே காட்டினார். 'அங்கே பாருங்கள்' - தொலைவில், கென்ய மலை உச்சி, செதுக்கிவைத்தாற்போலத் தெரிந்தது. கமெராவை எடுத்து, சரிப்பண்ணி நிமிர்ந்த நிமிடத்துள் எங்கிருந்தோ வந்த முகில், முகட்டைப் போர்த்தி மறைத்திருந்தது. ஐந்து நிமிஷமாகியும் அசைகிற வழியாயில்லை. நேரம் எட்டரையாகிக்கொண்டிருந்தது. மலைவிடுதியை விட்டுப் புறப்பட்டோம். இன்றைக்கு, இருநூற்றுப்பத்துக் கிலோமீற்றரை இரண்டரை மணித்தியாலத்தில் தாண்டி, 'லேக் நக்குறு' என்ற இடத்திற்குப் போகவேண்டும் என்று, அலிஸ் தந்திருந்த அச்சிட்டபயண ஒழுங்கு கூறிற்று.

நேற்றுப் பிற்பகல் வந்தபோது பசியும் களைப்பும் மழைமூட்டமும் பார்க்கவிடாமல் தடுத்த காட்டின் முழு அழகு இப்போது காலை வெளிச்சத்தில் பளிச்சிட்டது அடிக்கொருதரம் பாதையில் குறுக்கிட்ட காட்டெருமைக் கூட்டங்கள், பபூன் குரங்குகள் என்று வாகனத்தை நிறுத்தவைத்தன.
'இவ்வளவுதானா? இதெல்லாம் எங்கள் நாட்டிலும் உண்டே!' நாளைக்குப் பாருங்கள்!பெரிய ஐந்தும் கூட சந்திக்கும் ....என்றார் அயூப்
'அதென்ன பெரிய ஐந்து?'
'சிங்கம்,யானை, காண்டாமிருகம், காட்டொருமை, நீர்யானை'
'யானையும்,காட்டெருமையும் எங்களிடமும் உண்டு.'
'அப்போ, வரிக்குதிரை, ஒட்டகச் சிவிங்கியைச் சேர்த்துக்கொள்ளுங்கள்' நேற்றைய காட்டாற்று வளைவில் ஞாபகமாக வண்டியை நிறுத்தினார் அயூப். 'இது பாதுகாப்பான இடம். பத்துநிமிஷம் தருகிறேன்.' அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டபோது வருத்தமாகத்தானிருந்தது - எங்களை விட வேறெவருமே கண்ணிற்கூடப் படாத அமானுஷ்யமாக இருந்தாலும்.

பதினொரு மணிக்கு,வான் ஓரிடத்தில் நின்றது. 'நக்குறு வந்தாயிற்றா?'
'இல்லை, இது பூமத்தியரேகை - இப்போது பூமத்திய ரேகையைத் தாண்டுகிறோம்.'

(தொடரும்)

சுதந்திரத்தின் இன்பமும், விடுதலையின் ஆறுதலும் உனக்கு வேண்டுமா? விடுதலையின் விலை,துன்பமும் தியாகமும் - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்




# இரண்டாவது சாவு

முல்லை யேசுதாசன்



டேய் ரோச் லைட்டை நூரடா பேயா உறுக்கினான் விக்கி திருக்கையடா திருப்பிப்பேசினான் ரூபன்.

முள்ளு குத்தினாக் குத்தட்டும் தூக்கி கடையாருக்க எறியடா, அநியாயமா எல்லாரும் சூடுவாங்கி சாகப்போறம், அடிக்காத குறையாக பேசினான் செல்வன்- அவன் தான் வள்ளத்து சம்மாட்டி.

பேசுறாங்கள் என்று திருக்கையை கடையாருக்கு முள்ளப்பிரட்டி போட்டுட்டு அந்த வெள்ளாப்பு இருட்டில வேகமா வலையை இழுக்கத் தொடங்கிட்டான். ரூபன், எல்லோருக்குமே வலையை விடியிறதுக்குள்ள இழுத்துப்போட்டுக்கொண்டு உயர ஓடிடோணும் என்கிற கவலை, விடிகிற நேரம்தான் அந்த கட்டா மீனும் படுகிறது.

அந்தத் தொழில் ஒரு பயங்கரமான தொழில் தான். நாயாத்துக்கு [illegible] நாய் செம்மலைப்[illegible]து புலிபாஞ்சகல்லு அதுதான் பெடியள் ஜெயசிக்குறுவுக்கு பிறகு போட்ட கடைசி பொயின்ற் லைன். அதுக்கடுத்தது சள்ளைக்கேணி அங்கால கொக்குத்தொடுவாய் கொக்குத்தொடுவாயில இப்ப ஆமி இருக்கிறான் சள்ளைக்கேணிக்கு இப்ப ஆமி இடைக்கிடை ரோந்தில வந்து போறவன்.

அந்தப் பார்க்கடலில கடற்கரையில் இருந்து கூப்பிடு தூரத்தில, பார் அருகோட வலை படுத்தால், ஏராளமாய் கட்டாமீன் படுறது. ரூபனுக்குத் தெரியும். அதுதான் செல்வன் சம்மாட்டிக்கு குளை அடிச்சு, போன கிழமைக்கு முதல் கிழமை ஒருநாள் கடலுக்கு வந்து ஏத்த ஏலாம கஷ்டப்பட்டு... அதுக்குப்பிறகு வரேல்ல பயம் தான்.

முதலும் ஒருக்கா வந்து மீன் பட்டு வலை இழுத்துக்குறை விடிஞ்சு போச்சுது ஆமி பாத்தது ரூபன் தான் தூரத்தில வச்சே ஆமியைக்கண்டுட்டான். ரெண்டு வலை கடலில இருக்கேக்கயே வலையை வெட்டிப்போட்டு ஓடியந்திட்டாங்கள், ஆமியும் கடலுக்கு செல் அடிச்சவன்தான்.

கரையில இருந்து கொஞ்சத்தூரம் உயர ஓடிவந்திட்டால் சரி நேவிக்குத்தான் பயம். அதுவும் பெடியளின்ர பக்கம் கரைய வந்திட்டால் பயமில்லை. சிலவேளை சள்ளைக்கேணி கடற்கரையில இறங்கி சாப்பிட்டுமிருக்கிறாங்கள் இரவில ஆமிவரான்.

சள்ளைக்கேணியில பெரிய தென்னந்தோட்டம் ரூபனின்ர தகப்பனுக்கு அதை விட்டுட்டு வரேக்க நிறையக்காய் ஏராளமாய் பறிச்சதேங்காய் இப்ப அளம்பிலுக்கு அகதியாய் வந்து எவ்வளவு காலம் அந்தத் தென்னைகள் இன்னும் இருக்குது. அதைக் கடலில நின்று பாக்கிறது ரூபனுக்குச் சந்தோசம்.

விக்கினேசுக்கு தொழிலுக்கு வரவிருப்பமில்லைத்தான் என்ன செய்யிறதென்று வந்தவன். எல்லாம் மனிசியாலயும் மனிசியின்ர ஆக்களாலயும், தாய் தகப்பனுக்கு விருப்பமில்லாமல் தான் மனிசிய கூட்டி வந்தவன், அவளை நல்லா வச்சிருக்கோணும் அவையளுக்கு முன்னால எண்டு இந்தக்கடலுக்கு வந்தாப்பிறகுதான் பிள்ளையளுக்கும் மனிசிக்கும் சங்கிலியள் செய்தவன். இன்னுமொண்டுக்கு காசுகாணாது.

என்றாலும் இண்டைக்கு வெளிக்கிடேக்கையே விக்கிக்கு மனசு சரியில்லை எஞ்சின் ஒன்று இடையில வரேக்கையே பழுதாகிப்போச்சு அப்பவே திரும்புவம் என்று சொன்னவன் ரூபன் தான் விடேல்ல.

கரை நீளம் பார் அருகோட படுத்த வலை நீருக்குஅடைஞ்சு கரையில ஒதுங்கிட்டுது மீனும் பட்டுக்கிடக்கு விடிஞ்சும் போச்சுது விடிஞ்சாப்பிறகுதான் பயம்.

வெட்டிப்போட்டுவரவும் மனமில்லை. செல்வன் எட்டுற தண்ணியில வள்ளம் பிடிக்க ரூபன் கரைக்குப்போய் ஒதுங்கிக்கிடந்த வலைகளை ஒன்றாய் சேர்த்து குவிக்க விக்கி வலைகளை வள்ளத்தில் இழுத்துப்போட்டுக்கொண்டிருந்தான் வேகமாய்.

முதலில ஆமியைக்கண்டது செல்வன்தான் "டேய் ஆமியடா" என்று கத்திக்கொண்டு தாவி வள்ளத்தில ஏறி எஞ்சினை இறக்க விக்கி அணியத்துக்குள்ள இறங்கி வலை வெட்ட கத்தி எடுக்க ரூபனும் ஆமியைப்பாத்திட்டான் பாய்ந்து தண்ணீரில் இறங்கி வள்ளத்தை நோக்கி வர ஆமி வெடிவைக்க தொடங்கிட்டான்.

செல்வன் ஸ்ராட் பண்ணினதுக்குப்பிறகும் ரூபன் வள்ளத்தடிக்கு வரேல்ல கெதியா வாடாகெதியாவாடா என்று கத்திக்கொண்டு எஞ்சினை ஓடத்தொடங்கியும் விக்கி வலையைய் வெட்டி முடியேல்ல வலை இழுபட்டுவந்து எஞ்சின் பிளப்ளரில் விழுந்து சுத்திட்டுது. எஞ்சின் நிண்டு போச்சு. இனி இறங்கி வலையை வெட்டி துப்புர வாக்கி ஓட வெளிக்கிட ஆமி வந்திடுவான். இனி ஒண்டுமே செய்ய முடியாதென்று செல்வன் தண்ணியில பாஞ்சு நீந்தத்தொடங்கிட்டான்.

இனி ஒரு பிரியோசனமும் இல்லையென்று விக்கியும் தண்ணியில பாய ரூபனும்கிட்ட வந்திட்டான். ஆமியும் காட்டுப்பக்கம் இருந்து வந்து கடற்கரையில படுத்திருந்து சுடத்தொடங்கிட்டான்.

இனியும் அவங்களை பாத்துக்கொண்டு நின்றால் தனக்கும் சாவுவரும் என்று நினைத்தான் செல்வன். வேகமாய் நீந்தத்தொடங்கிட்டான் உயர அவனுடைய பக்கத்தால் ரவுண்சுகள் போய்க்கொண்டிருந்தது. தனக்குத்தான் குறிவைத்து சுடுறாங்கள் என்று நினைத்தான் செல்வன். வேகமாய் நீந்தி தண்ணீர் மட்டத்துக்கு மேல் கொஞ்சம் வளந்திருக்கும் பார் மறைவுக்கு சென்று மறைந்து விட்டான். இனி சுடமுடியாது. ஆனா செல் அடிக்கலாம்.

நேரம் செல்ல வெடிச்சத்தங்கள் குறைஞ்சு போச்சு. கடற்கரையில் ஆமி கத்திற சத்தம் ஏனலில வடிவாக்கேக்குது. "அடேய் கரைக்கு வாடா" யாரோ உயிருடனிருக்கிறார்கள். அகப்பட்டது ஆர். மற்றவர் எங்கே ஒண்ணும் விளங்கவில்லை. அந்த கற்பாரின் மறைவில் மறைந்து பார்த்தான் ரூபனாய்த்தான் இருக்கவேணும் சரியாத்தெரியேல்ல கையுயர்த்திக்கொண்டு கரைக்கு போறான். மற்றவன் எங்க செத்துட்டானோ? பயம் மனதைப்பிடுங்க அந்த இடத்திலுமிருந்து நீந்தத்தொடங்கிவிட்டான். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அவன் நின்றிருந்த பார்அருகிலும் செல்கள் வந்து வீழ்ந்தன.

செம்மலைப்பார் தாண்டியவுடனே கரைக்கு நீந்தத் தொடங்கினான் செல்வன். கரையில பெடியள் நிற்பாங்கள். கரையேறிவர காட்டுப்பக்கமாய் இருந்து தமிழ்க்குரல்கள் ஆர்ரா அது நிதானமாய் நடந்தான் செல்வன் அவர்களை நோக்கி.

மூன்றாம் நாள் இயக்கப்பெடியளோடு சேர்ந்து காட்டில் இறங்கி புலிபாஞ்ச கல்லுக்குப்போய் கடற்கரையில் இறங்கிப் பார்த்தால் ஒரு பிரேதம் ஒதுங்கிக்கிடக்கு, ஆரென்று சரியாத்தெரியவில்லை. பெடியளே அதைத்தூக்கி வந்து நாயாற்றில் வைத்துக்கொடுத்தார்கள்.

காதுப்பக்கமாய் வெடிபட்டு முகப்பக்கமாய் வெளிவந்து பல் எல்லாம் உடைஞ்சு பிஞ்சு தலைமயிரெல்லாம் கொட்டி உடம்பு வீங்க மண்ணில உரஞ்சுப்பட்டு ஒருகால் முறிஞ்சு சதையெல்லாம் மீன் திண்டு போச்சுது. ஆளை அடையாளமே தெரியேல்லை. ரூபன்தானோ? அப்பவிக்கி? பிடிபட்டவனை கொண்டு போட்டாங்களோ? சுட்டுப்போட்டாங்களோ? குழம்பிப்போனான் செல்வன்.

விக்கியின்ர மனிசியும் கத்திக்குளறி ஓடிவந்து பார்த்து... அவளாலயும் அடையாளம் காண முடியேல்ல. அழுது ஒப்பாரி வச்சதுதான் மிச்சம். தன்ர மனிசன் செத்திருக்கமாட்டார் என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

ரூபன்ர தாய் வந்து பார்த்தவுடனேயே தன்னுடைய மகன் என்றிட்டா. கால் ஏலாத படியாத்தான் கால் முறிஞ்சது என்ர பிள்ளைதான் என்ரபிள்ளைதான் என்று குளறி விழுந்து ஒப்பாரி வைக்க மற்றவர்களும் நம்பி ரூபன் என்று முடிவாச்சுது.

செல்வன் சம்மாட்டி நம்பிக்கை இல்லாமல். விக்கியின்ர மனிசியட்டை போய் திரும்பவும் சொன்னான் "ஒருக்காப்போய் உன்ர மனிசன் தானோ என்று வடிவாப்பார்" என்று அவளுக்கு பார்க்க விருப்பமில்லை.

தன்னுடைய மனுசனாய் இருக்கக்கூடாது என்கிற பயம்- தன்ர மனிசன் இல்லையென்றே சொல்லிப்போட்டாள். சிலவேளை மனதுக்குள் விக்கி மாதிரியிருப்பதாயும் தோன்றியது. இல்லாமலும் இருந்தது. குழம்பியும்போனாள். விக்கி செத்துப்போனான் என்பதை நம்பமுடியாமல் இருந்தது அவளுக்கு.

எல்லோருமே சம்மாட்டி செல்வனை பேசாதகுறை- சிலர் கேட்கவும் பேசினார்கள் ஆமி வாற இடம் எண்டு தெரிஞ்சும் அதுக்குள்ள கூட்டிப் போறான் பேயன். காசாசை பிடிச்சவன்... இந்தப்பேச்சுக்களை கேக்கிற நேரம் தானும் செத்திருக்கலாம் என்று நினைத்தான. செல்வன்.

ரூபனின்ர குடும்பத்தில ரூபன் தான் கடைசி- ஆம்பிளை சகோதரம் நாலுபேர். செத்தவீடு பெரிசாத்தான் செய்தவங்கள். நிறையச்சனம் விக்கியின் மனிசியும் செத்தவீட்டில நின்றவள். பெரிசா அழேல்ல. விக்கிக்கு என்ன நடந்ததோ ஆமி பிடிச்சாங்களோ. விடுவாங்களோ. அதுதான் கவலை. ஆமி பிடிச்சுக்கொண்டே போயிட்டாங்கள் என்று நம்பினாள்.

எட்டு முப்பத்தொன்று சாம்பல் காடாத்தென்று செல்வனுக்கு சரியான செலவு இனி விக்கி வருமட்டும் விக்கியின்ர மனிசியையும் கவனிக்கோனும் அவளும் செஞ்சிலுவை அங்கை இஞ்சை என்று அலைஞ்சும் ஒரு பதிலும் இல்லை.

துணிஞ்ச கட்டை செல்வன், மனிசியின்ர கொடியை வித்து திரும்பவும் தொழில் தேடிட்டான். திரும்பவும் அதே கடலுக்குத்தான் போறவன். பயம் துளஞ்சு போச்சுது என்றாலும் கவனம் கூட. மீனும் நல்ல படுகை. ஆரும் செல்வனட்டை ஏன்ரா முதலும் ஒரு உயிரைக் கொடுத்துப்போட்டு பேந்தும் அதுக்குள்ள ஏன்ரா போறாய்" என்று கேட்டா- சிரிச்சுப்போட்டுப்போவான்.

விக்கியின்ர மனிசிக்கும் அடிக்கடி செலவுக்குக் காசு கொடுப்பான் ரூபனின் தாய்க்கும் ஐம்பதாயிரம் குடுத்து சமாளிச்சுப்போட்டான்.

அன்றைக்கு செஞ்சிலுவைச்சங்க வாகனம் வந்து ரூபனின் தாயைத்தேடிக்கொண்டிருந்தது. கேள்விப்பட்டு சனமெல்லாம் ஓடினது. என்னென்று கேட்க. விக்கியின் மனிசியும் கூடத்தான்.

ரூபனட்டை இருந்து கடிதம் வந்திருந்தது. செல்வன் சம்மாட்டி தப்பி வந்து விட்டார் என்று எனக்குத் தெரியும். விக்கி செத்திட்டான்.அவன் தண்ணீரில பாயேக்கையே வெடிபட்டுட்டுது காதுப்பக்கமாய் வெடிபட்டு முகம் பிஞ்சு இரத்தவாறாய் கடலுக்க கிடந்தான்.

"ஐயோ என்ர பிள்ளை இருக்கிறான் என்ர பிள்ளை இருக்கிறான். செத்தவீடு செய்திட்டம். இனி அவனுக்கு சாவே இல்லை" சந்தோசத்தில் கத்தினாள் தாய். அடுத்தபக்கமாய் விக்கியின் மனிசி பெருங்குரலெடுத்து அழுதாள். ஒரு சந்தோசமும் ஒரு சோகமுமாய் இடிந்துபோய் நின்றது சனம்.


"ஐயோ உங்கட முகத்தை முழுசாப்பாக்காவிட்டுட்டனே. என்னண்டா உங்கள அடையாளங்காணாமற்போனேன். ஒருக்கா தொட்டுத்தூக்கி அளஞ்சு அழுது பிழை செய்திட்டனையா. உங்களை முன்னால கொணந்து வச்சும் நீங்கள் இல்லையெண்டு சொல்லிப்போட்டனையா. என்ன மன்னிப்பிங்களோ"

தலையிலும் நெஞ்சிலும் அடித்தழுது கொண்டிருந்தது பரிதாபமாய் இருந்தது.

விக்கி இன்னொரு முறை செத்துப்போனான். இன்னொரு சாவீடு நடந்தது. எட்டு முப்பத்தொன்று எல்லாச் செலவுகளையும் செல்வன் சம்மாட்டியே பார்த்தான். எல்லாச்செலவுக்கும் இனி அந்தக்கடலில்தான் உழைப்பான் அவன் உண்மையான கடல்தொழிலாளிதான் பயம் இல்லாத கடல்தொழிலாளி தான் உயிர் ஒருதடவைதான் போகும்.

சிரமத்தைத் தாண்டுவதற்குச் சிறந்த வழி, அதை நேரடியாகச் சந்திப்பது. - யாரோ

## உருவகம்



# அறுவடை

பருவந்தப்பிய மழை எதிர்பாராத போது பொழிந்தது. நீண்டகாலம் வேளாண்மையால் சந்தை வாய்ப்பற்று நட்ட மடைந்தவர் தம்மிலும் பலமானவர்களோடு இணைந்து விதைக்க முடிவெடுத்து எல்லா வயல்களிலும் விதைத்தனர்.

எமது உற்பத்தியை குறைத்து தமது மேலாதிக்க வர்த்தகத்தந்திரங்களால் முறியடித்து இழப்புகளைத் தந்தவர்களுக்கு இம்முறை சரியான பாடம் படிப்பிற்கவும் உலக வர்த்தகர்களுக்கும் எமது தரத்தைக் காட்டவும் எமது பலமான இந்தச் சேர்க்கைக்கூட்டுறவு விதைப்பு தேவையானது எனவும் பேச்சோடு பேச்சாக சொல்லிக்கொண்டனர்.

கடந்த காலங்களிலெல்லாம் தாம் நினைத்த மாதிரி வர்த்தகச்சந்தையை நடத்த உதவியவர்களை இம்முறையும் விதைக்கச் செய்ய வேண்டும் இல்லையென்றால் எமது வர்த்தகம் வீழ்ந்து விடும். உலகச் சந்தையில் எமது வர்த்தகச் சுவடுகளிற்கு பெரும்கேடு ஏற்பட்டுவிடலாம். ஏகபோக மேலாதிக்க வாத உழவர்கள் முடிவெடுத்தனர்.

முடிவு உறுதி ஆனது கடந்த காலங்கள் போலவே வேளாண்மையை அறியாத குத்தகைக்கார ஏவலர் சிலரையும் மீந்திருக்கும் வயல்களில் விதைக்கப்பணித்து விடுத்தனர்.

எல்லோரும் வேளாவேளைக்கு விதைத்து விட்டு கீவலில் ஈடுபட்டனர்.

களையெடுப்பு பசளையிடல் கிருமி நாசினி விசிறல் என்று வேளாண்மைக்கடமைகளை எல்லோரும் செய்யத்தொடங்கினர்.

குத்தகைக்காரருக்கு இம்முறை கடந்த காலங்களில் தாம் நடாத்திய திருவிளையாடல்களையும் அதனால் பெரும் மன்னர்கள் போலவும் உலவியதெல்லாம் சரிவராது என்ற எண்ணம் வலுப்பெற்று நின்றது.

சொந்த விவசாயிகளிற்கும் பலமான விவசாயிகளிற்கும் பல விதத்திலும் உதவிகளும் துளைகளும் கிடைத்தது மட்டுமன்றி இந்த வயல்களிற்கு அப்பாலுள்ள வயல்களுக்கூடாக வரும் பன்றி-எருமை முயல்களையெல்லாம் விரட்டி அடித்து துரத்தியும் உதவினர்.

விளைச்சல் உச்சமானால் குத்தகைக்காரர் பாடும் அவர்தம் எசமானர்களதும் எதிர்பார்ப்பு வர்த்தகம் வீழ்ச்சி கண்டுவிடப்போகும் ஆபத்தை தடுத்தே ஆகவேண்டும்.

குத்தகைக்காரர் தமது எசமானர்களிடம் கையேந்தினர்.

குத்தகைகக்காரரின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்ட எசமானர்கள் சிந்தித்து முடிவுகளை உறுதி செய்தனர்.

அவர்களின் வயல் காவலர்களுக்கிடையில் புதிய விவசாயிகள் பற்றிய கட்டுக்கதைகளையும் - பழைய கதைகளையும் திரித்துக்கொடுமையானதாக்கிப் பரப்ப வேண்டும். இதற்குத்தேவையான ஊதுகுழல் ஒளிபரப்பு வண்டிகளை - ஊரோடு உறவுகளிற்காக குளிர்களி விற்கும் வண்டிகளையும் பயன்படுத்தத்தக்கதாக உதவினர் பெரும் எசமானர்கட்கு இப்படியான சின்ன வேலைகள்...... சே. உடனுக்கு உடன் செயல்வடிவம் கண்டது.

களையெடுப்பதற்கு சேனை சேனையாக குத்தகைக்காரரின் பின்னால் அயற்கூலிக்காரர்கள் எல்லாம் திரண்டனர்.

குத்தகைக்காரர்களின் விதை முதல் சீர்கேட்டால் அதிகம் எதிர்பார்த்த விளைச்சல் கிட்டாத நிலை தென்படத்தொடங்கியது.

சப்பியான கதிர்கள் தலை சாய்க்காது உலுத்த நாட்டம் பொத்தியாகவே நின்று போனது. பண்ணிய பயிரில் பாவம் சிரித்தது.

இதைப்பார்த்த கூலிக்காரச் சேனைகள் விளைஞ்சிருந்த பலமான விவசாயிகளின் வயல்களை முன்னைய காலங்கள் போல எரியூட்ட விரும்பிய போதும் ஈடேற்றமுடியவில்லை. ஏமாற்றத்தோடு எல்லோருமாக எசமானர்களிடம் சென்று முறையிட்டனர்.

எசமானர்களோ பலமான யோசணைகளை நடைமுறைக்குக் கொண்டு வரமுடியாது திண்டாடும் நிலையில் அந்நியமான ஒரு சூழ்நிலையை உணர்ந்து நல்ல பாம்புகளாக மாறி நின்றனர் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்காக.

அறுவடை வந்தது....

விளைந்த வயல்கள் அறுவடை ஆகின எல்லாவயல்களும் பூரண விளைச்சல்.......... அள்ளுக்குத்தகை என்றும் கண்டும் பிறையும் என்று விவசாயமொழிகளால் முடிவுகளை வெளிப்படுத்தினர். குத்தகைக்காரரின் விழிகள் குளமாகவே மாறி வழியத் தொடங்கின........ சோத்துக்கும் வழியில்லை என்றால் தெருவாலை போகவும் ஏலாதபடி........ சே..... ம்....... விம்மி அழுதனர். எசமானர்கள் மொட்டாக்கிற்குள்ளாக சைகை செய்தனர். எங்கள் வாழ்வில் மண்போட்டு விட்டார்கள். குத்தகைக்காரர் பேசிக் கொண்டபோது.. வழிப் போக்கர்கள் அப்படியல்ல அப்படியல்ல தினை விதைத்தவன் தினை அறுக்க வினை விதைத்தவை வினை அறுக்கத்தான் வேணும் என்று சொல்லிக் கொண்டது. வயலில் நின்ற அனைவர்க்கும் கேட்டது.

**வளவைவளவன்**

# மீறல்

நிழலுருவில் வசந்தம்
நிஜம் ஒளியின்
எத்தொலைவிலோ
ஒளியின் தொலைவை
விரட்டும் என்காலம்
வழி நெடுக...
இருளின் கரங்கள்
என் விழி மறைக்கும்
என் வயசையும் மீறி
மனம் கொதிக்கும்
அதன் தகிப்பில்
என் கரம் எரித்து
ஒளி படைத்தேன்
உயிர் உருக்கி
வழி கடந்தேன்
வலியையும்...
இருள் சொன்னது - நீ
வயசுக்கு மீறியவன்
நான் சொன்னேன்
இன்னும் இருக்கிறார்கள்
வயசுக்கு மீறியவர்கள்

**த. அகிலன்**

# முட்கள்

ஐம்புலன்கள் அடங்கலாக எனது
கைகள் நெஞ்சு முதுகு இங்கெல்லாம்
கட்புலனாகாத முட்கள் தைத்து மரணவலி
ஏற்படும்பொழுதுகளே என்வாழ்வில் அதிகம்.

தொடர்பனி பொழியும் தேசமொன்றில்
உடலும் உணர்வும் விறைத்தபடி
ஆயுள் நாட்களால் அலைக்கழிக்கப்படுபவன் நான்.
என் பெயர் புலம்பெயர்ந்தவன்.

எனது இரவுகளை எனதுறவுகளுக்காகவும்
பகல்களை வெள்ளைத்தோல்களின் புன்னகைக்காகவும்
சமர்ப்பித்தமையினால் சயன அவஸ்தையில்
எனது விழிகளுக்குள் ஓராயிரம் முட்கள் குத்துகையில்
ஆத்மா இடும் மரண ஓலம் யாருக்கும் கேட்பதில்லை.

நிலவைப்பிடித்து வருவோம் வாவென
என் மழலையை முதுகில் ஏற்றிய
நாட்களின் நினைவு மீட்டல்களினால்
முதுகைத் தைக்கும் முட்களின் துன்புறுத்தலில்
என்னுயிர் நாடியே அறுந்துபோய்விடுகிறது.

எனைப் பிரிய நேர்ந்த கடைசி நிமிடங்களில்
நெஞ்சில் முகம்புதைத்து கண்ணீர் பிலிற்றிய
எனதில்லாளின் இல்லாமையினால்
நெஞ்சுரோமங்கள் ஒவ்வொன்றும்
முட்களாய் சபித்துப் போகையில்
வேதனையின் விளிம்புகளைத் தொட்டிருக்கிறேன்.

பொன்னிறக்கேசமும் பூனைக்கண்ணும்
கொண்டோர் புரியாத வார்த்தைகளால்
எனைத் தூசிக்கும் பொழுதுகளில்
யாதொன்றும் வாய்பேசா என்னுதடுகளை
அறுக்கும் முட்களைப்பிடுங்க
வன்கரங்கள் எங்கேனுமுண்டோ.

சிதையேறிய என் தாய்க்கும் தந்தைக்கும்
கொள்ளியிட முடியாதுபோன என்கைகளை
நிந்திக்கும் முட்களின் ரணவலியில்
சிதைநெருப்பின் வெம்மைவேகத்தை
அளந்துபார்த்து அயர்ந்து போகிறேன்.

அடர்ந்த அக்கினிக்குள்ளும் ஒளியூட்டும்
சுவாலையுண்டென்பதைப்போல்
ரணகளமாகிப்போன எனது சரீரத்தில்
உள்ளங்காலை மட்டும் உலர்த்தி வைத்திருக்கிறேன்.
எந்த முட்களும் அதில் பாய்ந்துவிட முடியாது.
ஏனெனில்
என்னை நிட்டூரப்படுத்தும் முட்களைப் பொசுக்கவேனும்
எனது தாய்மண்ணில் நான் காலாற நடக்கவேண்டும்.

**வேல். லவன்**

# மண்ணோடு இருத்தல்



குரும்பட்டி உதிர
குரும்பை சொன்னது
பாவம் பிஞ்சிலேயே வீழ்ந்து விட்டதென்று.

குரும்பை வீழ்ந்தது
முட்டுக்காய் கூறியது
வழுக்கல்
வைத்தாப்பிறகாவது
வீழ்ந்திருக்கலாமேயென்று.
முட்டுக்காயும்
ஓர்நாள் வாடி ஒடிந்தது.

செத்தலுரைத்தது
சீ...முற்றின
பிறகாவது
மூழ் கழட்டியிருக்கலாமென்று.

பிறகு செத்தலும்
வீழ்ந்துருண்டது
பாளை கவலைப்பட்டது
முற்றினதும்
வீழ்கிறதேயென்று.

வீழ்ந்த செத்தல் தன்பாட்டில்
முளைத்து நின்றது.
மீண்டும் தாய் மரத்திலிருந்து
குரும்பட்டி வீழ்ந்தது.
முளை கேட்டது ஏன்
வீழ்ந்தனியென்று?
தெரியாதென்றது அது.
குரும்பை..
முட்டுக்காய்..இவைகளும் வீழ்ந்தன.
இப்போதும் அவ்வாறே முளை கேட்டது.
தெரியாதென்றன அவைகள்.
செத்தல் வீழ்ந்தது.
முளை வினவியது
ஏன் வீழ்ந்தனியென்று?
முளைக்க!
நிமிர்ந்துரைத்தது செத்தல்.
"உன்னால் முளைக்க முடியாது முளைத்தாலும்
நிலைக்கமுடியாது"
இவ்வளவு நேரமும் அமைதியாயிருந்த
தாய்மரம் இடையில் குறுக்கிட்டு
எச்சரித்தது.
அச்சம் பீறிட ஏனென்றது
செத்தல்.
"நீ வீழ்ந்திருப்பது
எதன் மேலென்று
சிந்தி.
கற்குவியலின்மேல்
கிடக்கிறாய்.
உனது வேரை நிலம்
அரவணைக்க கற்கள்
விடாது. கொடி
கொம்புகளாலும்
முட்களாலும்
சூழப்பட்டிருக்கும் உன்னை எடுத்துவந்து
நடுவதற்கு எவரும் முயற்சியார்"
என்றது தாய்மரம்.
முளைக்காட்டிலும்
காரியமில்லை மண்ணில்
முட்டியபடியிருப்பதே
பெருமை.
பின்னர் இடித்துரைத்துச்
சொன்னது தாய்மரம்.
இவ்வாறு
"எதற்கும் அடிப்படை ஆதாரம் மண்
மறக்கும் எதுவும் உயிர் வாழ்வது வீண்"

**ஆவரங்கால் சுதன்.**

## நட்பு

நண்பா!
முதல் முதல் பார்வையில் வருவதல்ல நட்பு
முழு உணர்வையும் அறிந்தபின் வருவதுநட்பு

ஒத்திகை பார்த்து வருவதல்ல நட்பு
ஒருவித தாகத்தால் வருவதே நட்பு

தாவிச் செல்வதல்ல நட்பு
தாகம் போன்றதே நட்பு

நழுவி விடுவதல்ல நட்பு
நம் உள்ளம் சேர்ந்ததே நட்பு

அன்னை போன்றது நட்பு
தாய் நாட்டைப் போன்றது நட்பு

கண்ணாடி போன்று உடைவதல்ல நட்பு
கண்ணை இமை காப்பதைப் போன்றது நட்பு.

## என் ஓவிய அழகன்

உனை பார்த்த நாள்முதலாக
என் கண்ணில் தூக்கமே இல்லை
உனக்கு உயிரில்லை-
ஆனாலும் உயிர் உள்ள பார்வை
கள்ளமில்லா வெள்ளைச் சிரிப்பு
இன்று பிறந்த குழந்தைபோன்றமுகம்
உணர்ச்சியைத் தூண்டும்
உடலமைப்பு இவற்றைவிட
ஏகப்பட்ட பெருமையை
சுமந்திருக்கும் உனக்கேன்-சிப்பி
உயிரைத் தரமறுத்தான்
பிரம்மா! கண்ணைத்திற ஒருமுறை
பூமியில் இருக்கும் என் உள்ளம்
கவர்ந்தவனுக்கு உயிரைக்கொடு
இல்லையேல் என் ஓவிய
அழகனுக்கருகே
என்னையும் சிற்பமாக மாற்றிவிடு.

இ.சுகந்தினி,

## வா நண்பியே...

வாழ்க்கை ஒரு போர்க்களம்
வாழ்ந்துதான் பார்க்கலாம்
சொர்க்கம்தான் கிடைத்தாலும்
சொந்தஊரில் வாழ்வதுபோல் வருமா?
பலத்தோடு பிறந்த நாம்-சொந்த
நிலத்தோடு மடிந்திடுவோம்
வீரம் கொண்ட தமிழினம்
வீழ்ந்து பணிவதா
சிரம் தாழ்த்தி எந்நாளும்
செத்து மடிவதா பந்தங்கள் பார்த்திருக்க
சொந்தங்கள் சூழ்ந்திருக்க
சோம்பேறியாய் இருந்துவிட்டால்
சுதந்திரம் தேடிவருமா?
சுகந்தமான வாழ்வு மண்ணில் மலர
உறவுக் கூட்டுக்குள்இருந்து
உணர்ந்தெழுந்துவா நண்பியே...
உயர் தமிழீழம் வென்றிட.........

## எங்கள் மண்

ஒப்பற்ற எங்கள் தலைவனை
பெற்றெடுத்த தாய்மண்
உறுதி கொண்ட வேங்கைகளின்
உதிரம் கலந்த மண்-ஓடிக்
களமாடி வீழ்ந்தவர்களை
தாங்கிய தமிழ் மண்
செங்களமாடி சிவந்த
கருவேங்கைகளை
ஏந்திய செம்மண்
வளங்கள் பொங்கிவழியும்
வாசம் நிறைந்தது எங்கள் தேசமண்
அடிக்குமேல் அடிவாங்கினாலும்
அசையாத திடம் கொண்டது
எங்கள் மண்
வெடிக்கு மேல் வெடிவெடித்தாலும்
படைக்குமேல் படைவந்தாலும்
உடைந்து போகாத வீரம் பூண்டது
எங்கள் மண்.

க.முருகானந்தன்

### சீதனம்

உள்ளத்தால் ஊனமுற்றவன்
கேட்டுப்பெறும் ஊதியம்.

### உப்பு

கடல் நீரிற்கு காய்ந்த
பின் சூட்டும் பெயர்.

### தொப்புள்

தாயின் கருவில் இருந்து
உனை தனிக்கவைத்த வடு.

### பிரிவு


உறவுகளின் இதயங்களை
உறையவைக்கும் கீறல்.

மு.வ.விஜயரூபன்,

## ஊக்கமாத்திரை

# கோபப்படாதீர்கள்

கோபம் இது என்ன எங்கிருந்து வருகிறது அதை சொல்லவே தேவையில்லை. ஏனென்றால் இந்த உலகில் கோபம் வராத மனிதரும் இல்லை சரி " கோபம் வருவது உண்மை அதை சாதிக்காமல் விடுவது நன்மை"இது நீங்கள் எல்லோரும் அறிந்த ஒரு விடயமாக இருக்கலாம் ஏன் கோபப்படுகிறோம் எதற்குக் கோபப்படுகிறோம் என்று அர்த்தமில்லாத கோபங் களைக் கூட நாம் அன்றாடம் சந்தித்திருக்கலாம் அலுவலகம் என்றாலும் சரி, பாடசாலை என்றாலும் சரி, வீடு குடும்பம் என்றாலும் சரி, எங்கும் இக்கோபம் ஏற்படுவது வழமை. இந்த கோபம் ஏன் ஏற்படுகிறது இந்த நவீன யுகத்தில்கூட இதற்கு ஒரு தீர்வு சொல்லும் உளவியலாளன் இல்லையா? ஏன் இல்லை



இருந்தாலும் ஒருவர் சொல்லியிருப்பார் கோபம் வரும் போது ஒன்று முதல் பத்துவரை எண்ணுங்கள் என்று அல்லது கோபம்வரும்போது கோபப்படுபவரை முன் நிற்கவைக்காதீர் கள் என்று இல்லையேல் நிறையத் தண்ணீர்குடியுங்கள் குழந்தைகளின் முகத்தைப்பாருங்கள் என்று எத்தனையோ விதமாகச் சொல்லியுள்ளார்கள் என்னதான் செய்தாலும் சிலருக்குக் கோபம் ஆறுவதற்கு ஒருமாதம் கூட தாண்டும் இதற்கென்ன காரணம்.

இரண்டு பேர் கதைத்துக்கொண்டிருக்கும்போது அது நண்பர்களாயினும்சரி, கணவன், மனைவி ஆகிலும் சரி ஒருவருக்குக் கோபம் ஏற்படுகிறது அல்லது கோபம் வந்து விட்டது என்று தெரிந்தும் கோபத்தைக் கூட்டுவார்கள் அது தான் சொல்லுவார்கள் "எரிகிற விளக்கிற்குஎண்ணெய் ஊற்றுபவர்கள்" என்று. கோபம் ஏற்பட்டுவிட்டது என்று தெரிந்தும் தேவையில்லாத கதைகளைத் தொடருவார்கள் இது எங்கு போய் முடியும் என்பது சொல்லத்தேவையில்லை.

எனவே கோபம் ஏற்படும்போது யாராவது ஒருவர் விட்டுக்கொடுங்கள் புரிந்து நடவுங்கள், சாதிக்காதீர்கள் அடுத்த நிமிடமே மனம் திறந்து அமைதியாகப் பேசுங்கள் பிரச் சினையை தெளிவுபடுத்துங்கள் அந்நேரம் நீங்கள் இருந்த மனநிலையையும் எடுத்துக்கூறுங்கள் தேவையற்ற கோபங் களை மனதுள் வைத்து மாடி வீடா கட்டப்போகிறீர்கள்? இந்தக் கோபம் ஏற்படுவதாலும் இதனை சாதிப்பதாலும் உங்களுக்கே ஆபத்து ஏன் கோபப்படவேண்டும் சீ....இதுக்கா கோபித்தேன் என்று கூட நீங்கள் சிந்திப்பதில்லையா? பெரியதாக எதையும் எடுத்தால் கோபம் அடுத்த கணமே பேச்சிலும் முகத்திலும் வாடை வீசத்தொடங்கிவிடும் நண்பர்களே! கோபப்படாதீர்கள் ஒருவரைப் புரிந்துகொண்டீர்களானால் மன்னிக்கும் மனம் தானாக வந்து விடும் அங்கே கோபம் குடிகொள்ளாது பார்த்துக் கொள்ளுங்கள்.

ஈழவிழி.

## குறுக்கெழுத்துப்போட்டி - 65

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 06 | |
| | 09 | 10 | | | | 14 |
| | | | | 19 | | |
| | | 24 | | 26 | 27 | |
| | | | 32 | | | |
| 36 | | | | | 41 | |
| | 44 | | | | | |

பெயர்:-.......................................
முகவரி:-.......................................
.......................................
.......................................

### இடமிருந்து வலம்

01. இலங்கையின் அயல் நாடு.
06. வனம்.
09. தேவலோகப்பசு.
19. செல்வந்தன்(தலைகீழாகவுள்ளது)
24. பாம்பு(குழம்பியுள்ளது)
36. அகிலம்.
44. வாய்பேசாதவர்.

### மேலிருந்து கீழ்

01. கடவுள்.
09. வளையல்.
10. நிறங்களில் ஒன்று.
14. வாழ்த்து.
26. பயம்(தலைகீழாகவுள்ளது)
27. அன்பளிப்பு.
32. தொடக்கம்.
36. எலிக்குப் பகை.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.63 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அன்னைபூபதி.
09. வனம்.
15. சந்திரன்.
23. தவறு.
27. பால்.
32. மாமி.
39. வழி.
45. குடம்.

**மேலிருந்து கீழ்**

01. அரசன்.
06. சதி.
09. வரதட்சனை.
14. வேட்பாளர்.
24. வடக்கு.
36. நீதி.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.65
வெள்ளிநாதம்
ஈழநாதம்,
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.63 இன் பரிசுக்குரியவர்**
**வி.விஷ்ணுஜன்,**
**ஸ்ரீரங்கம், கேணியடி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.63 இன், பாராட்டுக்குரியவர்கள்.**


01. திருமேனி. சுகிர்தா, புலோப்பளை, மேற்கு, பளை.
02. மு.புரட்சிகா, விக்கி குடியிருப்பு, இல.28,தேவிபுரம்.
03. ஆ.பிரசன்னா, யூனியன்குளம், கோணாவில்,
04. சி.சாந்தன், 111/1, ஜயனார்புரம், வன்னேரிக்குளம்.
05. பா.கலாதீபன், கிளி/முருகானந்தா ம.வி. முரசுமோட்டை.
06. ம.வேணுதன். காங்கேசந்துறை வீதி, கோண்டாவில் மேற்கு,

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

### சிதம்பரதிரு

1987ல் எமது மண்மீது தொடுக்கப்பட்ட ஆக்கிரமிப்புயுத்தத்தின் வடுக்கள் பல அழிந்தும் அழியாமலும் உள்ளன. எனினும் இன்று வரை ஒருவகை புற்று நோயாக எமது தாயக மண்ணை ஆக்கிரமித்து மண வளத்தை அழித்து வருவதில் "பார்த்தீனியம்" களைகள் முதன்மை வகிக்கின்றன.



மனிதருக்கோ, கால்நடைகளுக்கோ எந்தவிதமான பலனையும் தராத இந்தப் "பார்த்தீனியம்" களைகளை நாம் எங்கள் பொது எதிரியாகக கருதி அழிக்க வேண்டியது அவசியமானது.

தனது இயல்பினால் நிலத்தினை தரிசு நிலமாக மாற்றுவதுடன் சூழல்சமநிலையில் பெரும் தாக்கத்தினையும் இந்தச்செடி ஏற்படுத்துகின்றது.

இலகுவில் அழிக்கமுடியாத இந்த நச்சுச்செடிஅந்நிய ஆக்கிரமிப்பு இராணுவம் வலைவிரித்து பரந்திருந்த எங்கள் பிரதேசம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது.

இக்களையினை அழிக்க ஆங்காங்கே பொதுமக்களும். பொதுஅமைப்புக்களும் முயற்சிகள் மேற்கொண்டாலும் அவை முற்றிலுமாக அழிக்கப்படவில்லை.

எனவே பொதுமக்கள் எல்லோரும் பங்குகொள்ளும் விதமாக "பார்த்தீனியம்" அழிக்கும் செயற்பாடு செயற்படுத்தப்படவேண்டும்.

பொருத்தமான நடவடிக்கைகள் மூலம் ஒரேசமயத்தில் இச் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படும் போதுதான் "பார்த்தீனியம்" களை அழிப்பு ஓரளவிற்கேனும் வெற்றியினைத் தரமுடியும்.

யாழ்ப்பாணத்தில் இந்த "பார்த்தீனியம்" களையினைஅழிக்கும் நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தற்போது ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சிப் பகுதியிலும் இந்தக்களை பெருமளவு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது எங்கள் மண்மீது அக்கறை கொண்ட யாவரும் "பார்த்தீனியம்"களையினை அழிப்பதில் ஆர்வம் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தூவல் நீர்ப்பாசனம்

மழைத் தூறல் போன்று செயற்கையாகக் குமிழ்கள் மூலம் பயிர்களுக்கு நீரைத் தூவுகின்ற முறைதான் தூவல் நீர்ப்பாசனமுறையாகும். விவசாயத் திணைக்களத்தினால் ஏற்கெனவே தூவல் பாசன முறையை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்திருந்த போதிலும் தற்போது யாழ்.மாவட்டத்தில் இந்தமுறை பிரபல்யம் அடைந்துவருகிறது.



நீரிறைக்கும் இயந்திரங்களைக்கொண்டு நிலத்தடி நீரை உறுஞ்சி நீர்பாசனம் செய்வதினால் அதிகளவிலான நீரைப்பாய்ச்சி நிலத்தடி நீர்விரையமாகின்றது. தேவைக்கதிகமான நீரையும் உரத்தையும் பயிர்களுக்கு இடுவதன் மூலம் மண்ணின் வளம் பாதிப்படைகின்றது. மேலதிக உரம்நீருடன் கரைந்து கீழிறங்கி நிலத்தடி நீரைச் சென்றடைகின்றது. இதனால் இந்நீர் மாசுபடுத்தப் படுகின்றது. நீரை உவர்த்தன்மை கொள்ளச் செய்கிறது. நீரை நஞ்சடையவும் வைக்கின்றது.

பயிர்கள் தம்மால் கிரகிக்கக் கூடிய நீர் உரம் போன்றவற்றை மட்டுமே உள்வாங்குகின்ற மேலதிக நீரும் உரமும் கீழே செல்கின்றன. பாத்திமுறை நீர்ப்பாசனத்தினால் பாத்திகள் வாய்க்கால்களில் பயிர்கள் வளரமுடியாது. நிலம் வீணாகின்றது. பாத்திகளில் நிறைவாக நீரையும் உரத்தையும் இடுவதன் மூலம் வீண் செலவுகளும் ஏற்படுகின்றன.

தூவல் நீர்ப்பாசனமுறையில் பயிர்களுக்குத் தேவையான, அளவுநீரே கிடைக்கிறது. உரமும் அளவாகக் கிடைக்கிறது மேலதிக நீர் உரம் என்பவற்றால் ஏற்படும் மேலதிக செலவு மீதப்படுத்தப்படுகின்றது.

குறைந்த அளவு நிலப்பரப்பில் கூடிய அளவு பயிர்ச்செய்கையை வெற்றிகரமாக மேற்கொள்ள தூவல் நீர்ப்பாசனமுறையே உதவுகிறது.

குழாய்கள் மூலமாக வரும் நீர் சுழலிகள் மூலமாகப் பயிர்களுக்கு விசிறப்படுகின்றது. பாத்திமுறையில் நீர் பாய்ச்சும் வாய்க்கால்களில் எல்லாம் பயிர்கள் வளர்கின்றன. நிலம் வீணாகாது சுழலிகளால் பாய்ச்சப்படும் நீர் பயிர்களின் மேற்பரப்பில் இருந்து நிலத்துக்கு விழுகின்றது. மேல் இருந்து கீழ் நோக்கி மழைத்தூறல் போன்று நீர்பாய்ச்சப்படுவதால் வெங்காயம், லீக்ஸ்,போன்ற பயிர்களில் படியும் பனி நீரானது பயிர்களில் இருந்து கழுவப்பட்டு நிலத்தைச் சென்றடைகின்றது.

பயிர்களின் நுனியில் காணப்படும் பனிப்பூச்சிகளும் கரைக்கப்பட்டுவிடும். பனி மூலம் பயிருக்கு ஏற்படும் நுனி கருகுதல்முளை கருகுதல் போன்ற பாதிப்புக்களும் ஏற்படமாட்டாது.

நீருடன் கலந்து இரசாயன உரம் கிருமி நாசினி ஏனைய மருந்து வகைகளையும் கலந்து பயிர்களுக்கு விசிறக் கூடியதாகவும் இதனால் அவை சகல பயிர்களுக்கும் சம அளவில் சென்றடையக் கூடியதாகவும் இருக்கிறது.

இன்னுமொரு நன்மை என்னவென்றால் ஒரே நேரத்தில் பல பரப்பு நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யமுடிகின்றது. இதனால் நீர்ப்பாசனத்துக்காகச் செலவிடும் நேரம் குறைவடைகிறது. பாத்திகள் அமைக்க கூலி ஆட்கள் தேவையில்லை. வேலை ஆளுக்கான செலவு மீதப்படும்.

குளாய்களின் திருகிகளைத் திருகி நீரை ஓட விட்டுவிட்டால் போதுமானது. விவசாயி நீர்ப்பாசனத்தை தொடக்கி விட்டு வேறு வேலைகளில் ஈடுபடலாம். பாத்தி நீர்ப்பாசனம் மூலம் 2-3 மணித்தியாலம் மேலாகச் செலவு செய்து நேரத்தை வீணாக்க வேண்டியுள்ளது. தூவல்நீர்ப்பாசனம் மூலம் நேரத்தை வீணாக்க வேண்டிய தேவையில்லை.

மரக்கறித் தோட்டத்தில் ஈடுபடும் விவசாயிகளும், வீட்டுத் தோட்டம் செய்பவர்களும் இந்த தூவல் நீர்ப்பாசன முறையைக் கையாளலாம். யாழ்குடா நாட்டு விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் இம் முறையை பரவலாகவே கையாண்டு வருகின்றனர். குறைந்த நீரில் கூடிய வருமானம் தேடித் தரும் இந்த தூவல்நீர்ப்பாசனத்தை எமது வன்னிப் பிரதேசத்திலும் கையாளலாம்.

மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் எமது விவசாயிகளும் இம்முறையைக் கையாழ்வதன்மூலம் நீரை விரயமாக்காமல் கூடிய வருமானத்தைப் பெறலாம் அல்லவா? ஆகவே விவசாயிகளாகிய நீங்களும் தூவல் நீர்ப்பாசனம் மூலம் பயன் பெறுங்கள்.

சிவகமலா

## கலைதரும் விருந்தில் நாட்டியக் கலை



'சிந்தனையானது கலையுணர்வை வெளிப்படுத்தும் உருவ அமைப்பு' என்று கூறுகிறார் சிந்தனைப் புரட்சியாளர் 'லெனின்' கலையுணர்வு என்பது எத்தனையோ கலை சார்ந்ததாக உருவாகும். அவற்றுள் நாட்டியக் கலையின் சக்தி என்பது அளவிடமுடியாத ஒன்றாக இருந்துவருகிறது.

நாட்டியக்கலை ஆடற் கலையரசன் சிவனின் அற்புத படைப்பாகும். ஆகவே இக் கலை ஒரு தெய்வீகக்கலை என்பது புலனாகிறது. காலத்தால் அழியாத இன்றைய நூற்றாண்டில் தலைசிறந்து விளங்குகிறது இக்கலை.

'இசையால் வசமாகா இதயமேது?' என்பதற்கிணங்க தேவாரங்கள் இசைத்து அதன்மூலம் இறைவனின் திருநடனங்களை வெளிப்படுத்தியவர்கள் நாயன்மார்கள் 'ஆட்டுவித்தார் ஆடாதாரும் ஆடாரோ' என்று பாடிய நாவுக்கரசர், மேலும் ஒரு பாடலில் 'ஐயர் திரு நடனம் எதிர்க்கும்பிடும் அவர். தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி'

என்று இறைவனின் ஆடலை இசைக்கிறார்.

மனிதனின் கண்ணுக்கு விருந்தளிக்கும் நாட்டியமானது அவனின் மென்மையான உணர்வுகளை மீட்டி, அவருள்ளத்தை நிறைவிக்கும் தெய்வீகக்கலையாகும், இது ஆத்மாவை அமைதிப்படுத்தி சிந்தனையை ஒன்றுபடுத்தி, சிறந்த ஆளுமையை விருத்திப் படுத்தி, மனித உணர்வுகளைக் கலையின் பால் இட்டுச்செல்கிறது.

நாட்டியம் பயின்றவர்கள் சிறந்த மன உறுதியும், வாழ்வில் தனித்துவமும், இதயசுத்தியும் உடையவர்களாக விளங்குவதற்கு இக் கலையின்பாலுள்ள தெய்வபக்தியே காரணம் ஆகிறது.

எல்லோரது வாழ்விலும் நாட்டியம் முக்கியமாகப் பார்க்கப்படுவதில்லை. அதனைப் பயின்றவர்கள், பயில்பவர்கள் மட்டுமே இக்கலையின் தெய்வாம்சத்தை உணரலாம்.

'ஆட்டம் வெறும்பேச்சு' என்று கூறுபவர்கள் மத்தியில் இது வெறுமனே ஒரு கூத்து. கலைரசிகர்களும் நாட்டிய ஆர்வலர்களும் இருக்கும் வரையில் இக்கலை மேலும் வளர்ச்சியுறும். இதனை இழிவுபடுத்துவது எந்த ஒரு மனிதனுக்கும் உயர்வானதன்று.

ஜெ.பிறின்சியா

## பிரச்சினையா?

எமது அன்றாட வாழ்விலே நாம் எங்குதான் பிரச்சினை இல்லை என்று அறிந்தோம். வீட்டில் பிரச்சினை? பாடசாலையில் பிரச்சினை? அலுவலகத்தில் பிரச்சினை? என்று சொல்லிக்கொண்டே போகலாமே தவிர பிரச்சினை இல்லாத இடம் என்று சொல்ல எதுவுமே இல்லை. இந்தப் பிரச்சினை எவ்வாறு முளைவிடுகிறது. இதுதான் மிகப்பெரிய வினாவாக உள்ளது.



பிரச்சினை ஒன்று ஏற்பட்டுவிட்டது என்று வைப்போம். சரி தீர்வு காண்பது எப்படி. பிரச்சினைக்குக் காரணம் என்ன? இது ஏன் ஏற்பட்டது என்றால் அதற்கான பதில் எங்கோ மறைந்து போயிருக்கும். ஆனால் சம்மந்தப்படாத காரணங்களும், விசாரணைகளும் தான் நடைபெறும். இப்படியான பிரச்சினைகளை ஆராயமுற்படும் முன் தெளிவாக இருங்கள். தடைகளைச் சுட்டிக்காட்டுங்கள். சம்மந்தப்பட்டவர்களின் தரவுகளையும் நேர்மையாக பகிர்ந்து கொள்ளுங்கள். உண்மையான பிரச்சினையை குறிப்பிடுங்கள். பிரச்சினைக்கான தீர்வு ஓரளவு உங்களுக்கு வெற்றி தரும். இதைவிட்டுவிட்டு பிரச்சினை பிரச்சினை என்று மூளையைக் குழப்பி நீங்கள் பிரச்சினைக்கு ஆளாகிவிடாதீர்கள்.

ஒரே அலுவலகம் என்று வைப்போம் அங்கே ஒருவன் தனிமையிலே சிந்தித்துக்கொண்டிருப்பான். இன்னொருவர் அவரிடம் சென்று என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்? மனசு நல்லாயில்லையா? என்று கேட்டதும் சரி இந்தக் கேள்வியே ஒரு பிரச்சினைக்கான கேள்வி. இது பிழையல்ல என்றாலும் இதனையே பிரச்சினையாக எடுத்துக் கொண்டுவிடும் மனப்பான்மை உடையோரும் இருப்பார்கள் அல்லவா? அந்த வர்க்கத்தில் இங்கு சிந்தித்துக்கொண்டிருந்ததை விட்டுவிட்டு கேட்டதை ஒரு பிரச்சினையாக எடுத்துத் தன்னைக் குழப்பி தான் தான் பிரச்சினைக்கானவர் போல் தன்னை மாற்றுவார். இதோ பாருங்கள் அதற்காக உங்களிடம் ஏன் ஒரு மாதிரி இருக் கிறாய்? என்றால் அதைப் பிரச்சினையாக எடுக்காதீர்கள் இப்படித்தான் சாதாரண ஒரு விடயம் கூட பிரச்சினையாக தோற்றமளிப்பது வழமை. ஒரு சிறு காரியம் தவறாக நடந்துவிட்டால் அதைத் தீர்க்கவேண்டிய இடத்திற்கு கூறாமல். எமக்குள்ளே வைத்து தேவையற்றவர்களுடன் பகிர்வதால் தான் பிரச்சினை பூகம்பமாகி வெடிக்கிறது. எனவே பிரச்சினை பிரச்சினை என்று இந்தக் கூண்டில் அடைபடாதீர்கள். பிரச்சினையை சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து தீர்வைக் காணுங்கள்.

மற்றவர்களிடம் காணும் போது மன்னிக்கமுடியாத அருவருக்கத்தக்க தீய பண்பு, சுயநலன். - ஹென்ரி வார்ட்பீச்சர்

# இலக்கியப் பகிர்வு

"*செயல்திறன* அரங்க இயக்கம் என்னும் அமைப்பு "கூத்தரங்கம்" இதழினை வெளியிட்டுள்ளது. நாடக அரங்கு தொடர்பாக வெளிவந்த பல வெளியீடு களில் அண்மைய வரவாக இது அமைந்துள்ளது.



"தெரிதல்" என்னும் கலை இலக்கிய சிற்றிதழ் ஒன்று அண்மையில் எட்டுப்பக்கங்களில் வெளியாகியது. அதனை ஒத்ததாக இந்த வெளியீடு அமைந்துள்ளது. பன்னிரண்டு பக்கங்களில் இது வெளியாகியமையால் பல விடயங்கள் விரிவாக அமையவில்லை.

"தனிமையில் ஒரு நாடகக் கலைஞர்" என்ற தலைப்பில் "அரசையா" அவர்கள் தொடர்பான பேட்டி/கட்டுரை அமைந்துள்ளது. ஒரு மாபெரும் நாடகக்கலைஞரின் பட்டறிவுகளை ஓரளவுக்கேனும் அந்தக் கட்டுரை/பேட்டி வெளிப்படுத்தியிருக்கவேண்டும். ஆனால் பேட்டிக்கு முன்னால்போகும் குறிப்புப்போல அது அமைந்துள்ளது. தனிமையில் ஒரு நாடகக் கலைஞன் என்னும் தலைப்பு அநாதரவாய் இருப்பது போல உள்ளது.

ஆனாலும் கைக்கடக்கமான அமைப்பில் மிகக் குறைந்த விலையில் இத்தகைய வெளியீடுகளைக் கொண்டுவரும் போது இவ்வாறான சங்கடங்களைத் தவிர்க்கமுடியாதுதான்.

"வளமான அரங்கப் பண்பாட்டு உருவாக்கத்திற்காக உழைப்போம்" என்ற மகுட வாக்கியத்தினைக்கொண்ட செயல்திறன் அரங்க இயக்கம் கூத்தரங்கம் மூலமாகத் தனது நோக்கத்தினை வெளிப்படுத்துகின்றது.

"பல்வேறு அரங்க வடிவங்களின் உயிர்ப்பினை பேணுவதனூடாகவே வளமான அரங்கப்பண்பாட்டை உருவாக்கமுடியும் என்று நம்புகின்றோம். அதற்கு அரங்கச் செயற்பாடுகள் தொடர்பான தகவல் பரிமாற்றம் மிக அவசியம் அதனூடாகவே ஆரோக்கியமான முன்மொழிவுகள் கிடைக்கும்"

"இதற்காக நீண்ட நாட்கள் முயற்சித்து இந்தத் தகவல் பரிமாற்ற ஏட்டினை வெளிக்கொணர்கிறோம். இதனைத்தொடர்ந்து செயல்முனைப்புடன் இயக்குவதற்கு ஒவ்வொரு அரங்கவியலாளர்களினதும் ஒத்துழைப்பு மிக அவசியம்"

என கூத்தரங்கம் வெளிப்படுத்துகின்றது. இந்த இதழ்விரிவும் ஆழமும் பெற்றுமேலும் சிறப்பாக வெளிவர இந்த ஒத்துழைப்பு மிகமிக அவசியமானது.

சமகால யாழ்ப்பாணச் சூழல் தொலைக்காட்சி மாயைகளின் பின்னால் வலுவோடு இழுக்கப்படும் சூழ்நிலையில் அறிவார்ந்த செம்மையான முயற்சிகளும் அதற்குப்பின்னால் நிற்கும் வீரியமுள்ள கலை இலக்கிய நாடகக் கலைஞர்கள் பல சவால்களை எதிர்நோக்கவேண்டியுள்ளனர்.

மனம் சோர்ந்து போகாத இத்தகைய முயற்சியாளர்களின் செயற்பாட்டினால்தான் தற்போது யாழ்ப்பாணத்தில் ஓரளவாவது கலை இலக்கிய நாடக முயற்சிகள் உயிர்வாழ்கின்றதாகத் தோன்றுகின்றது.


அந்தவகையில் "கூத்தரங்கம்" இதழின் ஆசிரியர் குழுவாக இயங்கும் தே.தேவானந்த், அ.விஜயநாதன், கு.லக்ஷ்மணன், க.இ.கமலநாதன் போன்றோர் ஆர்வம்



## கூத்தரங்கம்

உள்ள இளையதலைமுறையினர். அவர்கள் முயற்சி வெற்றிபெறவேண்டும்.

"எமது இருப்பிடங்களையும் எமது தேசத்தின் வளங்களையும் எமது கைக்குள்


தெரிதல்
தமிழரே தமிழை ஒதுக்கலாமா?
2

நாம் பெறாதவரையில் எமக்கு உலைவைக்க இன்னொருத்தர் இருக்கும் நிலைமாறிவிடாது" என முடக்கம் நாடகம் தொடர்பாக அலசப்பட்ட அலசலில் குறிப்பிடப்பட்டதும் கவனத்திற்குரியது.

### தெரிதல் - 02

தெரிதல் இரண்டாவது இதழ் மாசி - பங்குனி இதழாக வெளிவந்துள்ளது. தெரிதல் முதல் இதழுக்கு நல்ல வரவேற்பு. ஆயிரம் பிரதிகள் ஐந்து நாட்களில் முடிந்துவிட்டதில் மேலும் ஐநூறு பிரதிகள் அச்சிட்டு அவையும் விநியோகிக்கப்பட்டன" என்ற செய்தியுடன் ஆசிரியர் தலையங்கம் அமைந்துள்ளது.

"எமது பிரதேசத்தில் கலை இலக்கிய அறிவியல் வெளியீடுகளின் பரவுதலிற்கான செயற்பாடுகள் இளையதலைமுறையினரை மையப்படுத்தி அசைவியக்கம் பெறத்தொடங்கியிருப்பது ஆரோக்கியமானது." எனமேலும் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்படுவது முக்கியத்துவம் பெறுகின்றது.

உண்மையில் இளைய தலைமுறையினர் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதும், இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் ஈர்க்கப்படுவதும் அவசியமானது.

"மூத்தவர்களும் பொறுப்புடன் நடந்து வழிகாட்ட வேண்டும்." எனவும் ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தப்படுகின்றது. ஆசிரியர் அ.யேசுராசா அதனையே செய்கின்றார் என்பது நிறைவினைத் தருகின்றது.

தெரிதலில் குறிப்பிடப்படும் இன்னுமொரு விடயம் "தமிழரே தமிழை ஒதுக்கலாமா?" என்ற பிரதான தலைப்புவிடயம். தேசிய உணர்வுடனும் தாய்மொழிப்பற்றுடனும் நடைமுறையில் எங்கும் தமிழிற்கு முக்கியத்துவம் கொடுக்க நாம் முயலவேண்டும். என இடித்துரைக்கப்படுவது கவனத்திற்குரியது.

தகவற்களத்தில் பல பயனுள்ள தகவல்கள் உள்ளன. மேலும் சினிமா தொடர்பான இரண்டு விடயங்களும் கணனி ஓவியக் காட்சி என்ற சிறு கட்டுரையும், அமெரிக்க இலக்கியவாதி ஸ்ரீன்பெக் அவர்களின் சிவப்புக் குதிரைக்குட்டி குறுநாவல் தொடர்பான குறிப்பும் என சாரமுள்ள விடயங்கள் பல.

ஒவ்வொரு கலை வடிவத்திற்கும தனித்தன்மையான அடிப்படைப்பண்புகள் இருக்கின்றன. அவ்வாறே திரைப்படத்திற்கும் இருக்கவேண்டிய முக்கியமான பண்பு காட்சிப்படுத்தும் பண்பு என "நதிக்கரையினிலே சினிமா தொடர்பாக கடலோடி குறிப்பிடுவதும்.

ஜனரஞ்சக எழுத்தாளரான தேவிபாலா சம்பந்தமாக மூன்றாந்தரச் சினிமாப் பாடல் வரிகளையும் அலாதிபட்டு அலையும் வாசகப் பெருமக்களுக்கு கிளுகிளுப்பூட்டக் கூடிய விடயங்களையும் தமது கதைத் தயாரிப்புக்களுக்கு மகுடம் சூட்டுவதில் இவர்தனக்குத் தானே நிகரானவர். எடுத்துக் காட்டாக இவரது கதைத் தயாரிப்புக்களின் சில தலைப்புகளை நோக்குவோம். "கிசுகிசு",'வயதானதோழி", "வாசமில்லா மலரிது", "நான்தான்கொலை செய்தேன்", "நாளைக்கு 419", "தாள் திறவாய்" என ச.ராகவன் குறிப்பிடுவதும் சிந்தனைக்குரியன.

மொத்தத்தில் கே.கணேஷ் அவர்கள் தெரிவித்த பின்னரும் கருத்து ஏற்புடையதே.

"தெரிதல்" கச்சிதமாக பலதும் அடங்கிய சிற்றேடாக விளங்குகிறது. போர் சூழ்ந்த நிலக்களத்தில் அமைந்த அச்சுப் பொறி சாதனங்கள் உதவியுடன் கடுகைத்துளைத்தேழ் கடலைப் புகுத்தியுள்ளமை பெருஞ்சாதனையே.

**இணுவையூர்**
**சிதம்பரச்செந்திநாதன்**




## எப்படி எழுதினாரோ

**"நேற்றையமலர்.... இன்றைய மலர்... இனிமலரப்போகும் கோடிக்கணக்கிலான பூக்கள் நேற்றைய குழந்தை, இன்றைய குழந்தை... இனிப்பிறக்கப்போகும் கோடிக்கணக்கிலான குழந்தைகள் எல்லாம் ஆத்மீக அடி நாதத்துள் ஒன்றினுள் ஒன்றாய் நிற்கும் உயிர்ப்பூக்களே.... பிறகு என்னுள் நீ...உன்னுள் நான்"**

-நண்பர் ஒருவரின்ஓட்டோகிராப்"பில் அமரர் முனியப்பதாசன் எழுதியது.

**வாழ்க்கையில் முதல்முதலாய் பார்த்த உடனேயே சிலபேர் மேல் இனம் தெரியாத காதல் ஏற்பட்டுவிடுகிறது. வெறுப்பும்அப்படித்தான். போகப் போக அவர்களுடன் நெருக்கம் ஆகுகையில் ஆரம்பத்தில் கண்ட உணர்வு ஊர்ஜிதமாகிறது. அவர்களுடைய குணங்கள் குற்றங்களுக்கும் இந்த உணர்வுக்கும் சம்மந்தம் கிடையாது "என்னமோப்பா எனக்குத் தெரியவில்லை... எனக்கு அவளைப்பிடிச்சுப் போச்சு" என்று சொல்கிறோமல்லவா? இது நட்பு, காவிய காலத்திலிருந்தே இந்த உறவு இயங்கிக்கொண்டிருக்கிறது. காலம் முற்ற முற்ற இந்த உறவின் உக்ரம் நீர்த்துப் போய் விடுகிறது ஆனாலும் இன்னும் அழிந்து போய்விடவில்லை இது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நேர்கையில் அதன் சிலிர்ப்பை மறுக்கமுடியவில்லை.**

-சௌந்தர்ய....என்ற தொடரில் லா.ச.ராமாமிர்தம்.

**நாட்டில் நீ**
**நம் தாய் மண்ணில்**
**பார்க்கிறாய்**
**பனையை**
**வெளியில் நான்**
**பனையில் பார்க்கிறேன்**
**என் தாய் மண்ணை....**

-உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன்.

**அழகற்றுப் போயிருக்கிறது**
**இன்றைய நிலவு**
**அதை நேற்றைய நிலவுடன்**
**ஒப்பிடமுடியாதிருக்கிறேன்**
**நேற்றிருந்த நிலவு**
**இன்றைக்கு ஏன் இல்லை**
**என்னிடம் கேட்டாள்**
**முந்தைய நாள் நிலவு**
**அழகாய் இருந்தது**
**இல்லையாப்பா"**
**நான் ஆமெனத் தலையசைத்தபடி**
**நேற்றிருந்த நிலவை**
**ஞாபகப்படுத்த முயல்கிறேன்.**

"நினைவுள் மீள்தல்"- கவிதைத்தொகுப்பிலிருந்து தானா விஸ்னுவின் ஒருகவிதை.

**என்வாழ்க்கையைச் சொல்ல எனக்கு உரிமை உண்டு. புனைவுகள் இன்றி உண்மையைச்சொல்லுதல் தர்மமானது என்பது என்மதம் என்னைப்பற்றிய உண்மைகளைச் சொல்லும் போது பிறரைப்பற்றிய உண்மைகளையும் பிரஸ்தாபித்தல் தவிர்க இயலாததாகின்றது. போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் அப்பாற்பட்ட நிதானித்தல்! இத்தகைய நிதானமே உண்மைகளைத் துலக்கும் இருப்பினும் இந்த உண்மைகள் என் தரிசனத்தில் உள்வாங்கப்பட்டவை. எனவே சாட்சியமாகவும் அமைகின்றன.**

வரலாற்றில் வாழ்தல் நூலில் எஸ்.பொன்னுத்துரை.

**நேற்று நேற்று**
**என்று இறந்தயுகங்களில்**
**என்றோ ஒரு நாள் அவிந்த**
**நட்சத்திரக் கோலங்கள் ஒளி வேகத்தின்**
**மந்தகதி தரும் நிதர்சனத்தில்**
**இன்றும் இருக்கின்றனர்.**
**காலமே வெளி.**

-கவிஞர் பிரமீன் எழுதிய ஒரு கவிதையின் சிலவரிகள்

**பொறுக்கி.**

## படித்ததில் பிடித்தது

### கமறூண்ஸ் நாட்டுக் கவிதை

*பாலைவனத்தின் மேலால்*
*பறந்து சென்ற*
*நோயுற்ற பறவை*
*தன் சோகங்களைக்*
*கீதமாக்கி*
*காற்றினூடாக மிதக்கவிட்டது.*

*எவ்வளவு தாழ்வாய்*
*அது பறக்கிறது...!*
*அதனுடைய பாடல்*
*மனதை*
*எப்படித் தொடுகிறது...!*
*என்றெல்லாம்*
*நீரெடுத்துக் கொண்டிருந்தோர்*
*சொல்லிக் கொண்டார்கள்*

*இறக்கை முளைத்த*
*நம்பிக்கைகள்*
*வெறும் கனவாகிப் போயின*
*கறுப்பு முக்காடு கொண்டு*
*எம் தலைவிதிக்கு*
*முக மூடியிட்டன.*

*நகரங்களிலே*
*அதே செபங்களை*
*சொன்னது போல்*
*கிராமங்களிலே*
*மூதாதையர்*
*அருள் வேண்டினோம்.*

*எமது விரக்திகளை*
*எமது வாழ்வுகளை*
*எமது மாள்வுகளை*
*நாளையினதும்*
*நாளைக்கு*
*அடுத்த நாளினதும்*
*இளம் நாட்டுக்கு*
*மாற்றுகின்றோம்.*
*இரத்தம் கொடுப்போரின்*
*அன்பை ஒத்தவற்றின்*
*புண்ணியங்களைப் பார்த்து*
*எங்களை நாங்களே*
*ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம்.*

| | |
|---|---|
| ஆங்கிலத்தில் :- | **மம்பெலா சொனே டிப்போக்கோ. கமறூண்ஸ** |
| தமிழில் :- | **வின்சென்ற்புளோறன்ஸ்,** |
| மூலம் :- | Modern Poetry From Africa |

தெளிவானது,அறிவு பொதிந்தது;தெளிவற்றது, அறிவு அற்றது. - யூரிப்பிடீஸ்

# விண்ணப்பம் கோரல்

ஈழநாதம் நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. உதவி ஆசிரியர்**

**கல்வித்தகைமை:-**

I. பல்கலைக்கழகப்பட்டதாரி

**அல்லது**

II. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியுடன் ஊடகத்துறையில் ஆர்வமுடையோர்

**02. அலுவலக செய்தியாளர்**

**கல்வித்தகைமை:-**

I. க.பொ.த உயர்தரத்தில் சித்தி.

**03. ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர்**

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு ஒலிப்பதிவு நாடாவில் இருந்தும் பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்தும் மொழிபெயர்க்கும் ஆற்றல்.

**04. ஒப்புநோக்குநர்**

**கல்வித்தகைமை:-**

I. க.பொ.த. உயர்தரத்தில் தமிழ் உட்பட 3 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

II. ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் அல்லது முன்னனுபவமுள்ளவர்கள்.

**நேர்முகத் தேர்வு:-** 10.04.2004, சனிக்கிழமை 10.00 மணிக்கு

**இடம்** :- முதன்மைச்சாலை கிளிநொச்சி, ஈழநாதம் பணிமனை.

குறிப்பு:

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். விண்ணப்பதாரிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் மேற்குறிப்பிட்ட திகதியில் சமுகம் தரவும்.

(இ)

பொதுமுகாமையாளர்.
ஈழநாதம்.



# கப்டன் அருணின்

## 15 ஆம் ஆண்டின் நினைவில்...
## சிறகெடுத்துப் பறந்த சிட்டுக் குருவியின்
## உறவுகளின் கண்ணீர் ஊற்று.



பிறப்பு 18 - 10 - 1960

வீரச்சாவு 09 - 04 - 1988

# கப்டன் அருண்

**(ஏரம்பு பாலச்சந்திரன்)**

1ம் வட்டாரம் புங்குடுதீவு.

உன் நினைவில் மெழுகாகிக் கரைந்து நாங்கள்
உருகுகின்றோம்; ஐயாவுன் அழகை யெண்ணி
கண்களிலே நீர் வழியக் கலங்குகின்றோம்
காலமதின் பணியேற்று எழுந்த வீரா!
அந்நியரின் படைக்கெதிராய் புலியாய் நின்ற
அருணென்ற பெருந்தவமே! நெஞ்சில் வாழும்
பொன்மகனே! உனைப்பிரிந்து காலம் பாய்ந்து
போகிறது; ஆயினுமெம் நினைவில் வாழ்வாய்
விடுதலைக்காய் நிமிர்ந்திட்ட விண்ணே! வேங்கை
வீரருடன் இணைந்திட்ட மண்ணின் வேரே!
படுகளங்கள் பலகண்ட வீரத்தேரே!
பாரதத்துப் படைக்கெதிராய் நின்ற தேவே!
நடுகல்லாய் நாம் வணங்கும் தெய்வமாகி
நாயகனின் வழித்தடத்தில் நடந்த வீரா!
அடமகனே! அழமுடியாத்துயரத்தோடு
அழைக்கின்றோம் அருகினிலே மகனே வாடா.

1988 ஆம் ஆண்டு சுண்டிக்குளம் பகுதியில் இந்தியப் படைகளின் சுற்றி வளைப்பின் போது கைக்குண்டினை வெடிக்கவைத்து இவரோடு வீரச்சாவடைந்த கப்டன் பிரசன்னா(அமரசேகரம்-குணசேகரம் திருநகர், கிளிநொச்சி) அவரையும், அனைத்து மாவீரர் வீராங்கனைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.


**உன்நினைவுடன்**

அப்பா, அம்மா, அக்காமார், அத்தான்மார், அண்ணா, அண்ணி, மருமக்கள்மார், மகன், மகள், மாமிமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணன்மார், அக்காமார், தங்கைமார், தம்பிமார், உற்றார் உறவினர், போராளிகள், நண்பர்கள்.

**37, அருணோதயம், புங்குடுதீவு-01**

(4423)


# படத்திற்கு மெருகூட்டுங்கள் -63



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் -63

..............................................................
..............................................................
..............................................................
..............................................................

பெயர் : ..............................................................
முகவரி : ..............................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# படத்திற்கு மெருகூட்டுங்கள் -62



செ.மதன்
தர்மபுரம்

## பரிசுக்குரிய வரிகள்

பெண்ணே! பறிக்கப்பட்ட உரிமைகளை எண்ணி
உன் விழிகளை மூடாதே
விழிகளை திறந்து நீ வீரத்துடன்
போராடு- வெற்றி உனக்கே.

## பாராட்டுக்குரிய வரிகள்

உன்னதமான ஓர் தலைவன்-உன்
அருகில் இருக்கும்போது கலக்கமாய்
நீ கண்மூடாமல்-விழிகளை
திறந்து வீரத்துடன் எழுவாயாக

பா.செந்தீபன்
431/11 யுனிற்தர்மபுரம்

கண்முன்னே நடக்கும் கயவரின் கொடுமையை
கண்களால் பார்க்காமல் மூடிக்கொண்டாயோ
கண்ணான கண்மணியே கவலையை விடு
கரிகாலன் காலமதில் களையப்படும் கொடுமையை

சு.சிவாஜினி
புதுக்குடியிருப்பு

என் கல்வியை பறித்தவர்கள்- என்னுடைய
கண்ணையும் பறித்திருக்கலாம் தானே
என்று எண்ணி- கண்மணியே-நீ
கண் மூடுகின்றாயோ

ஜெயதீபன்
தர்மபுரம்

உன் வாழ்வில் இருள் சூழ்ந்ததுவோ
உன் வாழ்வை உருக்குலைத்தவர் யார்?
எம் சந்ததிகள் துயர் தீர்த்திடவே-உன்
சோதரிகள் தலைவன் வழியில் களத்தில்.

ம.கலைநிலா
'புதுக்குடியிருப்பு

வாழ்க்கையில் இழந்து விட்டதை எண்ணியா
வருந்துகிறாய் தங்கை-அல்லது,
வரப்போகும் தேர்தல் முடிவு தமிழரின்
வாழ்வை எப்படி தீர்மானிக்கப்போகிறதென்றா ஏங்குகிறாய்

வரதா
புதுக்குடியிருப்பு

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.

புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

சுதந்திரமே, உன் பெயரில் இழைக்கப்படும் குற்றங்களும் கொடுமைகளும் தான் எத்தனையோ! - மதாம் ரோலந்த்

# புதுவருட கணனிக்கொண்டாட்டம்

*SALE SALE SALE SALE SALE SALE SALE*

இத்தரணியில் பிறக்கும் சித்திரைப்புத்தாண்டில் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்.

**COMPUTER P4**
**51,500/=**
25.03.2004-14.04.2004
வரை மட்டுமே!

| | |
|---|---|
| Mother Board | ASUS |
| Processor | Intel Pentium 2.0 Ghz |
| HDD | 40 GB-7200 |
| RAM | 128DDR |
| CDD | ASUS 52X |
| FDD | Sony 1.44MB |
| VGA | 32MB-3D |
| Sound | AC 97 |
| Monitor | 15'' LG |
| Keyboard | WIN XP-A4 TECH |
| Mouse | Branded |
| Speaker | Branded |



சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

யப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த TOSHIBA உற்பத்திகளுக்கான வடஇலங்கையின் ஏக முகவர்.

(சி-9507)

## IIS Office Automation

No.360/3, Main Street,Jaffna. T.P.No- 222 7676/4590190

---


விவசாயப்பெருமக்களுக்கு சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்!

செல்வம் செழிக்கக்கூடிய
வளமான விளைச்சலுக்கு
இலங்கையில் முன்னணியில் திகழும்

## எட்க்ரோ
கிரீவ்ஸ்
**MK 12/ MK 25**

### விவசாய நீர் இறைக்கும் இயந்திரம்

புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு. எட்க்ரோ நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கி வரக்கூடிய சலுகைகள்.
ஒருவருடத்திற்கான உத்தரவாத சான்றிதழ். பலம் மிக்கதும் நீண்டகாலம் உழைக்கக் கூடியதும். அதிக தண்ணீரை பெற்றுக் கொள்ளக்கூடிய வல்லமை. சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர் இறைக்க வல்லது. எரிபொருளை சேமிக்க வல்லது. நாடளாவிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை. தேவையான அளவு உதிரிப்பாகங்கள்.



EDNA GROUP

**எட்னா அப்ளயன்ஸஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**
160, பௌத்தாலோக மாவத்தை கொழும்பு 04.
தொலைபேசி. 508961 - 2, 502291 - 3, 592135 - 6
தொலைநகல். 594558, 500909
தொடர்புகளுக்கு: மயுரா - 0777-418821
இபுனு - 0777-418817

SM Graphics (சி-9509)

யாழ்ப்பாணத்தில்:
## ஆர்க் என்ரப்பிறைசஸ்
150,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம். ☎ 021-2222052

---

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**யாழ் நகரில்... அழகிய பூங்கனிச்சோலைகளின் மத்தியில்**



## மிலேனியம்
உல்லாசப்பயணிகள் விடுதி
உங்களை
அழைக்கின்றது.

நவீன வசதிகளுடன் கூடிய முற்றிலும் குளிரூட்டப்பட்ட அறைகள்

உங்கள் தொடர்புகளுக்கு:
மிலேனியம் உல்லாசப்பயணிகள் விடுதி,
76/60, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
T.P:021-222 2810

(சி-9508)

---

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தாரண சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்!



*கலையழகு மிளிரும் தங்க வைர நகைகளுக்கு*

## விக்னேஸ்வரா நகைப்பூங்கா

205/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0214590022

10B,34D,கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா.
தொ.பே: 024-222 1910 ,024-222 1857

457, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-06
தொ.பே: 0112-559535



(சி-9510)

---

**அனைவருக்கும் அன்புகலந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**



வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
பட்டுச்சாறி வகைகள் ஸ்கேட் அன் பிளவுஸ்
கவுன் வகைகள்சல்வார் கமீஸ்வகைகள்
ஆகியவற்றை ஒரேஇடத்தில்
பெற்றுக்கொள்ள

DRESS POINT


## ட்றெஸ் பொயின்ட்

இல:-23, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 0777- 745511

SM Graphics (சி-9511)

---

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!



## Sanshigaa
## JEWEL HOUSE

**சன்சிகா நகையகம்** ஸன்ஷிகா ஜுவெல்ஹவுஸ்

சிறியவர் முதல் பெரியோர் வரை
யாவரும் விரும்பி அணியும் தங்க
ஆபரணங்களை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்



114, BAZAAR STREET,
VAVUNIYA
TEL: 024-2224028

யாழ் கணேசா நகையகம்
124,செட்டியார் தெரு,
கொழும்பு -11

(சி-9512) SM Graphics

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.